janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 அக்டோபர் 30 - நவம்பர் 05 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 30




இவர்களா தேச பக்தர்கள்...? ப 02



சாப்ளின் மீண்டும் பிறக்க வேண்டும்...? ப 03



பாரதி ஆய்வுகளின் பிதாமகர் தொ.மு.சி. ப 15



## பாலன் இல்லத்தில்

# தியாக சீலர் தோழர் ப.மாணிக்கம் நூற்றாண்டு நிறைவு நிகழ்ச்சி

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில முன்னாள் செயலாளரும், விடுதலைப் போராட்ட வீரருமான காலம் சென்ற தோழர். ப.மாணிக்கம் அவர்களின் நூறாவது பிறந்த நூற்றாண்டு நிறைவு நிகழ்ச்சி அக்.26 அன்று தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றது.**




இந்நிகழ்ச்சியை முன்னிட்டு, கம்யூனிஸ்ட் கட்சியின் அனைத்து அலுவலகங்களிலும், பொது இடங்களிலும் ப. மாணிக்கம் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது .

அக்.26 அன்று காலை 10.00 மணி அளவில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில தலைமை அலுவலகமான பாலன் இல்லத்திலும், திருவுருவப்படத்திற்கு மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

நிகழ்ச்சிக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் தலைமை தாங்கினார்.

விடுதலைப் போராட்ட வீரர் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மூத்தத் தலைவர் இரா.நல்லகண்ணு, ப.மாணிக்கம் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

ப.மாணிக்கம் அவர்களை பற்றிய தனது நினைவுகளை பகிர்ந்து கொண்டார்.

“கும்பகோணம் அருகில் உள்ள கிராமத்தில் பிறந்த ப.மாணிக்கம் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பயின்றார்.

தோழர் கே.பாலதண்டாயுதம், மார்க்சிய சிந்தனையாளர் சுப்ரமணிய சர்மா போன்றோரின் தொடர்பால் மார்க்சியத்தின்பால் ஈர்க்கப்பட்டார்.

இடதுசாரி சிந்தனைகளோடு பல்கலைக் கழகத்தில் மாணவர் மன்றம் செயல்பட்டது. அவரது மாணவர்மன்ற செயல்பாட்டால் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்.

புதுச்சேரியில் நடைபெற்ற போராட்டங்கள் மற்றும் வ.சுப்பையா ஆகியோரின் போராட்டங்கள் ப.மாணிக்கம் அவர்களின் சிந்தனைகளில் தாக்கத்தை ஏற்படுத்தின.

பல்வேறு மாணவர் இளைஞர் போராட்டங்களில் பங்கேற்றார். மாணவர் பெருமன்றத்தின் பொதுச் செயலாளராகவும் செயல்பட்டுள்ளார்.

மார்க்சிய கொள்கை வழி நின்று உறுதியாக செயல்பட்டார்.

மதுரை மற்றும் நெல்லை சதி வழக்குகளில் 5 ஆண்டுகள் சிறை தண்டனை பெற்றார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்ட பொழுது 2 ஆண்டுகள் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டார்.

கட்சியின் நெல்லை மாவட்டச் செயலாளராக செயல்பட்ட அவர், மாநிலச் செயலாளராக 15 ஆண்டுகள் செயல்பட்டுள்ளார்.

கட்சியின் தேசிய நிர்வாகக்குழு உறுப்பினராகவும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் சிறப்பாக செயல்பட்டுள்ளார். எளிமையான வாழ்வை மேற்கொண்டார்.

அவரது வாழ்வு இளைஞர்களுக்கும், பொதுவாழ்வில் ஈடுபடுவோருக்கும் முன்னுதாரணமாக திகழும்” என இரா.நல்லகண்ணு, ப.மாணிக்கம் குறித்த தனது நினைவுகளை பகிர்ந்து கொண்டார்.

இந்நிகழ்வில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் வகிதா நிஜாம், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் டாக்டர் ஜி. ஆர். இரவீந்திரநாத், தென்சென்னை மாவட்டச் செயலாளர் சிவா, மத்திய சென்னை மாவட்ட செயலாளர் கருணாநிதி, மாநிலக்குழு உறுப்பினர்கள் டாக்டர் ஏ.ஆர். சாந்தி, முரளி, த.லெனின், அலுவலகச் செயலாளர் ரகுநாதன் மற்றும் அலுவலக ஊழியர்கள் கலந்து கொண்டனர்.




விஜயவாடாவில் நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாட்டில் தமிழக பிரதிநிதிகளின் சார்பாக, டி.எம்.மூர்த்தி பேசுகிறார்.

## 2023ம் ஆண்டிற்கான காலண்டர் மற்றும் சிறப்பிதழ் தயாராகிறது...

காலண்டர் மற்றும் சிறப்பிதழுக்கான விளம்பரங்கள் நவ.25 ஆம் தேதிக்குள் ஜனசக்திக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

காலண்டர் விளம்பரம், விற்பனை தேவை குறித்து 50% முன்பணம் செலுத்தி தேவையான பிரதிகளை நவ.25 ஆம் தேதிக்குள் உறுதி செய்ய வேண்டும்.

கடந்த ஆண்டு விளம்பரம் மற்றும் விற்பனை பாக்கி வைத்துள்ள மாவட்டங்கள் பாக்கியை உடனடியாக செலுத்திய பின்பே இந்த ஆண்டிற்கான பிரதிகளுக்கு முன் பணம் செலுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| காலண்டர் விளம்பரம் | - | ரூ.20,000 |
| காலண்டர் பிரதி விலை | - | ரூ.15.00 |
| சிறப்பிதழ் | - | ரூ.15.00 |

சிறப்பிதழ் விளம்பரத்திற்கான படிவம் அனுப்பி வைக்கப்படும்.

– ஆசிரியர் குழு

கட்சிக் கடிதம்

# இவர்களா தேசபக்தர்கள்...?






பேரன்புமிக்க தோழர்களே!

**திரு நரேந்திர மோடியின் தலைமையிலான ஒன்றிய அரசு 2024 வரை அதிகார பீடத்தில் அமர்ந்திருக்கும். இடைப்பட்ட காலம் சுருங்கி வருகின்றது.**

இக்காலகட்டத்தில் இதுநாள்வரை மேற்கொண்ட அநீதிகள் போதுமானதல்ல என்று கருதி, மேலும் அநீதிகளை இழைத்திட தொடர்ந்து பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

மதத்தின் பெயரால் நாடு முழுவதும் ஒருவிதமான பதற்றத்தை உருவாக்கி, இந்து – இஸ்லாம் – கிறிஸ்து – சீக்கியர் – பௌத்தர் என வேறுபடுத்தி ஆங்காங்கே மோதலை உருவாக்கி, சகோதரர்களாய் வாழ்ந்து வரும் மக்களிடத்தில் பிளவை, மோதலை உருவாக்குவதன் மூலமாக தங்களின் குறுகிய அரசியல் நோக்கத்தை அரங்கேற்றி வருகின்றனர்.

ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே உணவு, ஒரே உடை, ஒரே மதம் என்றவர்கள் தற்போது அதிகாரப்பூர்வமாக ஒரே மொழி என்று கூக்குரல் எழுப்புகின்றனர்.

எந்த மனிதரும் இழிவானவர் அல்ல. அனைவரும் மதிக்கப்பட வேண்டியவர்கள் தான் என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை.

ஆனால், எல்லோரும் சமம் என்பதற்கு மாறாக, ஒரு சாரார் மற்றொரு பகுதி மக்கள் மீது ஆதிக்கம் செலுத்திட முனைந்தால் அதனை எவ்வாறு ஏற்க இயலும்? அதனை எதிர்த்துத்தான் ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டங்கள் நடந்தன; நடந்துவருகின்றன.

ஆதிக்கங்களில் பலவகைப்பட்ட ஆதிக்கங்கள் உண்டு.

மனித ஆதிக்கம், பொருளாதார ஆதிக்கம், நிலப்பிரபுத்துவ ஆதிக்கம், அரசு ஆதிக்கம், இன ஆதிக்கம், ஆண் ஆதிக்கம் என எல்லா இடங்களிலும் ஆதிக்கம் உண்டு. அதனை எதிர்த்து ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டங்களும் உண்டு.

இத்தகைய ஆதிக்கங்களில் ஒன்று மொழி ஆதிக்கம். ஒவ்வொருவரும் எத்தகைய உயர் நிலையை அடைந்த போதும், அவருக்கு உயர்ந்தவர் அவரை பத்து மாதம் சுமந்து பெற்ற தாயே உயர்வானவர்.

தனக்கு கீழாக பல்லாயிரம் பேர் பணிகள் செய்யலாம், அத்தகையவருக்கு இவர் தலைவராக, தலைமை தாங்குபவராக, எஜமானராக இருக்கலாம். ஆனால் இத்தகைய செல்வாக்குடைய மனிதருக்கு மேலாக ஒருவர் உண்டெனில் அவர்தான் தாய்.

அத்தகைய தாய் பத்து மாதம் சுமந்தது மட்டுமல்ல, பேணி காத்தது மட்டுமல்ல, வளர்த்து ஆளாக்கி, உயர்நிலைக்கு கொண்டு சென்று ஊரே திரும்பிப் பார்க்கும் நபராக உயர்த்தியது மட்டுமல்ல, இவைகள் எல்லாவற்றைக் காட்டிலும் குழந்தை பிறந்த நாள் முதல் கையிலேந்தி மாறி மாறி முத்தமிட்டு கொஞ்சி குலாவிய போதும், தன் கால்களை நீட்டி மடியில் வைத்து மகிழ்ந்த போதும், தொட்டிலில் இட்டு தாலாட்டிய போதும் தன் உடல் சூட்டோடு இறுக அணைத்து தூங்கச் செல்கிற போதும், சின்னஞ்சிறு சொற்களைச் சொல்லிச் சொல்லி மகிழ்கின்றாளே அது தான் தாய் மொழி.

தாய் படித்தவளா? பட்டம் பெற்றவளா? அல்லது படிக்காத பாமர பெண்ணா? என்பதல்ல.

அவள் படித்தாலும், படிக்கவில்லை என்றாலும் ஏ செல்லமே! தங்கமே! வைரமே! என்று கொஞ்சி மகிழ்வதுடன் அம்மா! அம்மா! என்று திரும்பத் திரும்ப சொல்கின்றாளே!

குழந்தையை மழலை மொழி பேச வைக்கின்றாளே அது தான் அவளது சாதனை. அச்சாதனைதான் தாய்மொழி.

இவை தமிழுக்கு மட்டுமல்ல, தமிழச்சிகளுக்கு மட்டுமல்ல– இவை உலகில் வாழும் அனைத்து தாய்மார்களுக்கும் பொருந்தும்.

அவரவர் மொழியில் தான் குழந்தைகளுக்கு தன் தாய் மொழியை கூறுகின்றார்கள்.

அவரவர் தாய்மொழி அவரவருக்கு உயர்ந்தது. எம்மொழியும் இழி மொழி அல்ல. எல்லா மொழிகளையும் மதிக்கின்றோம்; மதித்தல் வேண்டும்.

ஆனால் ஒரு மொழி மீது மற்றொரு மொழி ஆதிக்கம் செலுத்துவதை அனுமதிக்கக்கூடாது; முடியாது.

அனைத்து மொழிகளையும் மதிக்கவும், போற்றவும், வளர்க்கவும், சம வாய்ப்பு அளிக்கவும், சம நிதிகளை வழங்கவும் கடமைப் பட்டது அரசு.

நாட்டை ஆளும் வாய்ப்பை பெற்ற பாஜக நாட்டு மக்கள் அனைவரையும், அவர்களின் தாய்மொழியினையும் சமமாக பாவிக்க மறுக்கின்றது.

சார்பு நிலை எடுக்கின்றது; பாரபட்சம் காட்டுகின்றது. ஒரு சாராரை அரவணைக்கின்றது; மற்றொரு சாராரை வெறுக்கின்றது. ஒரு பகுதியினரை ஊக்குவிக்கின்றது; மற்றொரு சாராரை அருவருப்பாக பார்க்கின்றது. இத்தகைய அணுகுமுறையை மேற்கொள்ளும் ஒன்றிய அரசை மக்கள் எப்படி ஏற்பார்கள்?

தேசபக்தி குறித்தும், தேச ஒற்றுமை குறித்தும் இடைவிடாத ஆவேச முழக்கமிடும் பிரதமர் மோடி அவர்கள் – தன் சொல்லுக்கும், செயலுக்கும் எவ்வித தொடர்பும் அற்ற முறையில் வெற்று முழக்கத்தை எழுப்புகின்றார்.

மதரீதியாக, சாதிரீதியாக மக்களை பிளவுபடுத்தியவர்கள், இன்று மொழியால் மக்களை பிளவுபடுத்தவும், மோதலையும் திட்டமிட்டு உருவாக்குகின்றார்கள்.

இந்தியா பல மாகாணங்களாக இருந்தன. இவற்றில் பல மொழி பேசக்கூடிய மக்களும் இருந்தனர்.

இவற்றினை மாற்றி மொழிவாரி மாநிலங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்று கோரி, நீண்ட நெடிய போராட்டத்திற்கு பின்னர் மொழிவாரி மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. மொழிக்கு உரிய மதிப்பளிக்கப்பட்டது.

ஆனால் இன்றைய ஆட்சியாளர்கள் இவற்றைப் புறந்தள்ளி, குறிப்பிட்ட மொழிக்கு மட்டுமே உரிய முக்கியத்துவம் அளிக்கப்படும் என்ற முறையில் தங்களின் அதிகாரத்தை செலுத்திட தொடங்கியுள்ளனர்.

இவை போகிற போக்கில் கூறப்படும் குற்றச்சாட்டு அல்ல. பிரதமருக்கு அடுத்த இடத்தில் அதிகாரம் பெற்றவராக விளங்கி வருபவர் ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சரான அமித்ஷா. அத்துடன் அலுவல் மொழி தொடர்பான நாடாளுமன்ற குழுவின் தலைவராகவும் கோலோச்சி வருகின்றார்.

அவரது தலைமையிலான குழு அண்மையில் நாட்டின் குடியரசுத் தலைவரிடம் அளித்திட்ட அறிக்கை வருமாறு:

1. ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம், எய்ம்ஸ் மற்றும் மத்தியப் பல்கலைக்கழகங்களில் ஆங்கிலத்திற்கு மாற்றாக இந்தி மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும்.
2. இந்தியை பொதுமொழியாக்கிடும் வகையில் தொழில்நுட்ப மற்றும் தொழில் நுட்பம் சாராத கல்வி நிறுவனங்கள், கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் உள்ளிட்ட ஒன்றிய அரசின் அனைத்து கல்வி நிறுவனங்களிலும் இந்தி மொழியே பயிற்று மொழியாக ஆக்கப்பட வேண்டும்.
3. இளைஞர்களின் வேலைவாய்ப்பில் கட்டாயத் தேர்வுத்தாள்களில் ஆங்கிலத்தை நீக்கி விட்டு இந்தியை மட்டுமே முதன்மைப்படுத்திட வேண்டும் என்பன உள்ளிட்ட அறிக்கையினை அளித்துள்ளனர்.

அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் 22 மொழிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

அரசியலமைப்பு சட்டத்திற்கு புறம்பாக 22 மொழிகளில் இந்தி மொழிக்கு மட்டுமே முன்னுரிமை, மற்ற தமிழ் உள்ளிட்ட 21 மொழிகள் புறந்தள்ளப்படுவது எந்த வகையில் நியாயமாக இருக்க முடியும்?

இந்தி மொழி திணிப்பு என்று வந்த போதெல்லாம் அதனை எதிர்த்து போராட்டங்கள் நடைபெற்றுள்ளன.

அத்தகைய போராட்டங்களில் குறிப்பாக 1965 ஆம் ஆண்டு நடைபெற்ற போராட்டத்தை எவரும் எளிதில் கடந்து சென்றுவிட முடியாது.

போராட்டத்திற்கு எதிராக மிகக் கடுமையான, கொடூரமான அடக்கு முறைகள் மேற்கொள்ளப்பட்டன.

கைதுகள், தடியடிகள், கண்ணீர் புகை குண்டு வீச்சு என்பதுடன் நில்லாமல், துப்பாக்கி சூடும் நடைபெற்று பலர் உயிரிழந்தனர்.

பல மாணவர்கள் தன் தாய்மொழி காக்க தீக்குளித்து மாண்டனர். பல மாதங்கள் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டன.

இத்தகைய போராட்டம் என்பது இந்தி மொழிக்கு எதிரான போராட்டமல்ல, மாறாக இந்தி மொழி திணிப்பிற்கு எதிராக, மொழி ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டம் என்பதனை கவனத்தில் கொள்ளவேண்டும்.

தமிழ்நாட்டில் போராட்டம் தீவிரமடைந்த நிலையில், அன்று நாட்டின் பிரதமராக இருந்த ஜவகர்லால் நேரு போராட்டத்தை, மக்களின், மாணவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இந்தி பேசாத மாநில மக்கள் விரும்புகிற வரையில் இந்திமொழி திணிக்கப்பட மாட்டாது என்ற வாக்குறுதி அளித்தார்.

அன்றைய பிரதமர் நேருவின் வாக்குறுதிக்கு மாறாக, இன்றைய பிரதமரும், அவரது அமைச்சரவையும் இந்தி மொழிக்கு ஆதரவான சார்பு நிலையை மேற்கொண்டு, மற்ற மொழிகளைப் புறந்தள்ளும் ஆணவப் போக்கை கையாள்வது நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாட்டுக்கு எதிரான திட்டமிட்ட செயலாகும்.

ஒன்றிய அரசின் இத்தகைய செயல் மொழியின் பெயரால் நாட்டை பிளவுபடுத்துகின்ற தேச விரோத

தொடர்ச்சி 4ம் பக்கம்



மு.வீரபாண்டியன்

# சாப்ளின் மீண்டும் பிறக்க வேண்டும்...?



ரஷ்யா – உக்ரைன் போர் சூழலில், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியின் வார்த்தைகள் இவை. ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்திலும், ஐரோப்பிய நாடாளுமன்றத்திலும் ஜெலன்ஸ்கி இதனை திரும்பத் திரும்பக் கூறினார்.

அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும், ஏகாதிபத்திய நாடுகளிலும் ஊடகங்களும் இதனை செய்தியாக்கின. பி.பி.சி., என்.என்.சி., பிரான்ஸ் பிரஸ் ஏஜென்சி, சி.என்.என்., லண்டன் டைம்ஸ், நியூயார்க் டைம்ஸ், வாஷிங்டன் போஸ்ட் என்பதோடு வலைதளங்களிலும் இது பரபரப்பாக பேசப்பட்டது.

உலகின் பிற பகுதியைவிட ரஷ்ய மக்களுக்கும் – உக்ரைன் மக்களுக்கும் இதன் பொருள் புரியும். இரண்டாம் உலகப் போர் சூழல் அது. நாஜிகளின் போர் வெறிகளை கண்டித்தும், யூதர்கள் மீதான இனவெறியை கண்டித்தும், அமெரிக்காவின் துரோகத்தை கண்டித்தும், குறிப்பாக ரஷ்ய செஞ் சேனைக்கு ஆதரவு தெரிவித்தும் சாப்ளின் முழங்கினார்.

தி கிரேட் டிக்டேட்டர் திரைப்படத்தில், அடுத்து சான்பிரான்சிஸ்கோ பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரைகளும் வரலாற்று இயல்புகளை வெளிப்படுத்தின. ரஷ்ய ஆதரவை வெளிப்படுத்தின. யுத்த எதிர்ப்பையும், நீடித்த அமைதியையும் கோரின.

ஜெலன்ஸ்கியின் கூற்றுபடி, சாப்ளின் மீண்டும் பிறக்க வேண்டும் என்பதின் பொருள் அவர் ரஷ்ய ஆக்கிரமிப்பை எதிர்க்க வேண்டும் என்பது. அன்று சாப்ளின் யுத்த வெறியை எதிர்த்தபோது நாஜிகள் உலகை யுத்த விளிம்பில் தள்ளினார்கள். ரஷ்யாவில் கோடிக்கணக்கான மக்கள் செத்து மடிந்தார்கள். ரஷ்யா சுற்றி வளைக்கப்பட்டது.

நேச நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன் ஒப்பந்தப்படி தரவேண்டிய ஆதரவில் இருந்து நழுவினார்கள். வரலாற்று வஞ் சகம் அது. அந்த சூழலில்தான் யுத்த வெறிக்கு எதிராக சாப்ளின் முழங்கினார்.

அதேபோல் இன்று உக்ரைனுக்கு ஆதரவாக முழங்க முடியாது. யுத்தம் வேண்டாம்; அமைதி வேண்டும் என அவரால் முழங்க முடியும். ஆனால் உக்ரைனுக்கு ஆதரவாக, ரஷ்யாவிற்கு எதிராக அவரால் முழங்க முடியாது. ஏனெனில் உலகில் பதற்றத்தை தூண்டும் நேட்டோ ராணுவ கூட்டமைப்பும் இருமுறை இப்புவியில் அணுகுண்டை பயன்படுத்திய அமெரிக்காவும், ஜெலன்ஸ்கியை தூண்டுவதால் சாப்ளினால் உக்ரைனுக்கு ஆதரவாக முழங்க முடியாது.

தி கிரேட் டிக்டேட்டரில் சாப்ளினின் உரையை "முடிவு" பேச்சு என்பார்கள். அது கீழ் காண்பவை: சுருக்கமாக...

நான் ஒரு சக்கரவர்த்தியாக விரும்பவில்லை, யாரையும். ஆளவோ, வெல்லவோ விரும்பவில்லை.

எல்லோருக்கும் உதவி செய்யவே விரும்புகிறேன்.

யூதர்கள் – வேற்று மதத்தினர், கருப்பர்கள் – வெள்ளையர்கள் அனைவரும்.

மனிதர்கள் ஒவ்வொருவரும் மகிழ்ச்சியில் தான் வாழ வேண்டும் – துயரங்களில் அல்ல.

ஒருவர், ஒருவரை வெறுப்பதும், அலட்சியப்படுத்துவதும் என்ன வாழ்வு?

வளமான இப்புவியை மேலும் வளர்த்து அனைவருக்குமானதாக மாற்ற முடியாதா என்ன?

வாழ்வை சுதந்திரமும், அழகும் மிக்கதாக்க முடியும்.

ஆனால் நாம் தவறிவிட்டோம்.

பேராசை மனித ஆன்மாவை சிதைத்து விட்டது.

வெறுப்பால் ஒருவருக்கொருவர் விலகிவிட்டோம்.

நம்மை நாமே இழுத்து மூடிக் கொண்டிருக்கிறோம்.

இயந்திரங்கள் பெருகிவிட்டன. வளங்கள் குவிந்து விட்டன. இருப்பினும் ஏன் நாம் வறியவர்களாக இருக்கிறோம். அறிவு நம்மை சுயநலத்திற்கு தள்ளிவிட்டது. நம்மிடம் சாதுரியங்கள் இருக்கிறது. அவரவர் நலன்களால் நாம் நீதியை கடந்து செல்கிறோம். தற்போது நமக்கு வேண்டியது மனிதத்துவம்.

உலகின் மனிதம் யாவும் மனிதனின் நன்மைக்காக நிற்கின்றன.

சர்வதேச சகோதரத்திற்காக நிற்கின்றன.

அனைவரின் ஒற்றுமைக்காக நிற்கின்றன.

ஒரு காலம் வரும். மனிதம் மலரும் மனிதர்கள் பகைமை இல்லாமல் போய்விடும்.

சர்வாதிகாரிகள் அழிவார்கள்.

மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட அதிகாரத்தை மக்களே எடுத்துக் கொள்ளும் காலம் அது.

சுதந்திரத்திற்கு ஒருபோதும் அழி வில்லை. ஒரு புதிய உலகம் ஒன்று எழும்.

அது கருணையார்ந்த உலகம்.

போரரசுகளின் தீமைகளுக்கும், பமைமைகளுக்கும் மேலெழும் உலகம் அது.

மனித மனங்களுக்கு சிறகுகள் இருக்கிறது. அது மேலெழும். இருள் அகலும். வெளிச்சம் பரவும். எங்கும் நம்பிக்கை ஒளி படரும்!!

---



கே.முருகன்

# ஒன்றிய அரசின் இந்தி மொழித் திணிப்பு

ஒன்றிய அரசு சார்பில் 1963 ஆண்டின் அலுவல் மொழி சட்டம் பிரிவு 4 ன் கீழ் அலுவல் மொழி நாடாளுமன்றக்குழு உள்துறை அமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்டது. இந்தக்குழு ஐந்து ஆண்டுக்கு ஒருமுறை இந்தி மொழி பயன்பாடு குறித்து அறிக்கை தரும்.

இந்தக் குழுவில் மக்களவையின் 20 உறுப்பினர்கள், மாநிலங்களவையின் 10உறுப்பினர்கள் என்று 30 உறுப்பினர் இடம் பெற்றுள்ளனர். தற்போது பாஜக உள்துறை அமைச்சர் தலைமையில் அமைந்துள்ள குழுவில் ஆளும் பாஜக சேர்ந்தவர்கள் அதிகமாக உள்ளனர்.

மேலும் காங்கிரஸ், ஆம் ஆத்மி கட்சி ஐக்கிய ஜனதாதளம், தெலுங்கு தேசம், பிஜு ஜனதா தளம் லோக் ஜனசக்தி, சிவசேனா கட்சி உறுப்பினர்கள் இடம் பெற்று உள்ளனர். அலுவல் மொழி நாடாளுமன்ற குழுவின் சார்பில் நேரடியாக குடியரசுத் தலைவருக்கு அறிக்கை அளிக்கப்படும். இந்தக்குழு சார்பில் 10 தொகுப்பு பரிந்துரைகள் குடியரசு தலைவரிடம் அளித்துள்ளனர்.

அமித்ஷா தலைமையிலானக் குழு கடந்த 2022 செப்டம்பர் 9 ஆம் தேதியில் 11வது தொகுப்பு அறிக்கை குடியரசுத் தலைவரிடம் அளிக்கப்பட்டுள்ளது.

கடந்தாண்டு 2021 ஆகஸ்ட் 10 ஆம்தேதி இந்தக்குழுவின் 36வது கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அறிக்கை குடியரசுத் தலைவரிடம் தந்துள்ளது.

இந்த வருடம் ஏப்ரல் 7ஆம் தேதி குழு சார்பில் 37வது கூட்டம் அமித்ஷா தலைமையில் நடந்து அறிக்கையை குடியரசுத்தலைவருக்கு அனுப்பவும் ஒப்புதல் பெற்றது தொடர்பாக ஒன்றிய தகவல் ஒலிபரப்புத்துறை சார்பிலும் ஊடகங்களுக்கு அறிக்கை தந்துள்ளது.

அரசு சார்பில் கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் அலுவல் மொழி 37 வது கூட்டத்திற்கு உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமை தாங்கினார். இந்த கூட்டத்தில் உள்துறை சார்பில் இனை அமைச்சர்கள் அஜய் குமார் மிஸ்ரா, நிஷித் பிரமானிக் குழு உபத்தலைவரும் பிஜு ஜனதா தள மூத்த தலைவருமான பிரதஹரி மாதப் மற்றும் குழுவின் உ றுப்பினர்கள் கலந்து கொண்டனர் என்று கூறப்பட்டுள்ளது. குழு அனுப்ப வேண்டிய 11 வது தொகுப்பு அறிக்கையை அனுப்புவதற்கு அமித்ஷா ஒருமனதாக ஒப்புதல் தந்து இறுதி செய்யப்பட்டதாகவும் கூறி உள்ளது.

இந்த குழுவின் கால வரம்பிற்குள் குழு இதுவரை 3 அறிக்கை தந்துள்ளதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. குழு தலைவர் அமித்ஷா அவர்கள் 1. முதல் 11 வரையிலான தொகுப்பு அறிக்கை அனைத்தையும் அமல் படுத்துவதற்கு ஜுலைமாதம் மீண்டும் கூட்டத்தை நடத்துவதற்கு வலியுறுத்தியதாகவும் அறிகையில் கூறப்பட்டுள்ளது.

9 ஆம் வகுப்பு வரை குறைந்தபட்சம் இந்திமொழி அறிவை மாணவர்கள் அறிந்து கொள்ளவும் இந்தி கற்பிக்கும் பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் தருவது, இந்தி மொழி அகராதி புதுப்பித்து மீண்டும் வெளியிடுவது, அனைத்து அமைச்சகம் துறை செயலாளர்களுடன் பேசிய பிறகு 1 முதல் 11 வரையிலான அறிக்கை அமலாக்கம் தொடர்பாக பரிசீலிக்க அமலாக்கக்குழு அமைப்பது உட்பட 3 ஆலோசனைகளை உள்துறை அமைச்சர் அளித்தார் என்று அறிக்கை சுட்டிக்காட்டி உள்ளது.

அரசை நடத்துவதற்கு அலுவல் மொழி அவசியம் என்று பிரதமர் முடிவு செய்து உள்ளார். அதற்கு இந்திமொழி பயன்பாட்டை மேம்படுத்துவதாக இருக்க வேண்டும் என்று திட்டமிட்டுள்ளதாக அமித்ஷா குறிப்பிட்டுள்ளார் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டை ஒன்றுபடுத்துவதற்கு அலுவல் மொழி கொண்டு வரும் நேரம் வந்து விட்டதாகவும் அறிக்கையில் ஒன்றிய அரசு கூறியுள்ளது. குறிப்பாக நாட்டின் குடிமக்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளும் தொடர்பு மொழி அலுவல் மொழி இந்திய மொழியாக இருக்க வேண்டும் அந்த வகையில் ஆங்கிலத்திற்கு மாற்று தொடர்பு மொழி இந்தியாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டு கூறியதாக அறிக்கையில் உள்ளது.

அமித்ஷா அவர்கள் தற்போது ஒன்றிய அமைச்சரவை குறிப்புகள் அனைத்தும் 70சதவீதம் இந்தியில் தயார் செய்வது வடகிழக்கின் 8 மாநிலங்களில் 22 ஆயிரம் இந்தி ஆசிரியர்கள் இதுவரை தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மேலும் 9 பழங்குடி சமுக மக்கள் தங்கள் பேச்சு எழுத்து முறையை தாவனகிரிக்கும் மாற்றியுள்ளதாக கூறியுள்ளார் எனவும் அறிகை மேற்கோள் காட்டி உள்ளது.

வடகிழக்கின் 8 மாநிலங்களும் 10 ஆம் வகுப்பு வரை இந்தி மொழி கட்டாயம் கற்பிக்க ஒப்புக்கொண்டுள்ளதாகவும், அறிக்கை தெரிவித்துள்ளது.

அமித்ஷா தலைமையிலான குழுவின் 11வது தொகுப்பு அறிக்கையில் சுமார் 112 பரிந்துரைகள் இடம் பெற்று இருப்பதாக செய்தி வந்துள்ளது.

தொழில் நுட்பம், தொழில் நுட்பம் அல்லாத உயர் கல்வி நிறுவனங்கள் ( மிமிஜி, மிமிவி, கிமிமிவிஷி) மத்திய பல்கலைக்கழகங்கள், கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் இவற்றில் இந்திமொழியும் மாநில மொழிகளும் ஆங்கிலத்திற்கு மாற்றாக கட்டாயம் பயிற்று மொழியாக இருக்க வேண்டும்

ஒன்றிய அரசு சார்பில் அனுப்பப்படும் சுற்றறிக்கைகள் தொலை நகல், மின் அஞ்சல் அழைப்பிதழ்கள் ஆகியவை கட்டாயமாக எளிமையான வகையில் இந்தி மொழியில்அனுப்ப வேண்டும்.

படிப்படியாக ஆங்கிலத்தை விருப்ப மொழியாக்க வேண்டும். அரசுப்பணி தேர்வுகளில் ஆங்கிலத்தில் கேள்வித் தாள் வழங்குவதற்கு முற்றுப்புள்ளி வைக்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களை 3 மண்டலங்களாக பிரித்துள்ளது. இதில் உத்தரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம், சத்திஷ்கர், உத்தராகாண்ட், ஜார்கண்ட், அரியானா ஹிமாச்சலம், ராஜஸ்தான், டெல்லி மற்றும் யூனியன் பிரதேசங்கள் அந்மான் நிகோபர் தீவு ஏ பிரிவிலும்,

குஜராத், மகாராஷ்டிரா, பஞ்சாப் மற்றும் யூனியன் பிரதேசம் சண்டிகர், டாமன் டையூ, தாத்ரா நகர் ஹவேலி ஆகியவை பி பிரிவாகவும் ,

நாட்டின் பிற பகுதிகள் சி மண்டலம் என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இதில் ஏ பிரிவில் கல்வி நிலையங்கள் இந்தி மொழியை கட்டாயமாகவும் மற்ற மாநிலங்களில் அந்தந்த மாநிலத்தின் மொழிகளிலும் பயிற்று மொழியாக இருக்லாம் என்றும் ஆங்கிலம் விருப்ப மொழியாக மாற்றப்பட வேண்டும். பனாரஸ் இந்து பல்கலைக்கழகம், அலிகார் முஸ்லீம்

தொடர்ச்சி 5ம் பக்கம்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

# ஜனசக்தி

மலர் 85 இதழ் 30

## அடிக்கடி 'கலைப்பு' நோய்..

அஇஅதிமுக அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட இரண்டு ஆணையங்களின் அறிக்கை அண்மையில் தமிழ்நாடு சட்டப்பேரவையில் வைக்கப்பட்டன.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அம்மையாருக்கு மருத்துவமனையில் நிகழ்ந்ததென்ன என்பதை ஆய்வு செய்ய 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் 25ஆம் தேதி தமிழ்நாடு அரசு அமைத்தது நீதிபதி ஆறுமுகசாமி ஆணையம்.

அவரது அறிக்கையில், முத்தாய்ப்பாக ஒரு திருக்குறளை மேற்கோள் காட்டி நிறைவு செய்திருக்கிறார்.

"காலாழ் களரில் நரியிடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு"

அதாவது, "வேல் ஏந்திய வீரரைக் கோர்தெடுத்த கொம்பு உடைய யானையையும், கால் ஆழும் சேற்று நிலத்தில் அகப்படும்போது நரிகள் கொன்றுவிடும்"

அமைச்சர் பரிவாரமே அப்பல்லோ மருத்துவமனையில் குடியிருந்தது. ஆருயிர்த் தோழியின் குடும்பம் 10 அறைகளை அடைத்து இருந்தது. அயல் நாட்டு மருத்துவர்கள் வந்தார்கள். ஆனால் அவர்கள் சொன்ன பரிந்துரை எதையுமே செய்யவில்லை. தனக்கு என்ன செய்ய வேண்டும் என்று சொல்லும் உணர்வை இழந்து விட்ட அந்த யானையை சிறுநரிகள் கொன்று விட்டனவாம்.

அப்போது தமிழ்நாட்டில் முதலமைச்சராக இருந்தவர் ஓ.பன்னீர்செல்வம் தான்! கண்ணசைத்தால் தமிழ்நாடு அரசு இயந்திரமே ஆடும். ஆனால் வாய்மூடிக் கிடந்து, பதவி பறிபோகும் நிலையில் சாவில் சந்தேகம் என ஆணையம் அமைத்தவர் அவர்.

தூத்துக்குடியில் துப்பாக்கி சூடு; 13பேர் பலி. அப்போது முதலமைச்சராக இருந்த எடப்பாடி பழனிச்சாமி என்ன நடந்தது என்பதை, தானும் தொலைக்காட்சியில் பார்த்து தான் தெரிந்து கொண்டதாக வெட்கமே இல்லாமல் சொன்னார்.

அவர் அமைத்தது நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையம்.

மே 22, 2018 அன்று ஆலையை மூடக்கோரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நோக்கி சென்ற ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக போராடிய பொதுமக்கள் வன்முறையில் ஈடுபடவில்லை; எந்த ஒரு காவலரும் காயம் அடையவில்லை. ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் எதுவும் இல்லாத நிலையில் குறிவைத்து போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். ஒளிந்து கொண்டு சுட்டனர். குண்டுகள் எந்த திசையில் இருந்து வருகிறது என்றே தெரியாமல் போராட்டக்காரர்கள் சிதறி ஓடினர். போலீசாரின் இந்த துப்பாக்கிச் சூடு குரூரமான செயல்" என நீதிபதி அருணா ஜெகதீசன் கமிஷன் அறிக்கை தந்துள்ளது.

கோவையில் அக்டோபர் 23ம் தேதி ஒரு கார் வெடித்துள்ளது. கோவை கலவரபூமியாகவே சித்தரிக்கப் படுவது தற்செயலானதல்ல. காவல்துறை பல அணிகளை அமைத்து ஐந்து பேரைக் கைது செய்துள்ளது. காவல் தலைமை இயக்குநரே நேரில் சென்று விசாரித்துள்ளார். கார் வெடித்ததில் இறந்தவரின் வீட்டைச் சோதனையிட்டு, வெடிபொருட்களை கைப்பற்றி, தீவிரவாதத் தொடர்புகள் இருந்திருக்கலாம் என தனது விசாரணையை ஆழப்படுத்தி உள்ளது. நான்கு நாட்களில் சிசிடிவி காட்சிகளோடு விஷயங்களை வெளியிட்டுக் கொண்டே இருக்கிறது. என்ன நிகழ்ந்தது என துரிதமாகக் கண்டறிந்து, தீவிரவாதச் செயலை யார் செய்தாலும் வேரடி மண்ணோடு பறித்து அகற்ற வேண்டும் என்பதில் வேறொரு கருத்துக்கு இடமே இல்லை.

நான்கு ஆண்டுகள் கழித்து ஆணையம் அமைத்து கண்டறியப்பட்ட இரண்டு நிகழ்வுகளுக்கும், பொறுப்பேற்று பதிலளிக்கக் கடமைப்பட்ட முன்னாள் முதல்வர்கள் ஓ.பன்னீர் செல்வம், எடப்பாடி பழனிசாமி இருவரும், 'திமுக ஆட்சியில் படுகொலைகள், குண்டுவெடிப்புகள்' என நான்கு மணி நேரத்துக்குள்ளாகவே அபாயக் குரல் எழுப்புகிறார்கள்.

பாஜக தலைவர் அண்ணாமலை, ஆட்சிக் கலைப்பு நிகழ்ந்தால் அதற்கு நாங்கள் பொறுப்பில்லை என இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மிரட்டுவதாய் எண்ணிக் கொண்டு பேசுவார். இப்போது உடனே தீவிரவாதத் தாக்குதல் என அறிவிக்காவிட்டால் ஆளுநரை சந்திப்போம் என்கிறார்.

மாலேகான் குண்டு வெடிப்பின் முதல் குற்றவாளி பாஜக நாடாளுமன்ற உறுப்பினர். தன்மேல், தம் வீடு, கார்களின் மேல் யாரோ குண்டு வீசிவிட்டதாக தமிழ்நாட்டில் ஆர்எஸ்எஸ் பரிவாரங்கள் ஆடிய நாடகங்கள் அநேகம். கலவரங்களுக்கு வித்திட்டு அதையே காரணமாக்கிக் கொண்டு வட இந்தியாவில் இவர்கள் பல மாநிலங்களில் ஆட்சியைப் பிடித்தவர்கள்.

இந்தச் சலசலப்புகளுக்கு எல்லாம் தமிழ்நாடு அஞ்சாது. இது "யாதும் ஊரே, யாவரும் கேளிர்; நன்று கருது, நாளெல்லாம் வினை செய்" என பன்னெடுங்காலமாக பண்பட்ட நிலம். எந்த வன்முறைக்கும் எந்நாளும் அடிபணியாது!

## எஜமான விசுவாசம் எடுபடவில்லை

# பாஜக அரசு மீது அமெரிக்கா கண்டனம்

**அமெரிக்க வெளியுறவு செயலாளர் அந்தோணி பிளிங்கன் என்பவர் நமது நாட்டின் வெளியுறவு துறை அமைச்சர் ஜெய்சங்கர் அவர்களுக்கு ஒரு கண்டனக் கடிதம் எழுதியுள்ளார்.**



அக்கடிதத்தில் இந்தியாவில் சிறுபான்மை மக்கள் எவ்வாறு துன்புறுத்தப் படுகிறார்கள்? என்று விவரித்துள்ளார்.

இந்த கடிதம் கிடைத்ததும் நமது வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் மிகவும் அதிர்ச்சி அடைந்து குழப்பத்தில் ஆழ்ந்து உள்ளார்.

அமெரிக்க வெளியுறவு செயலாளர் அந்தோணி பிளிங்கனின் கடிதத்தில் கூறப்பட்டுள்ள விஷயம் இதுதான்.

"டாக்டர் ஜெய்சங்கர் உண்மைக்கு சம்பந்தமில்லாமல் எவ்வித ஆதாரமும் இன்றி பேச முயற்சிக்கிறார். நான் பாஜக அமைச்சர் ஜெய்சங்கர் அவர்களைக் கேட்கிறேன். அமெரிக்காவிலுள்ள 335 மில்லியன் மக்கள் தொகையில் ஒரு சதவிகிதம் பேர் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள். கிறிஸ்தவர்கள், யூதர்கள், முஸ்லிம்கள் மற்றும் இந்துக்கள் என்ற வகையில் மதரீதியாகப் பார்த்தால் இந்துமதம் நான்காவது இடத்தை பிடிக்கிறது.

ஒரு ஆய்வுப்படி உலகில் இந்து மக்கள் அதிகமாக வாழும் எட்டாவது நாடாக அமெரிக்கா உள்ளது. நியூஜெர்சியில் 3 சதவீதமும், கலிபோர்னியா மற்றும் டெலவாராவில் 2 சதவீதமும், இதர மாநிலங்களில் சராசரியாக ஒரு சதவீதமும் இந்து மக்கள் அமெரிக்காவில் வாழ்கின்றனர். அவர்கள் இந்த தேசத்தில் மிகவும் அதிகமாக சம்பாதிக்க கூடியவர்களாக இருக்கிறார்கள்.

நூற்றுக்கணக்கான இந்து கோயில்கள் அமெரிக்காவில் உள்ளன. முதல் தலைமுறை இந்துக்கள் இந்தியாவிலிருந்து வந்தவர்கள். இரண்டாவது மற்றும் அதற்கு அடுத்த தலைமுறையினர் இங்கேயே பிறந்தவர்கள். இந்திய கிறிஸ்தவர்கள் புலம்பெயர்ந்து வரவில்லை; அவர்களுக்கு இரண்டாயிரம் ஆண்டுகால உறவு உள்ளது.

அமெரிக்காவில் எத்தனை இந்துக்கள் தாக்கப்பட்டுள்ளனர் என்று கூற முடியுமா? எத்தனை இந்துக் கோயில்கள் அமெரிக்காவில் இடிக்கப்பட்டுள்ளது என்று கூற முடியுமா?

பிரதமர் மோடி தலைமையில் பாஜக ஆட்சியில் இந்துக்களின் சொர்க்கமாக திகழும் இந்தியாவை விட்டு விட்டு ஏன் கிறிஸ்தவர்கள் அதிகமாக வாழும் அமெரிக்காவிற்கு இந்துக்கள் புலம்பெயர்ந்து வருகிறார்கள்?

இந்தியாவில் உள்ள 10 மாநிலங்களில் மதமாற்றத் தடைச்சட்டம் உள்ளது என்பது உங்களுக்கு தெரியுமா? இந்த சட்டங்கள் கிறிஸ்தவர்களுக்கு எதிராக திட்டமிட்டு கொண்டுவரப்பட்டது. இதுதான் மனித உரிமை மீறலின் முதல் அம்சமாகும்.

அமெரிக்காவில் இத்தகைய ஒரு சட்டம் எந்த மாநிலத்திலாவது இருக்கிறது என்று கூற முடியுமா? கிறிஸ்தவர்கள் அவர்களது மத நம்பிக்கைக்காக துன்புறுத்தப்படும் 50 நாடுகளில் இந்தியா 10வது இடத்தை பிடித்துள்ளது.

2014இல் பிஜேபி ஆட்சிக்கு வந்த பிறகுதான் கிறிஸ்தவர்கள் மீதான தாக்குதல் நடைபெறுகிறது என்பது உங்களுக்கு தெரியுமா?

நீங்கள் டெல்லியிலுள்ள புகழ்பெற்ற ஸ்டீபன் கல்லூரியில் படித்திருக்கிறீர்கள். இது அனைவராலும் அறியப்பட்ட இந்தியாவில் உள்ள கிறிஸ்தவ கல்லூரி. பெருமதிப்பிற்குரிய தத்துவப் பேராசிரியர் ஆண்ட்ரூஸ் அவர்கள் காந்தியின் வழிகாட்டியாகத் திகழ்ந்தவர்.

தாங்கள் இக் கல்லூரியில் மாணவனாக படிக்கும்போது எப்போதாவது ஒருமுறை தங்களை கிறிஸ்தவனாக மாற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டது உண்டா? ஒரு கிறிஸ்துவ கல்லூரியில் படிக்க நீங்களும் உங்கள் பெற்றோரும் ஏன் மிகப்பெரிய ஆர்வத்தை காட்டினீர்கள்?

இத்தகைய கேள்விகளுக்கு உங்களால் பதில் அளிக்க முடியாவிட்டால் உங்கள் வாதத்திற்கு பொருள் எதுவும் இல்லை."

– ஒரு பதிவர்

02ம் பக்கத் தொடர்ச்சி

செயலாகும்.

இந்திய ஒன்றிய அரசின் மொழிக் கொள்கையை தமிழ்நாடு மட்டுமல்ல, கேரளம், கர்நாடகம், ஆந்திரா, தெலுங்கானா, மேற்கு வங்கம், ஒடிசா உள்ளிட்ட மாநிலங்கள் கடுமையாக எதிர்க்கின்றன.

இந்தியை தாய்மொழியாக கொண்டுள்ள மக்கள் மட்டுமே இந்தியாவில் இல்லை.

22 மொழி பேசும் மக்களும் உள்ளனர். அவர்களை ஒன்றிய அரசு மதிக்கின்றதா? அவர்களும் இந்நாட்டு குடிமக்கள்தான் என்று அங்கீகரிக்கின்றதா? அவர்களுக்கும் தாய்மொழி உண்டு என்பதுடன், தாய்மொழிப் பற்றும் உண்டு என்பதனை அரசு ஏற்று மதித்து நடக்கின்றதா?

கல்வி, வேலைவாய்ப்பு அனைத்தும் இந்தியை தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு மட்டுமே உரியது என்றால், உங்களை, பிற மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களால் எவ்வாறு ஏற்க முடியும்?

இந்திய குடிமகனாக உள்ள ஒவ்வொருவரும் கட்டாயம் இந்தி படித்தால் தான் கல்வி, வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்று ஒன்றிய அரசு ஒரு நிலையை மேற்கொண்டால் அதனை ஜனநாயகம் என்று எவ்வாறு ஏற்க முடியும்?

ஜனநாயக முறைமைகளை காலில் போட்டு மிதித்து விட்டு ஜனநாயகம் குறித்து பேசுவதற்கு உங்களுக்கு தார்மீக உரிமை ஏது?

அதிகாரத்தில் இருக்கின்றோம் என்ற ஆணவத்தின் காரணமாக, அகங்காரத்தோடு செயல்படுவீர்களேயானால், அதற்கான எதிர் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்பதை மறந்துவிடாதீர்கள்.


அனைத்து வகை ஆதிக்கங்களையும் எதிர்த்துப் போராடும், போராடிவரும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மொழி ஆதிக்கத்தையும் எதிர்கொள்ளும்.

சட்டபேரவையில் முதல்வர் முன்மொழிந்த தீர்மானத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாட்டில் நம்பிக்கை உள்ள கட்சிகள் ஆதரித்தன.

பா.ஜ.க. புறக்கணித்தது – ஆச்சரியப் படுவதற்கு ஒன்றும் இல்லை – அவர்கள் தமிழ் மொழிக்கு மட்டுமல்ல, நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் எதிரானவர்கள் என்பதனை தங்களின் செயல்பாடுகளால் நித்தம் நித்தம் நிரூபித்து வருகின்றார்கள்! இவர்களா தேசபக்தர்கள்?

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

தோழமைமிக்க



இரா. முத்தரசன்






எஸ்.காசிவிஸ்வநாதன்

**தமிழ்நாடு ஏஐடியுசியின் 20ஆவது மாநாடு நெல்லையில் டிசம்பர் 1, 2, 3 தேதிகளில் நடைபெறுகின்றன.**

போராட்டக் களங்களில் செங்கொடி தோழர்களின் சிகப்பு ரத்தம் பூமியிலே ஊற்றெடுக்கும் மண் விக்கிரமசிங்கபுரம். நெல்லைச் சதி வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற பாலதண்டாயுதம் போன்று தியாகத்திற்கு சொந்தக்காரர் வா.மீனாட்சி நாதன். இந்திய விடுதலைக்கு முன்பு 1936 களில் செங்கொடி சங்கம் விக்கிரமசிங்கபுரத்தில் கேரள மாநிலத்தின் முக்கியத் தலைவர் ராமசந்திர நெடுங்காடியால் முதல் தடம் எடுத்து வைக்கப்பட்ட போது அவரோடு உடன் இருந்தவர். வா. மீனாட்சி நாதன் தலைமையில் 7 முழுநேர ஊழியர்கள் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தில் பணியாற்றினார்கள்.

நெல்லை முதல் சதி வழக்கு 1940ஆம் ஆண்டு போடப்பட்டு 1943ல் தண்டிக்கப்பட்டார்கள். ஏஐடியூசி தொழிற்சங்கம் அமைப்பின் கீழ் தொழிலாளர்களை அரசியல் உணர்வுடைய தொழிற்சங்கமாக திரட்டினார்கள். வா. மீனாட்சிநாதன் தொழிலாளர்களால் நேசிக்கப்பட்ட தலைவராக உயர்ந்தார். இவரோடு இணைந்து பணியாற்றிய தோழர்கள் ஏ.நல்லசிவம், ஆர்.வி.அனந்தகிருஷ்ணன், இ. தளவாய், கே.பி.எஸ். மணி, எம்.கே.சாமி, சி.பெ.சீனிவாசன், நடராஜன் என எண்ணற்ற தோழர்களின் பெயர்களை அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

தோழர் பாலதண்டாயுதம் கட்சியை வலுப்படுத்துவதற்காக இரவு பகலாக கண் துஞ்சாது பணியாற்றிக் கொண்டிருந்தார். இவருடைய ஆவேச உரைகளைக் கேட்டு ஆயிரக்கணக்கான தொண்டர்கள் செங்கொடி சங்கத்திற்கு வந்து சேர்ந்தனர். இவர்களை வளர்த்தெடுக்க மார்க்சிய கல்வி கொடுப்பது, இயக்க வேலைகளில் ஈடுபடுத்துவது, அமைப்பை வலுப்படுத்துவது ஆகிய வேலைகளை பாலன் தானே முன்னின்று செய்தார்.

கடலூரைச் சேர்ந்த மாணவராக இருந்த ப. மாணிக்கம் அமைப்பாளராக மாநில தலைமையால் அனுப்பப்பட்டு இங்கு வந்து சேர்ந்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்று இயக்கத்துக்கு வந்த வளர்ச்சியடைந்த சிறந்த ஆர்கனைசர். படாடோபமில்லாத, சுறுசுறுப்பான முழு நேர ஊழியர்.

தூத்துக்குடி கோட்ஸ் ஆலை நிர்வாகத்திற்கு ஆதரவான ஒரு தொழிற் சங்க அமைப்பு நாயுடு சங்கம் என்று அழைக்கப்பட்டது. இச் சங்கத்தினர் நிர்வாகத்தின் தூண்டுதலாலும், போலீஸின் முழு ஆதரவிலும் ஆங்காங்கே நமது தோழர்களை அடித்து நொறுக்கினார்கள். ரவுடித்தனம் வளர்ந்தது. நமது தோழர்களை அடிப்பதிலிருந்து, வெட்டுவதற்கும், குத்துவதற்கு கூட இது இட்டுச் சென்றது.

கோவில்பட்டியிலும் பஞ்சாலை தொழிலாளர்கள் அணி திரட்டிய தலைவர் ஆர்.வி. அனந்தகிருஷ்ணன். அவர் பாபநாசத்தில் குளித்துவிட்டு வரும்போது நாயுடு சங்கத்தின் ரவுடிகளால் காலில் வெட்டப்பட்டார். ரத்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ரவுடிகள் ஓடிவிட்டனர். கண்துடைப்பாக போடப்பட்ட வழக்கு ஒன்றுமில்லாமல் போய்விட்டது. இறுதிவரை அவரால் காலை மடக்க முடியாது.

ரவுடியிசத்தால் நம் சங்கத்தை அடக்கமுடியவில்லை. சங்கத்தின் தீவிர ஊழியரான நடராஜனை அரிவாளால் வெட்டினர். இந்த வழக்கும் துடைத்தெறியப் பட்டது. மலையாளத்து ஆறுமுகம் பிள்ளை என்னும் நமது சிறந்த ஊழியரை கடப்பாரையால் தாக்கி மண்டையை உடைத்தனர். கத்தியால் குத்தினர். கட்டுடல் கொண்ட நடராஜன் கீழே விழுந்தார். இறந்து விட்டார் என நினைத்து எதிரிகள் ஓடிவிட்டனர். உயிர் பிழைத்துக் கொண்டார். ரவுடிகளின் காட்டுமிராண்டி தனத்தால் தொழிலாளர்களிடம் சோர்வு ஏற்பட்டது.

இந்நிலையில் மீனாட்சி நாதன் தலைமையில் இதுபோன்ற சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க பாலன், மாணிக்கத்தின் வழிகாட்டுதலில் தோழர்கள் முடிவு செய்தனர். தொழிலாளர்கள் இரண்டாவது ஷிப்ட்டுக்கு வேலைக்கு போகின்ற பொழுது ரவுடி மாசாணம் தாக்கப்பட்டான். அவனது விரல்கள் துண்டாக்கப்பட்டன. 'சாது மிரண்டால் காடு கொள்ளாது' என்பது நிஜம் ஆயிற்று. நம் தோழர்கள் தாக்கப்பட்டபோது, வெட்டப்பட்ட போது வழக்கு போடாத போலீஸ் இப்போது வழக்கு போட்டது.

நடராஜன், கே.பி.எஸ் மணி, எம். கே. சாமி போன்ற தோழர்கள் மீது வழக்கு போடப்பட்டது. நம் தோழர்களை தண்டிக்க பொய் சாட்சியங்கள் தயாரிக்கப்பட்டன. நம் சங்கமும் தோழர்களை காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளில் இறங்கியது. பாலதண்டாயுதம் தொழிலாளி வர்க்கத்தின் உணர்வுகளைப் பற்றி பல மேடைகளில் சொன்ன கதைகளில் இந்த உண்மைச் சம்பவமும் ஒன்று.

ஆலையில் வேலை பார்த்து டிஸ்மிஸ் செய்யப்பட்ட கண்ணு என்ற தோழரின் சாட்சியம் முக்கியமாய் இருந்தது. இவர்தான் ரவுடி மாசாணத்தை வெட்டி விரல்களை துண்டித்தார் என்பதுதான் வழக்கு. இவருக்கு உறுதுணையாக மற்ற தோழர்களும் இருந்தார்கள்.

அப்போது மில்லில் வேலை பார்த்துக்கொண்டிருந்த பேச்சியம்மாள் என்ற நமது தோழரின் சாட்சியம். பேச்சியம்மாளின் வீட்டிற்கு முன்னால்தான் மாசாணம் வெட்டப்பட்டான். இளம் விதவை. ஏஐடியூசி தொழிற்சங்கத்தின் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டவர். அவர் சாட்சியத்தில் கூறினார். "அன்று நான் வீட்டில் இருந்தேன். எனக்கு விடுமுறை. மாலை 4 மணிக்கு மாசாணம் என் வீட்டிற்குள் திடீரென்று நுழைந்தான். தன்னை வலுக்கட்டாயமாக பிடித்து இழுத்தான். தன்னுடன் உடலுறவு கொள்ளும் படி வற்புறுத்தினான். ஆனால் நான் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை கற்பழிக்க முயன்றான். கூப்பாடு போட்டேன். வெளியே சென்றிருந்த எனது வைப்பாளாக இருந்த கண்ணு வந்தார்.என்னை கற்பழிக்கப் முயற்சிப்பதைக் கண்டு ஆத்திரம் அடைந்து, மாசானத்தை விரட்டிச் சென்று வெட்டியதால்தான் விரல்கள் துண்டிக்கப் பட்டன.

**"தொழிலாளி வர்க்கதிற்காக தன் கற்பை பணயம் வைத்த அந்த அன்னை யினுடைய தியாகத்தால் தொழிலாளி வர்க்கத் தலைவர்கள் விடுவிக்கப்பட்டனர். இயக்கத்திற்காகவும், இந்திய விடுதலைக்காகவும், வெள்ளைக்கார நிர்வாகத்தை எதிர்ப்பதாகவும், அந்த அன்னையும், தோழர் கண்ணுவும் மாபெரும் தியாகத்தை செய்தார்கள்.**

தங்களின் பெயர் கேவலம் அடைவதையும் பொருட்படுத்தாமல் சாட்சியம் அளித்தனர். எத்தனை எத்தனை தியாகங்களுக்கு சொந்தக்காரர்கள் நாம்.

காமாட்சி நாயுடு சங்கத்தில் தீவிரமாக பணியாற்றியவர். நமது தோழர்களை அடித்தவர்களில் ஒருவர். நாயுடு சங்கத்தின் உண்மை சொரூபம் தெரிந்தவுடன் நமது ஏஐடியுசி சங்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். அவரைக் கண்டு எதிரிகள் பயப்பட்டார்கள். பஞ்சாலை தொழிலாளர் சங்கத்தின் துணைச் செயலாளர்களில் ஒருவராக செயலாற்றினார். பின்னர் இவர் மீது கொலைக்குற்றம் சாட்டப்பட்டு சிறை சென்று வேலூரில் பாதுகாப்புக் கைதியாக இருந்து விட்டு, விடுதலையான பின்னர் செங்கோட்டையில் பஞ் சாலைத் தொழிலாளர் சங்கத்தை கட்டிவளர்த்து அதன் தலைவராகவும் இருந்தார். நமது சிறு வயதில் காதில் ஒலித்த அந்தப் பாடல் என்றும் மறக்காத பாடல் ..

"செங்கோட்டை நகரில் சிங்கம் போல் எழுந்து சங்கத்தை வளர்த்தாய் காமாட்சியே!" செங்கோட்டை நகரசபை உறுப்பினராக இருந்தும் பலராம வர்மா டெக்ஸ்டைல் மில்லை தேசவுடமையாக்க விடுதலை பெற்ற இந்தியாவில் இன்னல்களை அனுபவித்த தோழர். இன்றும் நம்மோடு சாட்சியமாக அவரோடு இணைந்து பணியாற்றிய தோழர் ஏ. சாமி 90 வயது கடந்தும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். தோழர் பரதேசி காமாட்சியின் நெருங்கிய நண்பர். இவரும் நாயுடு சங்கத்திலிருந்து வெளியே வந்தவர் தான்.ரவுடியி சத்தை ஒடுக்குவதில் முன்னணியில் நின்ற மகத்தான தோழர்.

மாரிமுத்து 'செபஸ்தியான்' கொலை வழக்கில் சேர்க்கப்பட்டு தண்டனை அனுபவித்தவர். உறுதி குன்றாது குடும்பத்தோடு இயக்கத்திற்கு பாடுபட்டவர். கூம்பு வடிவிலான மெகாபோன் மூலம் பிரச்சாரம் செய்வதில் வல்லவர். அதிகம் படிக்கவில்லை என்றாலும் கொண்ட கொள்கைக்காக உயிர் மூச்சு உள்ளவரை வாழ்ந்தவர்.

பாண்டி தேவரும், மலையாளத்து ஆறுமுகம்பிள்ளையும், கண்ணுவும், தம்பு, வழுதூர் சேது, கருப்பையா, கொட்டாரம் கந்தசாமி, கருத்தப்பிள்ளையூர் சவரிமுத்து, பகுகிடைவிளை பாக்கியமுத்து, ஹனிபா, ஞானஒளிவு, மணி, வடக்கு ரதவீதி அருணாச்சலம், செல்லையா, ஆதிமூலம், பிச்சையா, நாடார்பட்டி அருணாச்சலம் போன்ற முகம் தெரியாத பல தோழர்களின் தியாகத்தால் வளர்க்கப்பட்ட பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் வலுவாகக் காலூன்றி நின்று நெல்லையின் சிவந்து மண்ணுக்கு வாருங்கள் தோழர்களே!

2022 டிசம்பர் 3ஆம் நாள் பேரணி! பொதுக்கூட்டம்! நெல்லை சிவக்கட்டும்!

தொடர்புக்கு: 94434 68710

## 3ம் பக்கத் தொடர்ச்சி

பல்கலைக்கழகம் மற்றும் டெல்லி பல்கலைக்கழகத்தில் 20 முதல் 30 சதமாக பயன்பாட்டில் இருக்கும் இந்தி மொழியை 100 சதமாக பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும்.

அறிக்கை குறித்து குழுவில் உள்ள உப தலைவர் பிஜு ஜனதா தளத்தின் மூத்த தலைவர் பர்து ஹரி மாதப், 2வது உப குழுவின் கன்வீனர் ரிட்டா பகுகுணா ஜோஷி, ஆம் ஆத்மி மாநிலங்களவை உறுப்பினர் சுஷில் குமார் குப்தா ஆகியோர் 2020ஆண்டு ஒன்றிய அரசு குறிப்பிட்ட புதிய கல்விக் கொள்கை அடிப்படையில் இந்த அறிக்கை தயார் செய்யப்பட்டதாகவும் ஆங்கில அன்னிய மொழி மாற்ற வேண்டும் என கூறியுள்ளதாக தேசிய ஊடகங்களில் செய்தி வந்துள்ளது.

அறிக்கையில் 193 நாடுகள் கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் அலுவல் மொழியாக இந்தியும் சேர்க்கப்பட வேண்டும்.

அரசுப்பணி தேர்வு மைய ஊழியர்கள் கட்டாயம் இந்தி மொழி அறிந்தவர்களாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும். இந்தியில் பணிகள் செய்யாதவர்களிடம் விளக்கம் கேட்க வேண்டும் அவர்களது நன்னடத்தை அறிக்கையில் குறிப்பிட செய்யவேண்டும். ஏ பிரிவு மாநில கீழ் நீதி மன்றங்ளில் இந்தி மொழி உள்ளது. உயர்நீதி மன்றங்ளிலும் மொழி பெயர்ப்பு இந்தியில் அமைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1987ல் அலுவல் மொழி தொடர்பாக அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டு உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தலைமையில் அமைந்த குழு 117பரிந்துரைகளை அளித்தது. அதில் கம்ப்யூட்டர் பயன்பாடு மற்றும் அரசு அலுவகங்களில் இந்தி மொழி மேம்படுத்த வலியுறுத்தியது.

நிறைவாக, கடந்த காலம் போல் அல்ல தற்போது ஆர்.எஸ்.எஸ். சின் ஒரேநாடு, ஒரே மொழி, ஒரே கலாச்சாரத்தை முன் கொண்டு செல்வதற்கான பலபடிகள் செயல் வடிவமாக்கும் மோடியின் அரசு தங்கள் திட்டத்தை நிறை வேற்றுவதன் படிநிலையே பன்மொழி தன்மைக்கு வேட்டு வைத்து மாநில தொடர்பு மற்றும் மக்களின் தொடர்பு மொழி இந்தியாக இருக்க வேகப் பாய்ச்சலில் செல்கின்றது.

மாநில மொழியை பறிக்கவில்லை என்று கூறிக்கொண்டு தொடர்பு மொழி இந்தியாக இருக்க செய்வதன் மூலம் மாநிலங்களில் இந்தி பயன் பாட்டை மேம்படுத்தும் ஆர் எஸ். எஸ்.சின் நீண்ட காலத் திட்டத்தை புரிந்து கொள்ள வேண்டும் தமிழகம், கேரள முதமைச்சர்கள் ஒன்றிய அரசு அறிக்கையை எதிர்த்து குரல் எழுப்பி உள்ளனர். பாஜகவின் உள் நோக்கத்தை புரிந்து அமித்ஷா அறிக்கையை எதிர்த்து குரல் எழுப்புவோம் போராடுவோம்.



என்.எஸ்.பிரதாப் சந்திரன்

# இலவச பேருந்து பயணம் ஓசி பயணம் அல்ல! உரிமைப் பயணம்!



ஒரு அரசு என்பது மக்கள் நலன் சார்ந்ததாக இருக்க வேண்டும். தற்போதைய அரசாங்கங்கள் இவ்வாறு இருப்பதில்லை. மக்களை எப்படியெல்லாம் ஏமாற்றலாம், சுரண்டலாம் என எண்ணுபவர்கள் தான் அரசின் தலைமை பீடத்தை கைப்பற்றி, அவர்களால் தரப்படும் தேர்தல் வாக்குறுதிகளான ஒரு சில திட்டங்களை செயல்படுத்தப்படுவதுண்டு. அப்படிப்பட்ட ஒரு திட்டம் தான் மகளிர் பயணம் செய்ய கட்டணமில்லா பேருந்துகள்.

மனிதர்களுக்கு சிறகு இருந்தால் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு பறந்து செல்லலாம். பாவப்பட்ட மனிதர்களுக்குத் தான் சிறகுகள் இல்லையே! பள்ளிக்கு, கல்லூரிக்கு, வேலைக்கு, மருத்துவ சிகிச்சைக்கு, உறவினர்களை சந்திக்க இப்படி பயணங்கள் மனிதர்களுக்கு நிறையத் தேவைப்படுகிறது. இதற்கெல்லாம் சிறகில்லாத எளிய மனிதர்களுக்கு சிறகாய் இருப்பது அரசு பேருந்துகள் தான்.

இந்தியாவிலேயே மிகக் குறைந்த கட்டணத்தில் பேருந்து சேவையை அளிப்பது தமிழக அரசின் போக்குவரத்து கழகங்கள் தான். கட்டணமில்லாது எம்.பி., எம்.எல்.ஏ.க்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள், மாற்றுத்திறனாளிகள், விடுதலைப் போராட்ட வீரர்கள், மூத்த தமிழ் அறிஞர்கள், போக்குவரத்து கழக ஊழியர்கள், அவர்களது குடும்பத்தார், 60 வயதைக் கடந்த மூத்த குடிமக்கள் போன்ற அனைவருக்கும் இலவசமாக பயணம் செய்ய அனுமதி. இதற்கான மானியத் தொகையை போக்குவரத்து கழகங்களுக்கு அரசு கொடுத்தாலும் ஏறி வருகின்ற டீசல் விலை உயர்வால், போக்குவரத்து கழகங்கள் தள்ளாடவே செய்கிறது. தமிழகத்தில் யாரைக் கேட்டாலும் சொல்வார்கள் போக்குவரத்து கழகங்கள் நஷ்டத்தில் இயங்குகின்றன என்று.

இப்படி நஷ்டத்தில் இயங்கும் போக்குவரத்து கழகங்களின் பேருந்துகளில்தான் பயணம் செய்யும் மகளிர் அனைவருக்கும் குறிப்பிட்ட, குறைவான பேருந்துகளில் இலவச பயணம் என்னும் தமிழக அரசின் தித்திப்பு அறிவிப்பு! இந்த அறிவிப்பால் உழைக்கும் பெண்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உதவுமா? ஊர் சுற்ற உதவுமா? என்கிற விவாதம் எழுப்பப்படுகின்றது!

இலட்சக்கணக்கான கோடிகளை பெரிய கார்ப்பரேட்டுகளுக்கு மத்திய அரசும், பொதுத் துறை வங்கிகளும் வாரிக் கொடுத்தபோது பொங்காதவர்கள், பல்லாயிரம் கோடிகளை வங்கிகளிடமிருந்து வாரி சுருட்டிக்கொண்டு மோடி வகையறாக்கள் நாட்டை விட்டு ஓடிய போது கோபப்படாதவர்கள்! வாராக் கடன்களை பற்றி வாய் திறக்காதவர்கள்

நம்முடைய சகோதரிகள், தாய்மார்கள், குழந்தைகள் அனுபவிக்கும் இந்த சிறிய சலுகைக்குத்தான் வாய்பிளந்து மல்லாந்து பார்க்கிறார்கள்; பேசுகிறார்கள். பெண்கள் வேலை இல்லாது ஊர் சுற்றுவதாக புலம்புகிறார்கள்.

பெண்கள் உரை சுற்றுகிறார்களா? உழைக்க செல்கிறார்களா? என்பதை ஒவ்வொரு வர்த்தக நிறுவனங்கள், கடைகள், கல்விக்கூடங்கள் போய் பார்த்தால் தெரியும். பெண்கள் எவ்வாறு எல்லாம் தாங்கள் குடும்பத்திற்காக உழைக்கிறார்கள் என்று.

அது சரி பத்து ரூபாய் பேருந்து கட்டண சலுகைகளுக்காக அலறும் கனவான்களே! ஆணும் – பெண்ணும் ஒரே வேலையை செய்தாலும் ஆணுக்கு ஒரு சம்பளமும் பெண்ணுக்கு ஒரு சம்பளம் என குறைவாகக் கொடுப்பது ஏன்? இதைப் பற்றி ஒரு நாளாவது நீங்கள் வாய் திறந்தது உண்டா?

கட்டிட வேலைகளில் ஆண்களுக்கு நிகராய் வேலை செய்யும் பெண்களை 'சித்தாள்' என சிறுமைப்படுத்தி குறைந்த கூலியைத் தானே தருகிறீர்கள். அந்தக் குறைந்த கூலியைக் கொண்டு பெண்கள் எவ்வாறு தங்கள் குடும்பத்தை நடத்தமுடியும்! இதனால்தான் பெண்கள் நல்ல வருவாயுள்ள வேலையைத் தேடுவதற்கும், ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு வேலைதேடி செல்வதற்கும் இந்த பேருந்து பயணம் அவர்களுக்கு உதவட்டும்.


பெண்களை சிறுமைப்படுத்துவதாய் எண்ணி ஓசி பயணம் என உளறிக் கொட்டாதீர். இது ஓசி பயணம் அல்ல உரிமைப் பயணம். ஆம்! சமூகத்தின் விளிம்பு நிலையில் உள்ள மாதர்களை கைதூக்கி விட உதவும் பயணம்.

பாரதியின் வாக்கில் சொல்வதென்றால், வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர்கள் தலை கவிழட்டும், பெண்களுக்கு சிறகு முளைத்து வானில் சிறகடித்து பறக்கட்டும்.

தொடர்புக்கு: 93826 79798



சி.பாஸ்கர்




மகாத்மா காந்தியின் உன்னதமான, உயிர் மூச்சான இலட்சியங்களில் ஒன்று மதுவிலக்கு. போதைப் பொருள் எந்த வடிவத்தில் சமூகத்தில் உலவினாலும் அது பெரும் கேடு தான். குடியில் வீழ்ந்தவன் ஆழமான மீளமுடியாத நீரில் மூழ்கியவன் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். ஒருவனைக் கெடுத்து அழிக்க அவனை நேரடியாக தாக்க தேவையில்லை. குடிப்பழக்கத்தில் அவனை சாதுரியமாக சிக்கவைத்தாலே போதுமானது. பின்னர் அவனை உடல் நலம், மன நலம் மற்றும் குடும்ப நலத்தை அழித்து முகவரி இல்லாமல் தொலைந்து போவான்.

குடி குடியை கெடுக்கும் என்ற லேபிளோடு மதுவை அரசே விற்பனை செய்து மக்களை அழிப்பதுதான் காந்தி தேசமா? தினமும் கஞ்சா புழக்கத்தை தடுக்க காவல்துறை அதிரடி நடவடிக்கை என செய்தி வருகிறது.

"திருடுற கூட்டம் திருட்டை தொடர்கிறது. தடுக்கிற கூட்டம் தடுத்துக்கொண்டிருக்கிறது" என்ற பட்டுக்கோட்டை வரிகள் நினைவுக்கு வருகிறது.

ஒரு பக்கம் அரசின் முழு அங்கீகாரத்தோடு, ஆசியோடு டாஸ்மாக்கில் மது விற்கப்படுகிறது. இச்சூழலில் இன்னொரு போதை பொருளை அரசே எப்படி கட்டுப்படுத்த முடியும்? பல இடங்களில் மோசமான காவல்துறை அதிகாரிகள் – சமூக விரோதிகளின் மற்றும் தரம்கெட்ட அரசியல் பின்னணி கொண்டவர்களின் பின்புலத்தோடு போதைக் கலாச்சாரம் எல்லை மீறிப் போகிறது.

வளரும் தலைமுறையினர் 100 விழுக்காடு இதற்கு பலியாகும் அபாயம் சமூகத்தை மிரட்டி வருகிறது. கஞ்சாவை பல வடிவத்தில், வண்ணத்தில் தயாரித்து இளம் தலைமுறைக்கு கொண்டு சேர்க்கும் கொடுமை அன்றாடம் அரங்கேறி வருகின்றது.

கள்ளுக்கடை போராட்டத்தை காந்தியின் அறைகூவலுக்கு இணங்க முன்னெடுத்த தந்தை பெரியார் தனது பெரிய தென்னந்தோப்பையே வெட்டிச் சாய்த்தார். போதையின் தீமையை அறிஞர் அண்ணா பேச்சிலும், எழுத்திலும், கலைப் படைப்புகளிலும் தீட்டிக் காட்டவில்லையா?

காந்தி பிறந்த மண் குஜராத்தில் நடப்பதென்ன? கள்ள மார்க்கெட்டில் போதைப் பொருள் வணிகம் அமோகமாக நடந்துதான் வருகிறது. மோடியின் அன்பை முற்றுமாக அனுபவித்து வரும் அதானி துறைமுகத்தில் கப்பல் கன்டெய்னரில் பிரவுன் சுகர், கோகெய், ஹெராயின், மார்பின் என பலவிதமான போதைபொருள் வந்து இறங்குகிறது. வடகிழக்கு மாகாணங்கள் மூலம் ரூ.10 லட்சம் கோடி மதிப்புள்ள போதைப் பொருட்களின் கடத்தல் வணிகம் வெற்றிகரமாக நடந்து வருகின்றது என்று மைய அரசின் உள்துறையே அதிகாரபூர்வமாக வெட்கமில்லாமல் அறிவிக்கிறது.

போதைபொருள் வணிகம் – அதில் தீவிரவாதிகளின் பங்கேற்பு – சட்டவிரோதமான கள்ளச்சந்தை ஆயுத விற்பனை இவையெல்லாம் ஒட்டிப் பிறந்து உலகத்தை நாசம் செய்யும் நச்சு கூட்டணி என்பது அனைவரும் அறிந்த உண்மை. உலக அளவில் போதைப்பொருள் தடுப்பு அரசு நிறுவனங்கள் உள்ளன. அவற்றின் புரிந்துணர்வும் – ஒருங்கிணைப்பும் கூட ஸ்தாபன வடிவில் இயங்குகின்றன. போதைப்பொருள் மாபியாக்கள் அமெரிக்க வல்லரசுக்கே தண்ணி காட்டும் வலிமைமிக்க நெட்வொர்க்கோடும் – சமூக மற்றும் அரசியல் செல்வாக்கோடும் தங்கள் சாம்ராஜ்யத்தை நடத்தி வருகின்றார்கள்.

உலகையே அச்சுறுத்தும் இந்த அபாயகரமான கூட்டணியின் அங்கமாக இயங்குபவர்கள் இந்தியாவிலும் வளரத் தொடங்கிவிட்டார்கள். போதையின் தீமை மானுடத்தின் விழுமியங்களான கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றை சுட்டெரிக்கும் அநீதியான அக்னி ஜுவாலை என்று உலக சுகாதார அமைப்பு தொடர்ந்து எச்சரித்து வருகின்றது.

தன் பசிக்கு தன் குட்டியையே இரையாக்கிக் கொள்ளும் விலங்குகள் இருக்கின்றன. அது போல தன் சுயலாபத்திற்கும் தன் இருப்பை வலிமையாக்கிக் கொள்வதற்கும் எந்த சமூக தீமையையும் பற்றிக் கவலைப்படாமல் கண்டும் காணாமல் இருப்பது முதலாளித்துவத்தின் கேடுகெட்ட குணமாகும்.

வருங்கால தலைமுறையை அழிக்கும். மது உற்பத்தி ஆலைகளின் உரிமையாளர்கள் யார்? இந்தியாவின் பெரிய மற்றும் சிறிய முதலாளித்துவ கட்சியை சேர்ந்தவர்கள் அல்லது மாநிலக் கட்சி தலைவர்கள் அல்லது அவர்களது பினாமிகள்.

பெரும் தீமையாக, அரக்கத்தனமாக வளர்ந்துவிட்ட போதை கலாச்சாரம் சமூகத்தில் ஈடுசெய்ய முடியாத இழப்பை ஏற்படுத்துகிறது. இளைஞர்கள் கல்லீரல் பாதிக்கப்பட்டு அகால மரணம் அடைந்து வருகிறார்கள். குடிபோதையோடு வரும் கணவனின் அடி, உதை, கெட்ட வார்த்தைகளை மனைவிமார்களால் தாங்க முடியவில்லை. போதையால் இருசக்கர – நான்கு சக்கர வாகனங்களை ஓட்டி அகாலமாக மாண்டு போகிறார்கள். கிரிமினல் நடவடிக்கைகளில் இளைஞர்கள் இறங்குகிறார்கள். குவாட்டர் மதுவிற்காக கொலை கூட செய்யத் தயங்காத மனநிலை அவர்களிடம் மேலோங்கி வருகிறது.

சட்டம் ஒழுங்கு குலைந்து ரவுடியிசம் தலைதூக்குகிறது. பெற்றோரை அடிக்கும் நிலைக்கு செல்லும் இளைஞர்களையும் பார்க்கின்றோம். மானம், மரியாதை இழந்து தெருவோரம் போதையில் கிடப்பவர்களை பார்க்கிறோம். குடிபோதையில் பேருந்தில் ஏறி நடத்துனரிடம் தகராறு செய்பவர்கள் – உணவகங்களில் சாப்பிட்டு விட்டு தகராறு செய்யும் போதை மன்னர்கள் – இதுவெல்லாம் தினம் தினம் நாம் காணும் காட்சிகள்.

இடதுசாரி கட்சிகளின் மாதர் அமைப்புகள் மதுக்கடைகளுக்கு பூட்டு போட்டு போராடினார்கள். காந்தியவாதிகள் இயக்கம் நடத்தினார்கள். எண்ணற்ற மகளிர் அமைப்புகள் போராடின. அறிஞர் பெருமக்கள் மதுவின் தீமைகளை எதிர்த்து எழுதிக் குவித்தார்கள். இதனை வலியுறுத்தி எத்தனையோ நல்ல திரைப்படங்கள் வந்தன. அரசாங்கமே பிரச்சார படங்களை வெளியிட்டன. அறுவைசிகிச்சை எத்தனையோ நடைபெற்றன. ஆனால் நோயாளி பிழைக்கவில்லை.

நாட்டின் எல்லையில் பகை நாட்டுப்படைகள் கால் வைத்தால் தேசமே அனைத்து வேறுபாடுகளையும் கடந்து ஓரணியில் வருகின்றன. அதேபோல் மது தீமையை ஒழிக்க தேசமே ஒன்றுபடவேண்டும். குறிப்பாக அரசியல் எண்ணங்கள் குறுக்கிடாத பொது நிலைப்பாட்டிற்கு தேசம் வரவேண்டும். இதனை செய்யத் தவறினால் எதிர்கால வரலாறு நம்மை குற்றவாளிக் கூண்டில் ஏற்றி கண்டிக்கும்.

தன் சிந்தனை, சொல், செயலில் தனது இறுதிமூச்சுவரை மதுவிலக்கை போதித்தவர் மகாத்மா காந்தி. அவரை தேசத் தந்தையாக போற்றும் நம் தேசத்தில், அவரது பிறந்த நாளை அகிம்சை தினமாக கொண்டாடி வருகிறோம். ஆனால், அவர் போதித்த மதுவிலக்கை விட்டு விட்டோம்.

இந்தியாவை ராமராஜ்யமாக மாற்றுவோம் என வாய் சவடால் அடிக்கும் மோடி, காந்தி பிறந்த குஜராத்தில்கூட மது விலக்கை முழுமையாக அமல்படுத்த முடியவில்லை என்பது அவமானம் அல்லவா!

போதை அரக்கன் அராஜகமாக ஆட்சி செய்யும் தேசத்தை காந்தி தேசம் என்று அழைப்பது இந்தியாவிற்கு தேசிய அவமானம் – தேசிய தலைகுனிவு!


தொடர்புக்கு: 96007 23726



நீ.சு.பெருமாள்

# காந்தியை எதிர்த்த சனாதனிகள்...

**பல்வேறு மொழிகள், கலாச்சாப் பண்பாடுகள் கொண்ட இந்திய ஒன்றியத்தில் அனைத்து மக்களையும், தேச விடுதலை என்ற ஒற்றை கோரிக்கைக்காக அணி திரட்டும் வகையில் இந்தியா முழுவதிலும் சுற்றுப்பயணம் செய்தார். ஒவ்வொரு பகுதி மக்களின் பிரச்சனைகளும் காந்திக்கு புதிய அனுபவத்தை கற்றுக் கொடுத்தது.**



பிரிட்டனின் அடிமைத்தனம் ஒருபுறம் இருக்க, இந்திய மக்களிடையே நிலவும் ஆண்டான் அடிமைத்தனம் மற்றும் ஆன்மீக தளத்தில் நிலவும் தீண்டாமைக் கொடுமைகள் என வேறு பல சிக்கல்கள் இந்த மண்ணில் நிலவி வருவதை உணர்ந்த காந்தி அனைத்தையுமே எதிர்த்துக் களமாடும் முடிவுக்கு வருகிறார்!

தீண்டாமையை எதிர்பதற்கெனவே இந்தியா முழுமைக்கும் 1934ல், அதாவது தம்முடைய 64 வயதில் சுற்றுப் பயணம் செய்தார்.

சாதி இந்துக்களின் மிகப் பெரும்பான்மையினர் காந்தியை ஆதரித்தாலும், சனாதனிகள் கடுமையான முறையில் மிகத் தீவிரமாக எதிர்த்தனர்.

"அரிசன மக்களை ஆலயத்திற்குள் அழைத்துச் செல்வதற்காகத்தான் இந்தச் சுற்றுப் பயணம் என்றால், அதனை நாங்கள் தீவிரமாக எதிர்க்கிறோம். சனாதன தர்மம் என்பது முனிவர்கள், ரிஷிகளால் உண்டாக்கப்பட்டது. அதை குஜராத்தியான காந்தியால் சிதைக்க முடியாது. தீண்டாமை ஒழிப்பு என்கிற பெயரில் காந்தி மேற்கொள்ளும் நடவடிக்கைகள், அரிசன மக்களே ஏற்பதாக இல்லை என்பதுதான் நிதர்சனமாகும்" இவ்வாறு அறிக்கை விட்டவர்கள், பாஷ்யபாவக்கு வி.வெங்கட்ராம சாஸ்திரியார், பிரசங்கபானா எஸ்.வைத்தியனாத சாஸ்திரியார் போன்ற பண்டிதர்கள் கையெழுத்திட்டு அறிக்கை வெளியிட்டு இருந்தனர்.

இன்னொரு புறம் அரிசன மக்களுக்காகவே உழைக்கின்ற சான்றோர் பெருமக்களும் காந்தியை விமர்சித்தனர். "தாழ்த்தப்பட்டோரை நீங்கள் அரிசனங்கள் என்று பெயர் வைத்து அழைப்பது வேதனையைத் தருகிறது. குறைந்தபட்சம் தாழ்த்தப்பட்ட மக்களை கலந்து ஆலோசித்திருக்க வேண்டும்" என்று சுவாமி சகஜானந்தா, ராவ்பகதூர் சீனிவாசன் ஆகியோர் விரிவான அறிக்கை ஒன்றை தருகின்றனர்.

"தாழ்த்தப்பட்டவர்களை நான் கலந்து ஆலோசிக்கவில்லை என்று சொல்வது தவறு. அந்த மக்கள் என்னைச் சந்தித்து உரையாடினார்கள். அந்த உரையாடலில் தான் எனக்கு இந்தப் பெயர் நினைவுக்கு வந்தது. என்றென்றும் எங்களை கீழானவர்களாக வைத்திருக்கும் எந்தச் சொல்லினாலும் எங்களை அழைக்க வேண்டாம் என்று அந்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் இருப்பவரே ஒருவர் என்னிடம் கேட்கிறார். எப்படி அழைக்கலாம்? என அவரிடமே கேட்டேன்.

நரசிங் மேத்தா என்கிற குஜராத் கவிஞர் தாழ்த்தப்பட்ட மக்களை 'கடவுளின் குழந்தைகள்' என்று அழைக்கிறார். 'அரிசன்' என்கிற பெயரை அந்தக் கவிஞர் பயன்படுத்துவது எங்களுக்கெல்லாம் விருப்பமாக உள்ளது என்று அந்த் சமூகத்திலேயே இருந்து ஒருவர் எனக்கு பாடம் நடத்தினார். அதன் பின்னர்தான் நான் அரிசன் என்கிற பெயரை ஏற்றுக் கொண்டேன்.

மேலும் கட்டாய ஆலய நுழைவுப் போராட்டங்களைத் தவிர்க்கலாம் என்றும், பிறரைப் போல நாங்களும் ஆலயத்திற்குள் சென்று வழிபடலாம் என்கிற உரிமை கிடைத்தால் போதும். நாங்கள் விரும்புகிற நேரத்தில் ஆலயத்திற்குள் சென்று வழிபடுவோம் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் காந்தியை வலியுறுத்துகின்றனர்.

> "ஆலயப்பிரவேச இயக்கத்தில் அரிசன மக்கள் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என்று நான் அழைப்பதில்லை. அதே நேரத்தில், சாதி இந்துக்களுக்கு இருக்கும் உரிமைகள் எல்லாமே ஆண்டவனின் வழிபாட்டுத் தலத்தில் அனைத்து மக்களுக்கும் இருக்க வேண்டும் என்பதே என் நிலைபாடு. இதில் எந்தச் சமரசமும் செய்வதற்கில்லை" என்றார் காந்தி.

காந்தியின் இந்த உறுதியான கொள்கைக்கு அவரின் சொந்த வாழ்க்கையில் நடைபெற்ற சில சம்பவங்களும் காரணமாக இருந்தன. பாரிஸ்டர் பட்டம் பெறுவதற்காக லண்டன் செல்ல முடிவெடுத்தபோது, ஊர்த் தலைவர் சேத் என்பவர் "காந்தி கடலைத் தாண்டி பயணிக்கக் கூடாது. அவ்வாறு பயணித்தாலும் நாம் நம் ஊரை விட்டு விலக்கி வைக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, நம் மத நம்பிக்கைக்கு விரோதமாகப் பயணப்படும் காந்தியை யார் உதவி செய்தாலும் அவர்களும் ஊரை விட்டு விலக்கி வைக்கப்படுவார்கள். முடிவு இப்போது காந்தியின் கையில்தான் இருக்கிறது" என ஊர்க் கூட்டத்தில் முடிவெடுக்கப்படுகிறது.

ஆனாலும் காந்தி தன் முடிவில் இருந்து பின் வாங்காமல் லண்டன் பயணத்தை தொடர இருப்பதாகத் தெரி வித்தார். காந்தியின் சொந்த ஊர் கடல் பயணத்தை எதிர்த்தது.

அதைவிட பாரிஸ்டர் பட்டம் பெற்று அண்ணல் காந்தியடிகளாக இந்தியா முழுவதிலும் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, 1925ல் கன்னியாகுமரி கோயிலில் அனுமதிக்க மறுத்தனர்.

கோயில் வெளிப் பிரகாரங்களில் வேண்டுமானால் சுற்றிப் பார்க்கலாம் என நிர்வாகிகள் காந்திஜியிடம் தெரிவிக்கின்றனர்.

"தீண்டாமை ஒழிப்புப் போர்வீரர்களில் நானும் ஒருவன். என்னை நான் தோட்டியாகவே நினைத்து வாழ்ந்து கொண்டிருப்பவன். அனைவருக்குமான ஆலய நுழைவு எப்பொழுது சாத்தியமோ அந்த சமயத்தில் நான் வழிபாடு செய்து கொள்கிறேன். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். என் மனதிலும் இந்த வருத்தம் ஏற்படுகிறது; கோயிலின் முழு பிரகாரத்தை சுற்றி வர அனுமதிக்கப்பட்டுள்ளேன். கடல் கடந்து இங்கிலாந்திற்குச் சென்றதால் கோயிலின் மூலஸ்தானத்திற்குச் செல்ல அனுமதியில்லை என்கிறார்கள். அதே போல சில பிரிவு மக்களை தீண்டத்தகாதவர்கள் என அடையாளப்படுத்தி பிறப்பின் அடிப்படையில் அனுமதி மறுக்கப்படுகிறது. இந்த வழக்கத்தை எவ்வாறு ஏற்பது எனத் தெரியவில்லை.

தீண்டத்தகாதவர்களும், மிலேச்சர்களும் கன்னியாகுமரி அம்மனை தரிசித்தால் அம்மனுக்கு தீட்டு படும் என்பதே மூட நம்பிக்கைதானே? ஆதி காலத்தில் இருந்தே இந்த மூட நம்பிக்கைகள் இருந்து வருகிறதா எனத் தெரியவில்லை. அவ்வாறு ஒரு போதும் கடவுள் பேதம் பார்க்க மாட்டார் என என்னுடைய அந்தராத்மா சொல்கிறது.

ஒருவேளை ஆதி காலத்திலும் இருந்திருக்கிறது என்றால் அது பாவமே. ஒரு பாவமான காரியம் அது பரம்பரை பரம்பரையாக தொடர்கிறது என்பதற்காகவே அது பாவமில்லாததாகவோ அல்லது சிறப்புக்குரியதாகவோ ஆகிவிடாது!

ஆகையால் இந்தப் பாவத்தை கடவுளின் பெயரால் மனிதர்களில் ஒரு பிரிவினரை களங்கப்படுத்தும் இந்த நம்பிக்கைகளை அகற்றுவதற்கு ஒவ்வொரு இந்துவுக்கும் கடமை உள்ளது. எதிர்காலங்களில் அனைவருக்குமான ஆலய நுழைவுத் தரிசனங்கள் சாத்தியப்படும் என நம்புகிறேன்" என்று பதிவு செய்தவர் காந்திஜி!

ஆனால் இன்றைய நிகழ்கால வரலாறு என்பது கடலைத் தாண்டி பயணித்தால் மிலேச்சன் ஆவான் என்கிற இழி பட்டத்தை காலம் தகர்த்தெறிந்துள்ளது. எந்த சனாதன தர்மத்தின் கீழ் உயர்சாதி வகுப்பினர் அவ்வாறு கூப்பாடு போட்டார்களோ, அவர்களே பிற்காலத்தில் கடலைத் தாண்டி பயணித்து, அந்த நாடுகளில் கோயில்களைக் கட்டி 'பேஷாக' நெய்வேத்தியம் செய்து வருகின்றனர்.

ஆனால் அன்றைக்கு... கணித மேதை ராமாநுஜம் கடல் கடந்து பயணித்தார். எனவே மிலேச்சன் என்பதால் அவர் இறந்தபோது இறுதிச் சடங்கினைக் கூட பிராமணர்கள் செய்ய மறுத்தனர் என்பதும் கசப்பான வரலாறாகும்.

1927 ஆம் ஆண்டில் மன்னார்குடிக்கு காந்தி வருகை தந்தபோது, கோட்டூர் சமஸ்கிருதப் பள்ளியின் முதல்வரான உ.வெ.தில்லியம்பூர் சக்கரவர்த்தி ஆச்சாரியர் மகாத்மாவை சந்திக்கிறார்.

சாத்திரங்களில் தீண்டாமை இருக்கிறது என்றும், காந்தியின் தீண்டாமை ஒழிப்புக்கு சாத்திரங்களில் இருந்து ஆதாரம் காட்ட முடியாது என்று வாதாடுகிறார்.

மேலும் அரிசன மக்களுக்கு வீடு கட்டித் தரலாம், அன்னதானம் செய்யலாம், கைராட்டிணம் வாங்கிக் கொடுத்து உதவலாம், ஆனால் அவர்களைத் தீண்டுதல் கூடாது. சுவாமி திருஉலாவீதி வருகிற சமயத்தில் வணங்கலாம். ஆலயப் பிரவேசம் கூடாது என்கிற வகையில் காந்தியிடம் வாதிடுகிறார்.

சாத்திரங்களில் ஒரு சில பகுதிகளை மட்டுமே வைத்துக் கொண்டு பேசுவது சரியல்ல என்றும், எந்தச் சாத்திரத்தையும் நூற்றுக்கு நூறு அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை என்றும் காந்தி பதில் அளிக்கிறார். ஒரு ஸ்மிருதியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொண்டு மற்றொரு பகுதியை விட்டுவிடலாமா என்கிறார் ஆச்சாரியார்.

இந்து மதத்தில் சாத்திரங்கள் என்று கூறப்படும் நூல்கள் நூற்றுக்கணக்கில் உள்ளன. ஆகையால் ஒரு விசயம் நல்லதா, கெட்டதா என வரையறுப்பதற்கு நான் குறிப்பிட்ட நூலை மட்டுமே ஆதாரமாகக் கொள்ளமாட்டேன். இந்து சமயத்தை மொத்தமாகவே வைத்துப் பார்க்கிறேன்.


சாத்திரங்களில் சொல்லப்பட்டதை சரியா தவறா என அளப்பதற்கு எனது மனசாட்சியையும், சத்தியம் என்கிற அளவுகோலையும் வைத்துப் பார்த்து அதனடிப்படையில்தான் எனது கருத்துகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்கிறேன்.

"அனைத்து உயிர்களிடத்திலும் நானே இருக்கின்றேன்" என்று பகவத் கீதையில் கண்ணன் சொல்கிறான்.

அப்படியெனில் மனிதர்களிடத்தில் எப்படி பேதம் இருக்க முடியும். அவ்வாறு சாத்திர நூல்கள் சொன்னால் அதை புறந்தள்ளுவதுதான் நல்லது என்கிறது என் மனசாட்சி என நீண்ட விளக்கமளிக்கிறார் காந்தி! அப்படியனால் தீண்டாமை சத்தியத்திற்கு விரோதமானது என்கிறீர்களா? என ஆச்சாரியார்

தொடர்ச்சி 10ம் பக்கம்

# புதுமைப்பித்தனை வெ




பால் நிலவன்

**பாரதியை 'மகாகவி' என்று சொல்வதை ஆரம்பத்தில் ஆய்வாளர்கள் சிலர் ஏற்க மறுத்தனர். அவரது பாடல்களின் பொருண்மை அழகைச் சொல்லாற்றலை, தரி சித்த தமிழ்ச் சமூகம், அவரது மகோன்னத இடத்தை உறுதிசெய்த பிறகு, அவரை 'மகாகவி' என ஏற்றுக்கொள்ள முன்வந்தனர். புதுமைப்பித்தன் மறைவுக்குப் பின் அவருக்கு நேர்ந்த கதியும் கிட்டத்தட்ட இதேதான்.**

சுந்தர ராமசாமி, தொ.மு.சி. போன்றவர்கள் 'புதுமைப்பித்தன் மலர்' வாயிலாக மீண்டும் அவரது மாபெரும் ரூபத்தை மீட்டெடுத்தனர். பின்னர்தான் பாரதி, புதுமைப்பித்தன் என்ற வரிசைப் பாதையைத் தமிழின் நவீன மரபு கண்டடைந்தது. அதில் ஜெயகாந்தன், ஆதவன், சுந்தர ராமசாமி, வண்ணநிலவன் என அழகிய வரிசை உருவானது.

புதுமைப்பித்தன் எழுத்து வீச்சு: இன்றைய தேடல் நிறைந்த புதிய வாசகன் மட்டுமல்ல, நாளைய வாசகனுக்கும் புதுமைப்பித்தனிடம் பெற ஏதோ ஒன்று மீதமிருக்கிறது. அந்தத் தேடலுக்குப் பெயர் புதுமை, சுந்தர ராமசாமி அந்தப் பெயரைக் கேள்விப்பட்ட மாத்திரத்தில் எக்கச்சக்கமாகக் கிண்டலடித்திருக்கிறாராம். அதென்ன 'புதுமைப்பித்தன், புதுமையின் மீது பித்து அதிகமான நிலையோ என்று அவருக்குக் கேள்விகள் எழுந்தன. பித்தம் அதிகமானால் அதில் தெளிவு இருக்காதே என்றெல்லாம் அவர் ஆரம்பத்தில் தவறாகப் புரிந்துகொண்டுவிட்டாராம். ஆனால், மரபான கதை சொல்லும் பாதைக்கு மாறாகப்புதுமைப்பித்தன் குறுக்குப் பாய்ச்சல் செய்து, புதிய இலக்கியப் பயிர்களைத் தழைக்கச் செய்ததைக் காணநேர்ந்த பிறகுதான், அவர் தவிர்க்க முடியாதவர் என்ற புரிதல் கூ.ராவுக்கு ஏற்பட்டுள்ளது.

உண்மையில் புதுமைப்பித்தனின் எழுத்து வீச்சை இன்னமும் யாரும் தாண்டவில்லை என்பதுதான், தமிழ் இலக்கிய வரலாற்றின் சோகம். என்றாலும், புதுமைப்பித்தனின் உரைநடைப் பாதையில் சென்ற நவீனத் தமிழ் இலக்கியப் பயணத்தின் தூரம் மிக நீண்டது. அந்தப் பயணத்தைச் சாத்தியப்படுத்திய படைப்பாளிகளின் எண்ணிக்கையும் அளப்பரியது, ஜெயகாந்தனிடம் சமூகப் பார்வை இருக்கிறது, ஆனால்,நகைச்சுவை இல்லை. சுஜாதாவிடம் நகைச்சுவை இருக்கிறது. ஆனால், முற்றுமுழுதான சமூகப் பார்வையில்லை.ஆதவனிடம் சமூகமும் நகைச்சுவையும் எல்லையற்ற தேடலும் இருக்கிறது. பாமரனிடம்கூடப் பேச முடிகிற புதுமைப்பித்தனின் எளிய அளவளாவல் ஆதவனிடம் இல்லை. சுந்தர ராமசாமியிடம் மொழியின் பிரக்ஞையும் உணர்வின் மெய்மையும் ஒரு கவிதையைப் போலப் பிரவாகம் எடுக்கிறது. ஆனால், புதுமைப் பித்தனுக்கு வாய்த்த எல்லையற்ற கற்பனை வளம் சற்றே குறைந்துவிடுகிறது.



இலக்கிய சிருஷ்டியினூடே ஜெயமோகனுக்கு அரசியல் குறுக்கீடுகளும் எஸ்.ராமகிருஷ்ணனுக்கு நேர்ந்த மேலை இலக்கியத் தாக்கத்திலிருந்து விடுபட முடியாத வாசிப்புச் சுமையும், புதுமைப்பித்தனின் நகைச்சுவையின் சிறு வாசம் கூட நெருங்க முடியாத நிலையை ஏற்படுத்திவிட்டன. இருவரது மாயவாதப் புனைவு வெளிகளிலும் புதுமைப்பித்தனின் சாயல்களையும் அதை மீறும் முயற்சிகளையும் காண முடிகிறது என்பதை மறுக்கமுடியாது. அசோகமித்திரன் புதுமைப்பித்தனைவிட அதிகமாகவே பெண்கள்மீது கொண்ட அக்கறையையும் கவலையையும் காண முடிகிறது. ஆனால், புனைகதைகளை விடப் பத்தி எழுத்துகளில்தான் அசோகமித்திரனின் நகைச்சுவை பீறிட்டெழுகிறது. இந்நிலையில்தான் நாம் புதுமைப்பித்தனிடம் மீண்டும் வந்துசேர வேண்டியிருக்கிறது.

புதுமைப்பித்தனின் 'புதுமை' என்ன?: மிகப்பெரிய மக்கள் சமுதாயமும் உற்றார் உறவினர்களும் வாய்ப்பதோடு, அவர்களில் ஒருவராக அக்கூட்டத்தின் இடையே வாழப் பழகியவருக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பங்களிலிருந்துதான் இந்த அபரிமிதமான நகைச்சுவை உணர்வு பீறிட்டெழும், அவரது எழுத்துகள் வாயிலாக இதை வாசித்துணர முடிகிறது. புதுமைப்பித்தனின் சமகால எழுத்தாளர்கள் பலரிடமும் யாரையும் புண்படுத்தாத, எல்லோரையும் அரவணைக்கும் இந்த நகைச்சுவை அம்சத்தைக் காண முடியும், எம்.வி.வெங்கட்ராம் கதைகளிலும் நகைச்சுவையைக் காண முடியும். மிகப் பெரிய வாழ்வனுபவமும் அவரது கதைகளில் வெளிப்படும். அழகியல் சொல்முறையில் ந.பிச்சமூர்த்தி, பி.எஸ்.ராமையா, கு.ப.ரா, மௌனி போன்றவர்களிடம் காணப்படும் கதைக் கச்சிதம் புதுமைப்பித்தனிடம்கூடச் சில வேளைகளில் காண முடிவதில்லை. என்றாலும், இவர்கள் பலரும் தவறவிட்டது 'புதுமை'. அதென்ன புதுமை? நூற்றுக்கும் மேற்பட்ட கதைகளை அவர் எழுதியிருப்பினும் சிற்சில கதைகளின் வழியே அதைப் புரட்டிப் பார்க்கலாம்.

துப்பறியும் கதை, வரலாற்றுக் கதை, புராணக் கதை, குடும்பக் கதை, சின்னஞ்சிறு துணுக்குக் கதைகள் எனப் பலரும் எழுதியதை இவர் எழுதிப் பார்க்கும்போது, நவீனத்துவம் கலந்த அபரிமிதமானபுனைவுவெளியாக அது விரிகிறது. 'மனிதன், மனிதம், மனிதாம்சம்' இதுதான் தூக்கலாகத் தெரிகிறது. வாடகை கட்ட முடியாமல், மளிகைக் கடை பாக்கி அடைக்க முடியாமல் திணறும் நடுத்தர வாழ்க்கையிலும் கடவுளையே ஒட்டலுக்கு அழைத்துச் சென்று, காபி வாங்கிக் கொடுத்து, கதை பேசியபடியே வீட்டுக்கு அழைத்துவந்து, விருந்தினராகத் தங்கவைத்து, தனது பத்திரிகைக்கு ஆயுள் சந்தா கட்டவைத்தது ஒரு கற்பனைதான் (கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்'). ஆனால், அதுதான் எவ்வளவு சுவையானது. இவரது சொந்த வாழ்க்கையின் அவலம் இலக்கியத்தில் அங்கதமாக எதிரொலிக்கிறது என்கிற கோ.கேசவன் வார்த்தைகள் புதுமைப்பித்தன் யார், அவரது எழுத்துகள் எப்படிப்பட்டவை என்பதை நமக்கு உணர்த்துகின்றன.

புதுமைப்பித்தனின் கதையுலகு: நகரத்தில்

---

# விவசாயப் போராளி எம்.மாசி



அசோகன்

**அதிகாரம் சட்ட திட்டங்களால்...!
அடிமைப்படுத்தி அடக்கி...!
ஆள நினைக்கும் போது...!
பிறப்பதுதான் புரட்சி...!**

1943 ல் பட்டுக்கோட்டையில் தோலில் இருக்கும் துண்டையும், மேல் சட்டையையும் காலில் போட்டிருக்கும் செருப்பையும் கையில் எடுத்துக்கொண்டு தான் பிற்படுத்தப்பட்ட ஜாதியின மக்கள் கடை வீதியில் நடக்க முடியும்.

தஞ்சையின் வானம் பார்த்த நிலப்பகுதிகளான ஒரத்தநாடு, கந்தர்வகோட்டை, பட்டுக்கோட்டை, மதுக்கூர், அதிராம்பட்டினம், சேதுவாசத்திரம், பேராவூரணி, பெருமகளூர் அறந்தாங்கி ஆகிய பகுதிகளாகும்.

இந்தப் பகுதிகளின் விவசாயிகள், விவசாய தொழிலாளர்களின் பொதுவுடமை சித்தாந்தத்தின் புரட்சி நாயகன் எம்.எம். என்கிற மாசிலாமணி ஆவார்.

இவர் பிறந்தது என்னவோ இன்றைய புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் ஒன்றியம் பனங்குளம் கிராமமாகும்.

இந்த கிராமத்தில் செல்வந்தர் குடும்பத்தில் 1923 பிப்ரவரி 23 ஆம் தேதி முத்துக்கருப்ப மணியக்காரர் – சுந்தராம்பாள் தம்பதியினருக்கு எம்.எம்.என்கிற மாசிலாமணி பிறந்தார்.

தொடக்கக் கல்வியை கீரமங்கலத்திலும், உயர்கல்வியை ஒரத்தநாடு முத்தம்மாள் சத்திரத்திலும் படித்தார்.

ஒரத்தநாடு பகுதியில் சரபோஜி மன்னரால் ஆரம்பிக்கப்பட்ட முத்தம்மாள் சத்திரத்தில் 1941 ஆம் ஆண்டு வாக்கிலேயே மாணவர் சம்மேளனம் அமைத்து தனது புரட்சிகரமான அரசியல் வாழ்க்கை பயணத்தை எம். மாசிலாமணி தொடங்கினார்.

1943 இல் கே.பி.நடராஜன் தலைமையில் விவசாயிகள் விவசாய தொழிலாளர்களின் நடை பயணம் அறந்தாங்கியிலிருந்து இவர் பிறந்த கிராமமான பனங்குளம் வழியாக பட்டுக்கோட்டை நோக்கி சென்றது.

மாணவர் சம்மேளனத்தின் வழிகாட்டுதலின்படி அந்த பேரணியில் கலந்து கொண்டு அந்த நடை பயணத்தில் கலந்து கொண்டதன் காரணமாக...! விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களின் அவலங்கள் இவர் மனதை கலங்கடித்தது. பட்டுக்கோட்டையில் ரயில்வேயில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை அமைத்து செயல்பட்ட பஞ்சநாதன் தேவர் வீட்டில் தங்கினார். அன்றைய காலகட்டம் அவர் வீடு தான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகமாக செயல்பட்டது.

ஆரிய பார்ப்பானியத்திற்கும் ஜமீனுக்கும் பட்டுக்கோட்டை பகுதிகள் கட்டுப்பட்டு கிடந்தது.

தோளில் இருக்கும் துண்டையும் மேல் சட்டையையும் மற்றும் காலில் இருக்கும் செருப்பையும் கையில் எடுத்துக்கொண்டு நடக்க வேண்டும்.

மீறி நடப்பவர்கள் சாணிப்பால் சவுக்கடிக்கு உள்ளானார்கள்.

இந்த அவலங்களை கண்ட மாசிலாமணியின் எண்ணத்தில் இதற்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

இந்த காரணத்தால் தனது தாய் தந்தை சகோதர சகோதரிகள் மற்றும் சொந்த பந்தங்களை விட்டு பட்டுக்கோட்டையிலேயே நிரந்தரமாக தங்கினார்.

1946ல் பட்டுக்கோட்டை மற்றும் பேராவூரணியிலும் ஜமீன் இனாம் ஒழிப்பு மாநாட்டில் செயலாளராக செயல்பட்டு சிறப்பாக நடத்தி காட்டினார். இதன் காரணமாக விவசாயிகள் மக்கள் மத்தியில் இவருக்கு மிகுந்த செல்வாக்கு ஏற்பட்டது.

1952 ஆம் ஆண்டு பட்டுக்கோட்டை தாலுகா, ஒரத்தநாடு, கந்தர்வகோட்டை, பேராவூரணி, அறந்தாங்கி உள்ளிட்ட பகுதி செயலாளராக தேர்வு செய்யப்பட்டு செயல்பட்டார்.

உழுவனுக்கு நிலம் சொந்தம் என்ற கல்கத்தா கட்சி முடிவை ஏற்று பட்டுக்கோட்டை தாலுகா அத்திவெட்டி கிராமத்தில் விவசாயிகளுக்கு நிலங்களை பெற்று தந்ததில் இவருக்கு பெரும் பங்கு உண்டு.

அதுபோல் மக்கள் பிரச்சினைகளான ரேஷன் பதுக்கலை வெளி கொண்டு வந்தார்.

ஆவணம் தோழர் பெருங்குடி சிலுவை முத்து கொலை வழக்கு, மதுக்கூர் கோபாலசமுத்திரம் நிலப்பிரச்சினை, அடக்கத்தேவன் விவசாயிகள் நிலப்பிரச்சினை, சில்லத்தூர் வெட்டிக்காடு விவசாயிகள் நிலப்பிரச்சினை வெற்றி பெற இவர் போராட்டம் காரணமாக அமைந்தது.

இவர் காங்கிரஸ் நடத்திய கள்ளுக்கடை மறியல், கதர் ஆடை அணிவது, சுதந்திர போராட்டத்திலும் கலந்து கொண்டு சிறை சென்றார். மாவட்டத்தில் தியாகிகள் பட்டியலில் ஐந்தாவது இடத்தில் உள்ளார்.

தந்தை பெரியார் வழிகாட்டுதலில் போராட்டங்களிலும் கலந்து கொண்டார்.

1948 இல் கட்சி தடை செய்யப்பட்டபோது கைது

வாழ நேர்ந்த புதுமைப்பித்தனுக்கு அதன் முரண்களைப் பேசாமல் இருக்க முடியவில்லை. ‘பொன்னகரம்’ கதை நகரத்தை நரகம் என்றே சொல்கிறது. இன்னொரு கதையில் கடைக்கு வருவோரிடத்தில் எல்லாம் சிற்றுண்டி வகைகளைப் படபடவென ஒப்பிக்கும் சர்வர் ஒரு மெஷினோ என வியக்கிறார். இவரது கைக்குட்டை கீழே விழுந்தபோது, ‘சார்.. உங்க கர்சீப்’ எனக் கொடுப்பதைப் பார்த்து மனிதன்தான் என நிம்மதியடைகிறார். சென்னை எலெக்ட்ரிக் டிரெயினில் பயணிக்கும்போது, எதிரே வந்தமரும் பெண்களை நினைத்துச் சிலாகிக்கும் ‘சுப்பையா பிள்ளையின் காதல்கள்’ வெறும் கற்பனைகள்தான் என்பதையும் சிரிக்கச்சிரிக்கச் சொல்கிறார்.

பழமைவாத அடிமைத்தளையில் சிக்கியபோதும், புதுமைப்பித்தன் காட்டும் பெண்கள், மீறல்களுக்கான அசாதாரணமான முடிவுகளை வெகுசாதாரணமாக எடுக்கிறார்கள். தவறான அர்த்தங்கள் கற்பிக்கும் உலக நியதிகளின் நடுவே ‘இயற்கையின் தேவை’

# வாசித்தல்

(கல்யாணி, வாடாமல்லிகை) என்றொரு அழகான சொற்றொடரை முன்வைக்கிறார். அக்கால மனிதர்கள் பெரும்பாலும் கடவுள் மீதே பாரத்தைப் போட்டுவிட்டுக் காரியங்கள் ஆற்றச் செல்வதாலோ என்னவோ, ஏராளமான கதைகளில் கடவுள் கடுமையாக விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறார். மத நிறுவனங்களின் கட்டுத்திட்டங்களில் சிக்கித் தவிக்கும் மனிதர்களைக் கைதூக்கி மேலே ஏற்ற முயல்கிறார். யதார்த்த வாழ்க்கை முறைக்காக மட்டுமே சாதியப் பெயர்களைப் பயன்படுத்தியதோடு, சுயசாதி எள்ளலையும் அவர் செய்யத்தவறியதில்லை. ‘எப்போதும் முடிவிலே இன்பம்‘ என்ற கதையில், அவரது மேதைமையைவிட மேட்டிமைத்தனம் வெளிப்பட்டதாக விமர்சகர்கள் பலரும் சாடினர். சாதிய அடுக்குகளின் அவலங்களைக் கடுமையாகப் பகடி செய்யும்விதமாகத்தான் இக்கதை வெளிப் பட்டுள்ளதை நுணுகிக் கற்பவர்கள் உணர முடியும்.

தன்னை ஒரு கதையில் நாஸ்திகன் எனவும் அழைத்துக்கொள்கிறார் (விநாயகர் சதுர்த்தி). அதேநேரம், கடவுள் இருப்பது உண்மையானால் மனிதர்களை ஏன் இப்படி மோசமான ஸ்திதியில், ஆசைகளின் பாழ்வெளியில் வைத்திருக்கிறார் என்பதுதான் அவரது ஆதாரமான கேள்வி. சீதையைத் தேடுவதாகக் காட்டில் பல காலம் அலைந்து திரிந்து வாழ நேர்ந்த ராமன் தூய்மையானவராம். அவருக்கு எந்தச் சோதனைகளும் வேண்டாம். ஆனால், ராவணனின் மாளிகைத் தோட்டத்தில் வாழ நேர்ந்தும் அவரை நெருங்கவிடாமல் வைத்திருந்த சீதை அக்னிப் பரீட்சையில் இறங்க வேண்டுமாம். இந்தச் சந்தேகங்கள் ‘அகலிகை’, ‘சாபவிமோசனம்‘ கதைகளில் கடுமையாக வெளிப்பட்டுள்ளன. சரயு நதிக்கரை பர்ணசாலையில் தன்னைத் தேடிவந்த சீதையைக் கண்ட அகலிகை ஆர்த்தெழுகிறாள், “அவன் கேட்டானா? நீ ஏன் செய்தாய்?” என்று அக்னிப் பரீட்சையில் இறங்கியதைக் கேள்வி எழுப்புகிறாள். இதுதான் புதுமைப்பித்தன் எழுப்பும் கேள்வி. மனைவியையே உலகத்தின் சந்தேகத்தைத் தீர்க்கத் தீயில் இறக்கிய இப்படிப்பட்ட ஆண் மூலமாகவா எனக்கு விடுதலை என்று சாபவிமோசனத்தை ஏற்றுக்கொள்ள விருப்பமின்றி மீண்டும் கல்லானாள் என முடியும் இந்தக் கதை.

இன்று எழுதும் பலரும் மொழிகளில் கைக்கெட்டாத விநோதச் சொற்களை வைத்துக் கொண்டு, மிரட்சியை உண்டு பண்ணுகிறார்கள். வாசகனை உள்ளன்போடு அணுகி, எளிய முறையில் சொன்ன புதுமைப்பித்தன் கதைகள்தான் இன்று வரை பேசப்பட்டுவருகின்றன. ‘காஞ் சனை’, ‘பொன்னகரம்’, ‘தெருவிளக்கு’ போன்றவை மிகவும் எளிமையானவைதான். ஆனால், ஆழமானவை. இதன் சூட்சுமம் பிடிபட்டுவிட்டால் வாசகன் கொண்டாடத் தொடங்கிவிடுவான். ‘கபாடபுரம்’, ‘சிற்பியின் நரகம்‘, ‘கயிற்றரவு’ போன்று விநோதமான உள்ளடகங்களைக்கூட புதுமைப்பித்தன் எடுத்தாண்டிருக்கிறார். ஆனால், அதனை மிகவும் சுவையாக எடுத்துப் பேசியிருக்கிறார். ஒரு படைப்பாளி கைக் கெட்டாத உலகங்களை, தத்துவங்களை, கற்பனைகளைக்கூடக் கதைகளில் உள்ளே கொண்டுவரலாம். ஆனால், வாசகனை அணுகவிடாமல் செய்துவிடக் கூடாது என்பதை விதவிதமாகப் பேசியுள்ள அவரது பல படைப்புகளை உள்வாங்கும் ஆவலோடு வாசித்துப் புரிந்துகொண்டால், நாம் அவரைக் கடந்துசெல்ல வாய்ப்பிருக்கிறது. புதுமைப்பித்தனின் முதல் கதை ‘குலோப்ஜான் காதல்’, ‘காந்தி’ இதழில் 1933 அக்டோபர் 18 அன்று வெளிவந்தது.

நன்றி: இந்து தமிழ் திசை அக்.23

# லாமணி

செய்யப்பட்டு வேலூர் சிறையில் இரண்டு ஆண்டுகள் கொடும் சித்திரவதைக்கு உள்ளானார்.

மேலும் மக்கள் உரிமை போராட்டங்கள் மற்றும் கட்சி போராட்டங்களை தலைமை தாங்கி நடத்தியதால் வேலூர், திருச்சி, அலிப்புரம், சென்னை சிறைகளில் ஐந்தாண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

இப்படி எண்ணற்ற போராட்டங்களை எம். மாசிலாமணி முன்னின்று நடத்தியதால் சோழமண்டலத்தின் வானம் பார்த்த பகுதி மக்கள் சுதந்திர சுவாச காற்றை சுவாசிக்க ஆரம்பித்தனர் என்றால் அது மிகையாகாது.

இன்றைய தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் உள்ளடக்கிய பகுதிகளின் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் ஆனார்.

அதிகார வர்க்கத்தால் தோழர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளை தீர்க்க சிந்தித்து தெளிவான ஆலோசனை கூறி கட்சி தோழர்கள் வெற்றி பெறுமாறு சமயோசிதன புத்தி கூர்மை ஆற்றல் படைத்தவர் மாசிலாமணி.

இவரோடு அரசியலில் பயணம் செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் வாட்டாகுடி இரணியன், ஜாம்பவான் ஓடை சிவராமன், ஆம்பல் ஆறுமுகம் செங்கப்படுத்தாங்காடு ரத்தினம் பிள்ளை...!

ஏ.எம்.கோபு, மணலி கந்தசாமி, கே.பி. நடராஜன், ஏ.கே.கோபாலன், நெடுங்காடி ராமச்சந்திரன், கே. ஆனந்தன் நம்பியார், எம்.கல்யாணசுந்தரம், கே. டி.ராசு, இ.லாரா, பஞ்



சநாதன் தேவர், கணபதி, தேவர், ஆம்பலாப்பட்டு ஏ,முருகேசன், வே.ஆ.சுப்பையா, டைலர் வைரக்கண்ணு, வெங்கரை மு.பழனிச்சாமி இப்படி எண்ணற்ற தலைவர்களின் வழிகாட்டுதலும் மன உறுதி படைத்த பல்லாயிரக்கணக்கான தோழர்களின் ஒருங்கிணைப்பிலும் கட்சியை திறம்பட வழி நடத்தினார்.

1975 ல் அரசியல் கல்விக்காக சோவியத் ரஷ்யா சென்றார். பட்டுக்கோட்டை நாடியம்பாள்புரம் நகர் மன்ற உறுப்பினராகவும், பால் பண்ணை தலைவராகவும் இருந்துள்ளார்.1998 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 ஆம் தேதி இயற்கை அவரை எடுத்துக் கொண்டது.

பொதுமக்கள் பிரச்சினைகளுக்கும் விவசா யிகள் பாட்டாளி வர்க்கத்திற்கும் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த தோழர் எம்.எம். வரலாற்று புகழ் எட்டு திசையிலும் பரவட்டும்.

**நினைவு தினம் 24.10.2022**

**தொடர்புக்கு: 6383087773**

தினமணி தீட்டிய தலையங்கம்

# மா(ஏ)ற்றத்தை நோக்கி...

காங்கிரஸ் கட்சிக்கு அடுத்தபடியாக இந்தியாவின் மிகப் பழைமையான கட்சியான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 24ஆவது தேசிய மாநாடு ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் நடைபெற்றது. கட்சியின் பொதுச் செயலாளராக தமிழரான டி. ராஜா இரண்டாவது முறையாக தேர்வு செய்யப்பட்டிருக்கிறார். தேசிய கட்சியின் அகில இந்தியத் தலைவராக தமிழர் ஒருவர் திகழ்வது, தமிழகம் தேசிய நீரோட்டத்திலிருந்து விலகிவிடவில்லை என்பதன் அடையாளம்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலகத்துக்கு பொதுச் செயலாளர் அல்லாமல் கே. நாராயணா, அதுல் குமார் அஞ்சான், அமர்ஜீத் கௌர், கானம் ராஜேந்திரன், பினோய் விஸ்வம் உள்ளிட்ட 10 பேர் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றனர். 125 உறுப்பினர்கள் கொண்ட தேசிய குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

எஸ்.ஏ. டாங்கே, ராஜேஸ்வர ராவ், பூபேஷ் குப்தா, ஹிரேன் முகர்ஜி, இந்திரஜித் குப்தா, ப. ஜீவானந்தம், எம். கல்யாணசுந்தரம், சி. அச்சுத மேனன், எம்.என். கோவிந்தன் நாயர், ஏ.பி. பரதன் உள்ளிட்ட மூத்த தலைவர்கள் பலரால் வழிநடத்தப்பட்ட இயக்கம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி. இப்போதும்கூட நல்லகண்ணு போன்ற நேர்மைக்கும், நாணயத்துக்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் தலைவர்கள் இருக்கும் கட்சியாக அந்த இயக்கம் தொடர்கிறது.

60 ஆண்டுகளுக்கு முன்பு கட்சியில் ஏற்பட்ட பிளவைத் தொடர்ந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்கிற பெயரில் சில மூத்த தலைவர்களும், தொண்டர்களும் பிரிந்ததைத் தொடர்ந்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலிமை இழந்திருக்கிறது என்றாலும்கூட, இயக்கம் தனது தத்துவம் சார்ந்த நிலைப்பாட்டில் பயணத்தைத் தொடர்கிறது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது.

மதச்சார்பற்ற தேசிய ஜனநாயகம் என்கிற குறிக்கோளை முன்னிறுத்தி அரசியல் பயணத்தை வகுத்துக் கொண்டிருக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 24ஆவது தேசிய மாநாடு சில முக்கியமான கொள்கை முடிவுகளையும், திட்டங்களையும் முன்னெடுத்திருக்கிறது. ஒரு காலத்தில் கம்யூனிஸ்ட் இயக்கம் ஒன்றுபட்டிருந்தபோது கட்சியின் சக்தி கேந்திரமாக இருந்த ஆந்திரத்தில் ஐந்து நாட்கள் நடந்த தேசிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல் தீர்மானம் முக்கியமானது. இடதுசாரி கட்சிகளை ஒருங்கிணைத்து பலப்படுத்துவது மட்டுமல்லாமல், மதச்சார்பற்ற ஜனநாயக கட்சிகளை ஒருங்கிணைத்து விசாலமான கூட்டணியை அமைப்பதை அந்தத் தீர்மானம் வலியுறுத்துகிறது.

தேசிய அளவில் மத்தியில் ஆட்சியில் இருக்கும் பாஜகவின் கொள்கைகளுக்கும், செயல்களுக்கும், திட்டங்களுக்கும் எதிராக ஒவ்வொரு மாநில அளவிலும் மாற்று சக்தியை உருவாக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் அங்கீகரித்து வழிமொழிகிறது.

காங்கிரஸ் கட்சியுடன் நேரடியாக தேர்தல் கூட்டணி அமைக்க வேண்டும் என்கிற கோரிக்கை மேற்குவங்கம் உள்ளிட்ட சில மாநிலங்களிலிருந்து மாநாட்டில் எழுப்பப்பட்டது. நேரடியாக காங்கிரஸஹுடன் மோதலில் இருக்கும் கேரள மாநில பிரிவின் எதிர்ப்பைத் தொடர்ந்து அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. அதே நேரத்தில், அந்தந்த மாநில அரசியல் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைத்துக் கொள்ளலாம் என்கிற நிலைப்பாட்டை எடுக்கிறது அரசியல் தீர்மானம்.

தமிழ்நாட்டில் சிபிஐ, சிபிஎம், காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் திமுக தலைமையிலான தேர்தல் கூட்டணியில் இருப்பதுபோல, ஏனைய மாநிலங்களிலும் கூட்டணி அமைப்பதை கட்சி வரவேற்கிறது என்பதை சொல்லாமல் சொல்கிறது அரசியல் தீர்மானம்.

தேசிய மாநாட்டைத் தொடங்கி வைத்த கட்சியின் பொதுச் செயலாளர் டி. ராஜா, அடுத்த மக்களவைத் தேர்தலில் நரேந்திர மோடி தலைமையிலான பாஜக தோல்வியைத் தழுவும் என்கிற நம்பிக்கையை வெளிப்படுத்தினார். மோடியின் ஆட்சிக்கு எதிராகக் குரல் எழுப்புகிறவர்கள் மாவோயிஸ்டுகள் என்று முத்திரை குத்தப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறார்கள் என்றும், அதற்கு ஜி.என். சாய்பாபாவின் அனுபவத்தை உதாரணம் காட்டியும் பேசினார் அவர்.

அரசியல் தீர்மானத்தில் இந்தியாவின் பன்முகத்தன்மையை சிதைக்கும் பாஜக அரசின் முயற்சிக்கு எதிராக கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஹிந்து, ஹிந்தி, ஹிந்துஸ்தான் என்கிற கோஷத்தின் மூலம் மொழி ரீதியாக, பண்பாடு ரீதியாக, இன ரீதியாக இந்திய அளவில் காணப்படும் பன்முகத்தன்மையை சிதைக்கும் முயற்சியில் பாஜக அரசு தீவிரம் காட்டுவதாக தீர்மானம் சுட்டிக்காட்டுகிறது. அரசியல் சாசனம் அங்கீகரித்திருக்கும் கூட்டாட்சித் தத்துவத்தை உதாசீனப்படுத்தும் போக்கையும் கண்டிக்கிறது 24ஆவது தேசிய மாநாட்டின் அரசியல் தீர்மானம்.

நூற்றாண்டு காண இருக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, கட்சியில் வயதானவர்களை அகற்றி இளைஞர்களுக்கு அதிகம் வாய்ப்பும் அங்கீகாரமும் வழங்க முடிவெடுத்திருப்பது வரவேற்புக்குரியது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் போலவே, தேசிய மாநில பொறுப்புகளில் உள்ள உறுப்பினர்களுக்கு வயதுவரம்பை 75 வயதாக நிர்ணயித்திருக்கிறது. கட்சியின் அனைத்து நிலைகளிலும் இளைஞர்களையும் மகளிரையும் முக்கியப் பொறுப்புகளில் அமர்த்துவதன் மூலம்தான் அடுத்தகட்ட வளர்ச்சியை நோக்கி

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகர முடியும் என்கிற உண்மையை காலதாமதமாக இப்போதாவது உணர முற்பட்டிருப்பது பாராட்டுக்குரியது.

இரண்டாவது முறையாக பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டிருக்கும் டி. ராஜாவின் தலைமையில், மாற்றத்துக்கும் வளர்ச்சிக்குமான முனைப்பு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியால் முன்னெடுக்கப்பட்டிருக்கிறது.

நன்றி: தினமணி தலையங்கம் அக்.20, 2024



செகுவேராதாஸ்

# இளம் போராளி மாவீரன் கர்த்தார்சிங்

கர்த்தார் சிங் பஞ்சாப் மாநிலத்தில் லூதியானா மாவட்டத்தில் சரபா என்ற கிராமத்தில் பிறந்தார்.

ஒரிசாவில் உள்ள அவரது சித்தப்பா வீட்டில் இருந்து பத்தாவது முடித்துக் கல்லூரியில் சேர்ந்தார். பின்னர் அமெரிக்காவில் வேலை பார்க்கச் சென்றார்.


1912ம் ஆண்டு ஜனவரி மாதம் சான்ஃபிரான்சிஸ்கோ துறைமுகத்தில் கப்பல் நங்கூரமிட்டது. அமெரிக்க அதிகாரிகள் மற்ற நாட்டவரைவிட இந்தியர்களைக் கடுமையாக சோதனையிட்டனர். கர்த்தார் சிங் இது பற்றி மற்றவர்களிடம் விசாரித்தபோது அவர்கள் "இந்தியர்கள் அடிமை நாட்டு குடிமக்கள் என்பதால் மோசமாக நடத்தப்படுகின்றனர்'' என்றனர். இது கர்த்தார் சிங்கை மிக கடுமையாகப் பாதித்தது.

இந்தியர்கள் வெளி நாட்டில் தொழிலாளியாகவோ ஆங்கிலேய அரசின் சாம்ராஜ்ய விஸ்தரிப்புக்குப் போராடும் இராணுவ வீரர்களாகவோ தான் இருந்தார்கள். கர்த்தார் சிங் வேலை பார்த்துக்கொண்டே அங்குள்ள கலிபோர்னிய பல்கலைக்கழகத்தில் வேதியியல் பட்டப்படிப்புக்காக சேர்ந்தார்.பின்பு பழத்தோட்டத்தில் பழம் சேகரிக்கும் வேலையும் செய்தார். அப்போதிருந்தே கர்த்தார் சிங் மற்றவர்களுடன் சேர்ந்து இந்தியா சுதந்திரம் பெறுவதற்கான முயற்சிகளைச் செய்தார்.

கதர் கட்சி உருவாக்குதல்

1913ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் நாள் சோஹன்சிங், ஹர்தயாள் ஆகியோருடன் சேர்ந்து கதர் கட்சியை உருவாக்கினார். அதன் தாரக மந்திரம்

"இந்திய சுதந்திரத்திற்காக அனைத்தையும் பணயம் வைப்போம்'' என்பதாகும். பகத்சிங்கின் மானசிக குரு 1913ஆம் ஆண்டு நவம்பர் 1 அன்று "கதர்'' என்ற செய்தித்தாள் வெளியானது. பஞ்சாபி, ஹிந்தி, உருது, பெங்காலி, குஜராத்தி, புஷ்டோ மொழிகளில் வெளியானது. ஹர்தயாள் எழுத்து வேலையும் கர்த்தார் சிங் அச்சு வேலையும் செய்தனர். உலகம் முழுவதும் உள்ள இந்தியர்களுக்கு அனுப்பப்பட்டது. குறைந்த காலத்தில் இது எல்லோருடைய ஆதரவையும் பெற்றது.



கர்த்தார் சிங்கின் வீரம் பகத் சிங்கைக் கவர்ந்தது. அவர் கர்த்தார் சிங்கைத் தனது குருவாக ஏற்றார்.

முதலாம் உலகப்போர் ஆரம்பித்த உடன் கதர் கட்சி இந்திய சுதந்திரத்திற்கு இது நல்ல சந்தர்ப்பம் என்று நினைத்தது. பிரிட்டிஷ் அரசுக்கு எதிரான போர் என்று அச்சிட்டு ஆயிரக்கணக்கான பிரசுரங்கள் கிராமம், நகரம், இராணுவம் என்று எங்கெங்கும் விநியோகிக்கப்பட்டன. அதே வேலையில் கர்த்தார் சிங் கொழும்பு வழியாக இந்தியா வந்தார். அவருடன் சத்யேன்சென், விஷ்ணு கணேஷ் பிங்களே மற்றும் பலர் வந்தனர். இன்னும் 20,000 வீரர்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்தனர். கர்த்தார் சிங்கும் பிங்களேயும் ராஷ்பிஹாரிபோஸ் அவர்களை பனாரஸில் சந்தித்தனர். பஞ்சாப் ராணுவத்துடன் சேர்ந்து ஆங்கிலோய அரசை எதிர்க்கத் திட்டமிட்டிருந்தனர்

கிர்பால் சிங் என்ற போலீஸ்காரர் தனது பதவி ஆசைக்காக கதர் கட்சியின் செயல்பாடுகளை ஆங்கிலேய அரசிடம் காட்டிக் கொடுத்துவிட்டார். பெரும்பாலான கதர்கட்சியினர் கைது செய்யப்பட்டனர். கர்த்தார் சிங், ஹர்னாம் சிங், ஜகத் சிங் ஆகியோர் ஆப்கானிஸ்தானத்திற்குத் தப்பிச் செல்லும்படி கூறப்பட்டனர். தமது தோழர்கள் அனைவரும் அரசாங்கத்திடம் சிக்கிக் கொண்டிருக்கும் பொழுது தாம் மட்டும் தப்பிச் செல்ல விருப்பமில்லாமல் திரும்பிவிட்டனர். அரசிடம் மாட்டிக்கொண்டனர். வழக்கு விசாரணையின் போது அவரது திறமைகள் நீதிபதியைக் கவர்ந்தது. அவர் இரக்கத்தை எதிர்பார்க்கவில்லை. தனது செயலுக்காகப் பெருமைப்பட்டார். எனவே அவர் ஆபத்தானவராகக் கருதப்பட்டு 1915ஆம் ஆண்டு நவம்பர் 16 அன்று லாகூர் மத்திய சிறையில் தூக்கிலிடப்பட்டார். அப்போது அவருக்கு வயது 19. அவருடன் கதர்கட்சியைச் சேர்ந்த 24 பேர் தூக்கிலிடப்பட்டனர். கர்தார்சிங்கின் கவிதை தேசத்தொண்டு சிரமமானது, சொல்வது எளிது, ஒருவன் அந்தப் பாதையில் நடக்கும்போது லட்சக்கணக்கான பேராபத்துக்களைச் சந்திக்க வேண்டும்.''

இந்திய தேசத்தின் விடுதலைக்காக ஒரு துளியேனும் போராடாதவர்கள் இந்த நாட்டை ஆள்கிறார்கள். இந்திய தேசத்திற்காக போராடி மறைந்தவர்களை நினைக்க மறுக்கிறார்கள். தேசத்திற்காக உயிர் நீத்த தியாகிகளை நினைவு கூறுவோம் பாசிசத்தை வேரறுப்போம்

கர்த்தார்சிங் நினைவு தினம் நவம்பர் 16

7ம் பக்கத் தொடர்ச்சி

கேட்கிறார். "நான் உங்களைப் பார்த்து நீங்கள் தீண்டத்தகாதவர் எனச் சொன்னால் அதுவும் சத்தியத்திற்கு உடன்பாடானதல்ல'' என்கிறார் காந்தி.

நான் எப்படி தீண்டத்தகாதவர் ஆக முடியும்? வீட்டில் சமையல் செய்யப் பயன்படும் நெருப்புக்கும், சுடுகாட்டு நெருப்புக்கும் உள்ள வேறுபாடுதான் மனிதர்களிடையே இருக்கிறது என்று விடாமல் வாதம் செய்கிறார்.

நீங்கள் இன்னொரு சக மனிதனை தீண்டத்தகாதவர் என்று சொல்லும்போது நானும் உங்களைச் சொன்னால் என்ன? என்கிறார் காந்தி. உடல் அமைப்பு, சிந்தனை, குணம் உள்ளிட்ட எல்லாமே மனிதனுக்குள் வேறுபடும் என்பதால் அந்த வேறுபாடுதான் சாதியை குறிப்பிடுகிறது என்று ஆச்சாரியார் மேலும் உரையாட முனைந்தபோது, 'நீங்கள் போகலாம்.. உங்களுக்கென ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்தது' என காந்தி உரையாடலுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறார்.

காந்தியின் தனித்தன்மை வாய்ந்த தலைமைப் பண்பும், எதையும் வறட்டுத்தனமாக வாதிடும் பண்பும் இல்லாதவர். தான் சொன்ன கருத்தாக இருந்தாலும் அவரின் மனசாட்சிக்கு உறுத்தலாக இருந்தால் அதை உடனடியாக மாற்றிக் கொண்ட நிகழ்வுகளும் காந்தியின் பொதுவாழ்வுப் பயணத்தில் நிரம்பவே உள்ளது.

மதுரையில் காந்தியின் வருகையை எதிர்த்து சனாதனிகள் சிறப்பு மாநாட்டையே ஒன்றை நடத்தினர்.

பூரி சங்கராச்சாரியார். தலைமையிலும், மதுரை ராவ்சாகிப் என்.நடேசன் அய்யர் வரவேற்புக்குழு தலைவராக இருந்தும் நடைபெற்ற இந்த மாநாட்டின் தீர்மானங்கள் கடுமையான முறையில் இருந்தன.

காந்தி ஒரு சனாதனியுமல்ல, வர்ணாசிரம தர்மத்தை கடைபிடிப்பவரும் அல்ல.

அவர் போதிக்கும் அகிம்சை தத்துவத்தை அவரே பின்பற்றுவதில்லை. வேதங்களிலோ, ஆலயங்களிலோ அவருக்கு நம்பிக்கையும் கிடையாது என்று நீளும் இந்தத் தீர்மானத்தில் முக்கியமானதாக ஆலய நுழைவு எதிர்ப்பு மற்றும் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தை எதிர்த்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த மாநாட்டின் செய்திகள் எல்லாம் காந்தியின் கவனத்திற்குச் சென்ற போதும் புன்முறுவலுடன் அந்தத் தகவல்களை எதிர்கொண்டு தன்னுடைய சுற்றுப் பயணத்தை வேகப்படுத்தினார்.

காலம் காலமாக சனாதனிகள் மேற்கொண்டு வரும் பழக்க வழக்கங்கள் மற்றும் சடங்கு சம்பிரதாயங்களை கடுமையான முறையில் விமர்சித்தவர் காந்தி.

சிதம்பரம் நகருக்கு காந்தி வந்த போது முதலில் அந்த மண்ணை முழங்காலிட்டு தொட்டு வணங்கினார்.

நந்தன் என்கிற தூய சிவ பக்தன் நடந்த மண் என்பதால் எனக்கு இந்த சிதம்பரம் என்றும் பிரியமான நகரமாகும் என்று சொல்லி வணங்கி ஊருக்குள் நுழைகிறார் காந்தி

காந்தி ஊருக்குள் நுழைந்து விட்டார் என்று தெரிந்தவுடன் தீட்சிதர்கள் தில்லை நடராஜர் ஆலயத்தின் நான்கு பக்க கதவுகளையும் இழுத்து மூடுகின்றனர். அந்த நேரத்தில் வழிபட்டுக் கொண்டிருந்த பக்தர்களும் சேர்த்தே அடைக்கப் பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது

அரிஜன மக்களை எல்லாம் அணி திரட்டி காந்தி வந்து விட்டார்... ஆலயத்திற்குள் நுழையப் போகிறார் என்று கருதி தீட்சிதர்கள் இழுத்துப் பூட்டினர் என்பதும் வரலாறாகும்.

தஞ்சையைச் சேர்ந்த இரண்டு பிராமண இளைஞர்கள் உழவுத் தொழில் செய்து வந்தார்கள். "பிராமண இளைஞர்கள் ஏர் உழும் கலப்பையை தொடக் கூடாது என்பது சனாதனிகளின் கட்டுப்பாடுகளில் ஒன்று.

கும்பகோணத்தில் சங்கராச்சாரியார் வருகை தந்தபோது அந்த இரண்டு பிராமண இளைஞர்களும் சந்திக்கச் செல்கின்றனர். பிழைப்புக்காக உடலால் உழைப்பது என்ற பாவத்தை செய்கிற இந்த பிராமண இளைஞர்களின் காணிக்கை எதுவும் நான் பெறுவதற்கில்லை'' என்று சங்கராச்சாரியார் மறுத்து விடுகிறார்.

ஆனாலும் இந்த இளைஞர்கள் தொடர்ந்து உழவுத் தொழிலையே மேற்கொண்டனர். ஒரு கட்டத்தில் பிராமண வகுப்பில் இருந்து இருவரும் விலக்கி வைக்கப்படுகின்றனர்.

தங்களுடைய நிலையை விளக்கி இரண்டு இளைஞர்களும் காந்திக்கு கடிதம் எழுதுகின்றனர். "கொடுமையான ஒரு சமூகத்தில் இருந்து விலக்கி வைக்கப் பெறுவதே ஒரு சிறப்புதான். அதை வரவேற்க வேண்டும். ஒரு பிராமணர் கலப்பையை தொடக் கூடாது என்று சொல்வது வர்ணாசிரம தர்மத்தையே கேலி செய்வதாகும்.



அவர்கள் நம்பும் பகவத்கீதையையும் தவறான முறையில் புரிந்து கொண்டுள்ளார்கள் என்பதையே இது காட்டுகிறது என கண்டித்து காந்தி பதில் எழுதியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

காந்தியின் சனாதன எதிர்ப்பு என்பது நாளடைவில் பிராமண ஆதிக்கத்திற்கு முடிவு கட்டிவிடும் என அச்சப்பட்ட சனாதனிகள் கடைசியில் கொடியவன் கோட்சேவின் கைத்துப்பாக்கி மூலம் முடிவுரை எழுதினர்.

காந்தி இறந்து 74 ஆண்டுகள் கடந்த பின்னரும் அவர்களின் ஆத்திரம் தீரவில்லை என்பதை கடந்த இரண்டு(2020) ஆண்டுகளுக்கு முன்னர் பாஜகவின் நாடாளுமன்ற உறுப்பினர் சாத்வி பிரக்யா தாகூர் காந்தியின் உருவப் படத்தை வைத்து துப்பாக்கியால் சுட்டு மகிழ்ந்தார் என்பதும்... காந்தி வேண்டுமானால் தியாகியாக ஏற்றுக் கொள்கிறோம்... ஆனால் நாதுராம் கோட்சே ஒரு மாபெரும் தேசபக்தர் என வாய் கூசாமல் சொன்னதும் வரலாறு ஆகும்....

ஆம் சனாதனிகளின் கோபம் இன்று வரை காந்தியை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

பிரிட்டன் சாம்ராஜ்யத்தை இந்திய மண்ணில் இருந்து விரட்டியதில் முன்னணியில் இருந்த காந்திக்கு லண்டனில் சிலை வைக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இந்தியாவிலோ சர்தார் வல்லபாய் பட்டேலுக்கு வானுயர சிலையை காந்தி பிறந்த குஜராத்தில் வைத்திருப்பதன் நோக்கமே இந்தியா காந்தி தேசமல்ல என்பதை எதிர்கால தலைமுறையினருக்கு தவறான வரலாற்றை கற்பிக்கும் முயற்சியின் ஒரு பகுதிதான் என்பதே நிதர்சனமாகும்.

தொடர்புக்கு: 94426 78721

# விலை பேசப்படும் ரயில்கள்!

# கொள்ளையில் தனியார்கள்!



**தட்சிண ரயில்வே பென்சனர் சங்கத் தலைவர் ஆர்.இளங்கோவன் நேர்காணல்:**

◆ இரயில்வேயை தனியாருக்கு கொடுத்தால் மக்களுக்கு என்ன இழப்பு? நட்டத்தில் இயங்கி வருகிறது என்பதால் தனியாருக்கு தருகிறார்களா?

லாபம் தரும் வழித்தடங்களை தனியாருக்கு தாரை வார்க்கத் திட்டமிடும் பாஜக அரசு! தனியார்மயம் என்பது சாதாரண மக்களுக்கு இனி ரயில் பயணத்தை எட்டாக்கனியாக்கிவிடும்! பாதுகாப்பை கேள்விக்குறியாக்கும்!

தாம்பரத்திலிருந்து கடற்கரை வரை செல்ல பத்து ரூபாய்தான். இதிலும் மாதாந்திர பயணச்சீட்டிற்கு 150 ரூபாய்தான். அதாவது 25% தான். பயணிகளில் 64% பேர் மாதாந்திர பயணச்சீட்டு வைத்திருப்பவர்கள். பயணிகளை அழைத்துச் செல்ல நூறு ரூபாய் செலவானால், அதில் 53 ரூபாய்தான் பயணிகளிடமிருந்து வசூலாகிறது. 47 ரூபாய் மானியம் தரப்படுகிறது. இதனால் 64,000 கோடி ரூபாய் பயணிகள் போக்குவரத்தில் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று கணக்கிட்டுள்ளார்கள்.



தமிழ்நாட்டில் பெண்கள், மாணவர்கள் பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்கிறார்கள். இதற்காக போக்குவரத்து கழகங்களுக்கு, தமிழக அரசானது நிதி வழங்கி வருகிறது. அதேபோல, ஒன்றிய அரசானது ரயில்வே துறைக்கும் இழப்பை ஈடுகட்ட நிதி வழங்க வேண்டும். உலகம் முழுவதும் பயணிகள் போக்குவரத்தில் இலாபம் இல்லை. பிரிட்டன், ஜப்பான், பிரான்ஸ் என உலகம் முழுவதும் உள்ள அரசாங்கங்கள் ரயில்வேக்கு இழப்பை ஈடுகட்ட நிதி அளிக்கின்றன.

மாணவர்களுக்கு, விவசாயிகளுக்கு, விளையாட்டு வீரர்களுக்கு, மாற்றுத்திறனாளிகளுக்கு, பத்திரிகையாளர்களுக்கு, விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு, நோயாளிகளுக்கு, விதவைகளுக்கு என 53 வகையான சலுகைகளை ரயில்வே வழங்குகிறது. இவை எல்லாம் தனியார் மயமானால் கிடைக்காது.

இந்தியாவில் பயணிகள் போக்குவரத்தினால் ஏற்படும் செலவை, சரக்கு போக்குவரத்தின் மூலமாக பெறப்படும் லாபத்தை வைத்து ஈடு (cross subsidy) கட்டுகிறார்கள். இந்தியாவில் 65% ரயில்கள் பயணிகள் போக்குவரத்துக்காகவும், 35% ரயில்கள் சரக்கு போக்குவரத்துக்காகவும் பயன்படுகின்றன. ஆனால் வருமானத்தில் பயணிகள் போக்குவரத்தில் 35% சரக்கு போக்குவரத்தில் 65% வருமானம் வருகிறது. விவேக் தேவராய் குழு, ராகேஷ் மோகன் குழு போன்றவை பயணிகளுக்கு இலவசம் தந்தால், அதனை அரசு ஈடுகட்ட வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.

◆ ரயில்வேயை தனியாருக்கு கொடுப்பதில் என்ன ஆபத்து? நீங்கள் ஏன் எதிர்க்கிறீர்கள்?

தேசிய ரயில் திட்டம் என்பதை அரசாங்கம் அறிவித்துள்ளது. அதன்படி 2031 க்குள் அனைத்து சரக்கு போக்குவரத்தையும், பயணிகள் போக்குவரத்தையும் தனியாருக்கு கொடுப்பது என்று கூறியிருக்கிறது.

'வந்தே பாரத்' என்று பெயர் சொல்லி நானூறு ரயில்களை தனியாருக்கு கொடுக்க இருக்கிறார்கள். இந்த ரயில்களில் பயண கட்டணத்தை எவ்வளவு வேண்டுமானாலும் தனியார் நிர்ணயித்துக் கொள்ளலாம். தனியார் பெறக்கூடிய வருவாயில் ரயில்வேதுறைக்கு பங்கு (Revenue sharing) தர வேண்டியது இல்லை என்று மோடி சொல்லிவிட்டார். ஆக, அரசுக்கே இது வருவாய் இழப்பு தானே!

தனியார்கள் புதிதாக இதற்காக ரயில் பெட்டிகளை வாங்க வேண்டியதில்லை. ஏற்கனவே இருக்கும் தண்டவாளம், ரயில் நிலையம் சமிக்ஞை வசதி போன்றவை ரயில்வே துறைக்கு சொந்தமானது. இதை வைத்து தனியார் கொள்ளையடிப்பதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

இரயில் தனியார்மயத்தினால் அதானி, அம்பானி, ஜி.எம்.ஆர். போன்ற கம்பெனிகள்தான் கொள்ளை அடிப்பார்கள். கோயம்புத்தூர் சீரடி, மதுரை வாரணாசி போன்ற அதிக பயணிகள் செல்லும் வழித்தடங்களில் 'பாரத் கவுரவ்' என்ற பெயரில் தனியாருக்கு ரயில் ஓட்டிக்கொள்ள அனுமதித்தார்கள். நாடு முழுவதும் பல ரயில்கள் இப்படி ஓட்டிக்கொள்ள தனியாருக்கு அனுமதித்துள்ளார்கள். இதனால் ரயில் கட்டணம் உயரும். ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் சலுகைகள் ரத்தாகும். விபத்து அதிகரிக்கும்.

ஏனென்றால், பராமரிப்பு எதையும் அவர்கள் செய்ய மாட்டார்கள். நிரந்தர வேலைவாய்ப்பு ரத்தாகும். சமூக நீதி பாதிக்கப்படும். ஏற்கனவே கண்டெயினர்ஸ் கார்ப்பரேஷன் என்ற நிறுவனம் இரயில்வேயின் பொதுத் துறையில் இருக்கிறது. இது கண்டெயினர்களை எடுத்துச் செல்லுபவை. இதனை தனியாருக்கு விற்க முயற்சிக்கிறார்கள்.

அதேபோல ஐ.ஆர்.சி.டி.சி. நிறுவனத்தினை தனியாருக்கு தர முயற்சிக்கிறார்கள். ஏற்கனவே சரக்கு பெட்டிகளை உற்பத்தி செய்யும் வேலையை அரசு தனியார்மயமாக்கி விட்டது. ரெயில் பெட்டி மற்றும் என்ஜின் தயாரிப்பு தொழிற்சாலைகளை தனியார் மயமாக்க முடிவு எடுத்துள்ளார்கள்.

◆ ரயில்வே தொழிலாளர்கள் சந்திக்கும் பிரச்சினை குறித்து ஏதும் சொல்லுகிறீர்களா?

ரயில்வேயில் 12 லட்சம் தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். இந்திய ரயில்வேயில் ஏழரை லட்சம் தொழிலாளர்கள் ஒப்பந்த தொழிலாளர்கள். இவர்களுக்கு பணிப் பாதுகாப்பு இல்லை. இப்போது மத்திய அரசு இயற்றியிருக்கிற புதிய தொழிலாளர் சட்டத்திலும் ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய எந்த ஏற்பாடும் இல்லை. இன்னும் சொல்லப்போனால் ஒப்பந்த முறையில் ஆட்களை வைத்துக் கொள்வதை புதிய சட்டம் தீவிரமாக்கியுள்ளது. ஓய்வூதியர்களுக்கு இப்போது ரயில்வே ஓய்வூதியம் வழங்கி வருகிறது. இரயில்வே தனியார்மயமானால் ஓய்வூதியம் கிடைப்பது கேள்விக்குறியதாகும். எனவேதான் அரசாங்கமே, தொலைபேசி ஊழியர்களுக்கு தருவது போல ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்று கேட்டு வருகிறோம்.

◆ தமிழ்நாட்டில் ரயில்வே துறையை மேம்படுத்த நீங்கள் கொடுக்கும் ஆலோசனை என்ன ?

நான் புதிதாக எதுவும் ஆலோசனை தர வேண்டியது இல்லை. ஏற்கனவே ஆய்வு நடத்தி, அரசாங்கம் ஒப்புக் கொண்ட திட்டங்களை நிறைவேற்றினாலே போதுமானது.

கடற்கரை மகாபலிபுரம் கடலூர் பாதை, ஈரோடு ஞ பழனி பாதை, மொரப்பூர் தருமபுரி பாதை, கூடுவாஞ்சேரி இருங்காட்டுக்கோட்டை பாதை, அருப்புக்கோட்டை – மதுரை பாதை, அத்திப்பட்டு புத்தூர்; திண்டிவனம் செஞ்சி திருவண்ணாமலை போன்ற ஏற்கனவே ஒப்புக் கொண்ட பத்து திட்டங்களுக்கு அரசாங்கம், வெறும் ஆயிரம் ரூபாய் மட்டுமே வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதிக்கீடு செய்துள்ளது. ஆம்,வெறும் ஆயிரம் ரூபாய்!

இரட்டைப்பாதை திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும். இப்போது சென்னை முதல் – மதுரை வரை மின்வசதியோடு இரட்டைப்பாதை உள்ளது. இதனை கன்னியாகுமரி வரை விரிவுபடுத்த வேண்டும். மதுரை தூத்துக்குடி, கன்னியாகுமரி திருவனந்தபுரம் பாதையில் மின்வசதியோடு கூடிய இரட்டைப்பாதை உருவானால் விரைவாகச் செல்ல முடியும். நெரிசல் குறையும். தென்தமிழக மக்கள் பலன் அடைவார்கள்.

◆ ரயில்வேத் துறையின் முதலீடுகள் பற்றி ஏதேனும் சொல்கிறீர்களா?

சரக்கு போக்குவரத்து ரயில்களின் சராசரி வேகம் சீனாவில் மணிக்கு 300 கி.மீ.; ஆனால் இந்தியாவில் 25 கி.மீ. அதே போல பயணி ரயில்களின் சராசரி வேகம் மணிக்கு சீனாவில் 400 கி.மீ. ஆனால், இந்தியாவில் 50 கி.மீ. மீட்டர்தான். நமக்கு பின்னால் விடுதலை அடைந்த சீனா, நம்மை விட 11 மடங்கு இரயில்வேக்கு முதலீடு செய்துள்ளது. ஒரு ரூபாய் முதலீடு செய்தால் அதனால் ஐந்து ரூபாய் பொருளாதார உற்பத்தி இருக்கும். ரயில் போக்குவரத்து அதிகமானால் சாலை போக்குவரத்து குறையும். ரயில் போக்குவரத்து கட்டணம், சாலைப் போக்குவரத்தை விட குறைவு. ஒரு லிட்டர் டீசல் ரயில் போக்குவரத்திற்கு செலவாகிறது என்றால், சாலை போக்குவரத்திற்கு ஐந்து லிட்டர் டீசல் செலவாகும்.

போக்குவரத்து குறைந்தால், டீசல் எரிவது குறையும்; எனவே சுற்றுச்சூழல் மாசடைவதும் குறையும். தேசிய நலன் கருதியாவது, ஒன்றிய அரசு இரயில்வே திட்டங்களுக்கு முதலீடு செய்ய வேண்டும். விடுதலை அடைந்தபோது ஒட்டுமொத்த போக்குவரத்தில் இரயில்வேயின் பங்கு 84%. இப்போது 28% தான் உள்ளது. அப்போது 79 % பயணிகள் ரயில் போக்குவரத்தை பயன்படுத்தினர். ஆனால் இப்போது 12% பேர்தான் ரயிலைப் பயன்படுத்துகின்றனர். எனவே. சீனாவைப் போல மத்திய அரசு ரயில்வேயில் கூடுதல் முதலீடு செய்ய வேண்டும்

◆ புல்லட் ரயில் போடுவதாக சொல்கிறார்களே அது பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?

மும்பைக்கும், அகமதாபாத்துக்கும் புல்லட் ரயில் விட ஒரு லட்சம் கோடி செலவாகும். இதற்கு கடன் தர ஜப்பான் தயாராக உள்ளது. அதற்கு நிலத்தை கையகப்படுத்துவதை எதிர்த்து மகாராஷ்டிரா விவசாயிகள் போராடி வருகிறார்கள்.

ஒரு ஆண்டிற்கு சராசரியாக 4, 500 கி.மீ. நீளமுள்ள தண்டவாளங்கள் பழுதடைகின்றன. 200 இரயில் நிலையங்களில் உள்ள சமிக்ஞைகள் பழுதாகின்றன. இவைகளை புத்தாக்கம் செய்வதற்கு ரயில்வே தயங்குகிறது. 11 ஆயிரம் கி.மீ. தண்டவாளங்களை புதுப்பிக்க(arrears) வேண்டி இருக்கிறது. இதற்கு ஒரு லட்சத்து 14 ஆயிரம் கோடி ரூபாய் தேவை. புல்லட் ரயிலுக்கு ஆகும் செலவை இதற்கு செலவழிக்கலாம். பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும்.

◆ உங்கள் அனுபவத்தில் எந்த மாநிலத்தில் ரயில்வே நன்றாக இருக்கிறது?

இந்தியாவின் தொழில் தலைநகரம் மும்பை. எனவே மகாராஷ்டிரா, குஜராத் மாநிலங்கள் உள்ள சென்ட்ரல் ரயில்வே நன்றாக இருக்கிறது. வடகிழக்கு மாநிலங்களில் ரயில்வே திட்டங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. திரிபுரா, அசாம், மணிப்பூர், போன்ற எல்லைப்புற மாநிலங்கள் கவனிக்கப்பட வேண்டும். காங்கிரஸ் அரசாக இருந்தாலும், பாஜக அரசாக இருந்தாலும் வளர்ச்சித் திட்டங்களுக்கும் செலவழிப்பதில்லை; பாதுகாப்பிற்கும் செலவழிப்பதில்லை.

நேர்காணல்; பீட்டர் துரைராஜ்

பழங்குடி மக்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி

# டிசம்பர் 5ல் தமிழகம் தழுவிய ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் மாநில குழு கூட்டம் தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லில் "ரம்பா" திருமண மண்டபத்தில் ஜா.பூபாலன் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் மாநில செயலாளர் ப.பரமசிவம் கடந்த மாநில குழு கூட்டத்திற்கும் இன்றைய கூட்டத்திற்கும் இடையே நடைப்பெற்ற வேலைகளை அறிக்கையாக முன் வைத்தார்.

அதனை தொடர்ந்து என்.வெங்கடாசலம், கணேசன் கிருஷ்ணகிரி, கடம்பூர் ராமசாமி ஈரோடு, கரந்தன் தேனி, சிவகாமி விருதுநகர், ஜி.ஜெகதீசன் காஞ்சீபுரம், கோவிந்தன் விழுப்புரம், அண்ணாதுரை, சுப்ரமணி தருமபுரி, கிருஷ்ண மூர்த்தி திருவண்ணாமலை, செல்வராஜ் சேலம் ஆகியோர் தங்களின் மாவட்டங்களில் நடைப்பெற்ற இயக்க பணிகளை அறிக்கையாக மொழிந்தனர். தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் சிறப்பு தலைவர் ந.நஞ்சப்பன் எக்ஸ்.எம்.எல்.ஏ. எதிர்கால வேலை திட்டத்தை முன் மொழிந்து சிறப்புரையாற்றினார்.

எதிர்வரும் மார்ச் மாதத்தில் செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் மாநில மாநாட்டை நடத்துவது என்றும், 50000 ம் உறுப்பினர்களை சங்கத்தில் சேர்ப்பது என்றும், ஒடுக்கப்பட்ட பழங்குடி மக்களின் போர்வாள் "குறிஞ்சிக்குரல்"காலாண்டு இதழை ஜனவரி மாதத்தில் இருந்து வெளியிடுவது என்றும், பழங்குடி மக்களிடையே பணியாற்றும் ஊழியர்களுக்கு பயிற்சி முகாம் நடத்துவது என்றும், டிசம்பர் 5 அன்று பழங்குடி மக்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் தழுவிய பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது. இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தருமபுரி மாவட்ட செயலாளர், கலைசெல்வன்வாழ்த்துரை வழங்கி நிகழ்ச்சியை நிறைவு செய்தார்.

# ஊராட்சி நிர்வாகத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம்

தாமிரபரணி தண்ணீர் விநியோகம் செய்ய வேண்டும், பெண்களுக்கு கழிவறை திறக்க வேண்டும், தூய்மை பணியாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் என வலியுறுத்தி, தென்காசி மாவட்டம், தேவிப்பட்டணம் ஊராட்சி நிர்வாகத்தை கண்டித்தும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஏசையா தலைமை தாங்கினார். மாடசாமி, அந்தோணிசாமி முன்னிலை வகித்தனர். சி.பி.ஐ. மாவட்ட செயலாளர் தி.இசக்கித்துரை சிறப்புரையாற்றினார். நகர செயலாளர் பாலசுப்பிரமணியன், வாசு ஒன்றிய செயலாளர் ப.வேலு, மாவட்டக் குழு உறுப்பினர் சிங்காரவேலு, நகர துணைச் செயலாளர் கா.குருவு ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருவெறும்பூர் கந்தசாமி மறைவு



திருச்சி புறநகர் மாவட்டம், திருவெறும்பூர் பிரியங்கா நகரில் வசித்து வந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவரும், ரயில்வே தொழிற் சங்கத்தின் முன்னாள் தலைவருமான 102 வயது நிரம்பிய தோழர் கந்தசாமி உடல் நலக் குறைவால் மறைந்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முன்னாள் மாநில முன்னாள் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் தா.இந்திரஜித், முன்னாள் மாநிலக்குழு உறுப்பினர் எஸ்.செல்வராஜ், புறநகர் மாவட்ட செயலாளர் ராஜ்குமார், புறநகர் மாவட்ட பொருளாளர் பக்கிரிசாமி மற்றும் திருவெறும்பூர் தாலுகா உறுப்பினர்கள் செங்கொடி அணிவித்து வீரவணக்கம் செலுத்தினர்.

# பி.லிங்கம் எக்ஸ் எம்.பி. மைத்துனர் மகாலிங்கம் மறைவு

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ். எம்.பி. மைத்துனர் சு.மகாலிங்கம் வயது மூப்பின் காரணமாக காலமானார். இவரது மகளைத்தான் பி.லிங்கம் மணந்துள்ளார். தகவலறிந்து சிபிஐ தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, தலைவாழி மாவட்ட செயலாளர் எஸ்.பழனிக்குமார், சிபிஐ மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், இடைகமிட்டி செயலாளர்கள் கோவிந்தன், கணேசமூர்த்தி, சுவாமிநாதன், சக்கணன், பலவேசம் தவிச சவுந்திரபாண்டியன், மாதர்சங்க மாரீஸ்வரி, தலைவாழி முருகேசன், விருதுநகர் நகர செயலாளர் முத்துக்குமார் உள்ளிட்டோர் நேரில் சென்று மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

# எல்.இராஜேஸ்வரி மறைவு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடசென்னை மாவட்டம், 37வது வட்ட துணை செயலாளர் ஜி.வெங்கடேசன் அவர்களின் மாமியார் எல்.இராஜேஸ்வரி (வயது 53) அவர்களின் மறைவுக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வடசென்னை மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேசன் மற்றும் ஏஐடியூசி வடசென்னை மாவட்ட தலைவர் எம்.எஸ்.மூர்த்தி, சிபிஐ மாவட்டக்குழு உறுப்பினர் ஜி.சுப்ரமணி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பெரம்பூர் பகுதி செயலாளர் கோட்டி சுரேஷ், இந்திய தேசிய மாதர் சம்மேளனம் மாவட்ட செயலாளர் டி.செண்பகம், வட்ட செயலாளர்கள் எஸ். நாகராஜன், பி. பாபுராவ், சிபிஐ தொகுதிக்குழு உறுப்பினர் எம்.எஸ்.தில்குமார், எஸ்.ஜெகதீஷ் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# காவல் துறையையும், சுகாதாரத் துறையையும் கண்டித்து ஆர்ப்பாட்டம்

சீர்காழி அருகே எருக்கூரில் இயற்கை மருத்துவ முறையில் வீட்டில் சுகப்பிரசவமாக குழந்தை பெற்றெடுத்த தம்பதிகள் மீதும், இயற்கை விவசாயி மீதும், போடப்பட்ட பொய் வழக்கை திரும்பப் பெறக் கோரி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பழைய பேருந்து நிலையம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதனிடையே குழந்தை பெற்றெடுத்த தம்பதிகள் ஜான்கிரிஸ்டோபர், பெலிசியா, மற்றும் இயற்கை விவசாயி நலம் சுதாகர், ஆகியோர் தங்களை பணி செய்ய விடாமல் தடுத்து, கொலை மிரட்டல் விடுத்ததாக சுகாதாரத்துறையினர் அளித்த புகாரின் பேரில் கொள்ளிடம் போலீசார் மூவர் மீதும் வழக்கு பதிவு செய்தனர். இதனால் அதிர்ச்சி அடைந்த தம்பதியினர் இதனை தொடர்ந்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றிய செயலாளர் வே.நீதிசோழன், ஜெய்சக்தி வேல் தலைமையில் பெ.வீரராஜ் கே.எஸ்.சிவராமன் ஆகியோர் முன்னிலையில், வழக்கறிஞர் எஸ்.சுந்தரைய்யா, சிபிஐ மாவட்ட செயலாளர் அ.சீனிவாசன் கண்டன உரை ஆற்றினர்.

# பயிர் காப்பீட்டு வழங்காததால் திருவோடு ஏந்தி நாமம் போட்டு போராட்டம்

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி, கொள்ளிடம் ஆகிய இரு ஒன்றியமும் சேர்ந்து புதிய பேருந்து நிலையம் அருகில், திருவோடு ஏந்தி நாமம் போட்டு நூதன போராட்டம் சி. கலியமூர்த்தி, கே.கலியபெருமாள் தலைமையில் கே.கஜேந்திரன், கே.வரதராஜன் முன்னிலையில் சீர்காழி கட்சி ஒன்றிய செயலாளர் நீதி சோழன், கொள்ளிடம் ஒன்றிய செயலாளர் ஜெய் சக்திவேல், பெ.வீரராஜ் விவசாய சங்க மாவட்ட செயலாளர், கே.எஸ். சிவராமன் வி. ச.மாவட்ட துணை செயலாளர், சிபிஐ மாவட்ட செயலாளர் அ.சீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர்.

# சாதிய தீண்டாமை கொடுமையை கண்டித்து ஆர்ப்பாட்டம்




மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே உள்ள திருவள்ளுவர் சிலை முன்பு, தென்காசி மாவட்டம் அரியநாயகிபுரம் இந்து நாடார் பள்ளியில் நிலவும் சாதிய தீண்டாமை கொடுமையை கண்டித்தும், அருந்ததியர் மாணவர் சீனுவுக்கு நீதி கோரியும், தலித் விடுதலை இயக்கம் பொதுச் செயலாளர் விடுதலைவீரன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை புறநகர் மாவட்ட குழு உறுப்பினர் பூமிநாதன் சாதிய தீண்டாமை கொடுமைகள் குறித்து விளக்கிப் பேசினார். இதில் பல்வேறு அமைப்புகளின் தலைவர்கள், நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# மகாகவி பாரதி இலக்கியப் படைப்புகள் கருத்தரங்கம்

இராமநாதபுரம் மாவட்டம் முத்துப் பேட்டை கௌசானல் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ் உயராய்வு மையமும் , இராமநாதபுரம் மாவட்டம் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றமும் இணைந்து, கல்லூரி பொது அரங்கில், "மகாகவி பாரதி இலக்கியப் படைப்புகள் ஒரு நாள் தேசியக் கருத்தரங்கம்" மிகச் சிறப்பாக நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் முனைவர் கு.ஹேமலதா தலைமை ஏற்றார். கல்லூரியின் தமிழ் உயராய்வு மைய துறைத் தலைவர் முனைவர் மு.இராஜலெட்சுமி வரவேற்புரை நிகழ்த்தினார். தமிழ்நாடு கலை இலக்கியப்பெருமன்றம் இராமநாதபுரம் மாவட்ட தலைவர் சு.சௌந்திரபாண்டியன், மாவட்டச் செயலாளர் ந.சேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கவிஞர் மாணிக்கவாசகம் கவிதை வாசித்தார்.

முதல் அமர்வு "பாரதியும் புதுமையும்" என்ற தலைப்பில் , திருவாடானை அரசுக்கல்லூரி, தமிழ் உயராய்வு மையத் தலைவர் முனைவர் மு.பழனியப்பன் சிறந்தொரு ஆய்வுரை நிகழ்த்தினார். அமர்வு அறிமுக உரையை உதவிப் பேராசிரியர் கு.கோபிநாத் நிகழ்த்தினார்.

இரண்டாம் அமர்வு, "பாரதியும் இந்திய தேசியமும்" என்ற தலைப்பின் கீழ் , திண்டுக்கல் காந்திகிராமம் கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின், தமிழ்த்துறை பாரதியார் ஆய்வகம் ஒருங்கிணைப்பாளர் சாகித்ய அகாடமி மொழிபெயர்ப்பு விருதாளர், பேராசிரியர் முனைவர் பா.ஆனந்தகுமார் ஆய்வுரை வழங்கினார். அமர்வின் அறிமுக உரையை உதவிப்பேராசிரியர் இ.முனியசாமி நிகழ்த்தினார். 3ஆம் அமர்வில், "பாரதி கண்ட புதியதோர் உலகு" என்ற தலைப்பில் தேவகோட்டை, ஸ்ரீசேவுகன் அண்ணாமலை கல்லூரியின் தமிழ் உயராய்வு மையம் முனைவர் கரு.முருகன் உரை நிகழ்த்தினார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்களாக உதவிப் பேராசிரியர் முனைவர் இரா.சத்தியபாமா, உதவிப்பேராசிரியர் மு.முருகேசன் ஆகியோர் இணைந்து சிறப்பாக நிகழ்ச்சிகளை தொகுத்தளித்தனர். அமர்வுக்குழுப் பொறுப்பாளர்களாக தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மு.இராஜலெட்சுமி, உதவிப் பேராசிரியர் மு.ஜான்சி, உதவிப் பேராசிரியர் முனைவர் அ.ரேவதி, கருத்தரங்கு நிகழ்ச்சித் தொகுப்பாளர்களாக உதவிப் பேராசிரியர் முனைவர் ம.செய்பத் காசிம், உதவிப் பேராசிரியர் முனைர் க.காளீஸ்பிரபு ஆகியோர் திறன்பட பணியாற்றினர்.

இறுதியில் உதவிப் பேராசிரியர் மு.முருகேசன் நன்றியுரை நவின்றார். கருத்தரங்கு நிகழ்ச்சியில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற நிர்வாகிகள் பெ.ராமசாமி, கு.ராஜேந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

# கட்டட தொழிலாளர் சங்க மாவட்ட மாநாடுகள்



**திருவள்ளூர்:** திருவள்ளூர் மாவட்ட ஏஐடியுசி கட்டுமான சங்க 8வது மாவட்ட மாநாடு நடைபெற்றது. மூத்த தோழர் டி.ஆறுமுகம் கொடி ஏற்றி வைத்தார். கூட்ட தலைவராக ஏ.டில்லி தேர்வு செய்யப்பட்டார். வெங்கடேச பெருமாள் அனைவரையும் வரவேற்று பேசினார். ஜி.ஹரி அஞ்சலி தீர்மானம் வாசித்தார். உலக தொழிலாளர் சங்க சம்மேளன துணை பொதுச் செயலாளர் சி. ஸ்ரீகுமார் மாநாட்டை துவக்கி வைத்து பேசினார்.

எஸ்.மயில்வாகனன் செயலாளர் அறிக்கையை வாசித்தார். சக்கரவர்த்தி வரவு செலவு கணக்கை சமர்ப்பித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் கே. கஜேந்திரன், நெய்தல் வாயல் ஊராட்சி மன்றத்தலைவர் ஜி.பாலன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாநில செயலாளர் சேலம் முனுசாமி நிறைவுரை ஆற்றினார். இறுதியாக புதிய நிர்வாகிகளாக ஏ.டில்லி தலைவராகவும், எம். பார்த்திபன் செயலாளராகவும், டி.ஆறுமுகம் பொருளாளராகவும், 9 பேர் கொண்ட நிர்வாகக்குழுவும், கிளையின் தலைவர், செயலர், மாவட்ட குழு உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டனர்.

**மதுரை:** மதுரையில் தமிழ்நாடு ஏஐடியூசி கட்டட தொழிலாளர் சங்கத்தின் மதுரை மாவட்ட குழு கூட்டம் நடைபெற்றது.

மாநில தலைமைக்குழு தோழர்கள் கோவை செல்வராஜ், எட்டையபுரம் சேது ஆகியோர் கலந்து கொண்டனர். மதுரை மாவட்ட கட்டட தொழிலாளர் சங்கத்தின் தலைவராக டி.பாலமுருகன் என்ற அலெக்ஸ், துணைத்தலைவர்களாக எஸ்.ஆண்டி, கே.பூமாதேவி, மாவட்ட பொதுச்செயலாளராக மா.இருளாண்டி, மாவட்ட துணை செயலாளர்களாக பி.நாராயணன், எஸ்.சக்திவேல், ஆர்.மணிமேகலை, பொருளாளராக க.சின்னச்சாமி உட்பட 21பேர் கொண்ட புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### பெருந்துறை சிப்காட் அருகே,

# தனியார் சரக்கு முனையம் அமைக்க விவசாயிகள், பொதுமக்கள் எதிர்ப்பு



ரயில்வே துறையின் கதி சக்தி மாடல் கார்கோ டெர்மினல் திட்டத்தின் கீழ், ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், ஈங்கூர், விஜயமங்கலம் ரயில் நிலையங்களுக்கு இடையே பெருந்துறை சிப்காட் மற்றும் துலுக்கம்பாளையம் கிராமம் அருகே தனியார் சரக்கு முனையம் அமைக்க லீகசி வேர்ஹவுஸ் அண்ட் லாஜிஸ்டிக்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற தனியார் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த சரக்கு டெர்மினலில் நிலக்கரி உள்ளிட்ட பல வகையான பொருட்கள் இறக்கி, ஏற்றப்படும்; இருப்பு வைக்கப்படும் எனத் தெரிகிறது. இதற்காக பனியன்பள்ளி மற்றும் வாய்பாடி ஊராட்சியில் 12.38.18 ஹெக்டேர் (சுமார் 30.50 ஏக்கர்) பரப்பளவுள்ள நிலத்தை விவசாயிகளிடம் இருந்து 1997 ஆம் ஆண்டின் தொழி லியல் நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் கீழ் நிலமெடுப்பு செய்ய அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கி உத்தரவிட்டுள்ளது.

ஏழை, சிறு, நடுத்தர விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்; விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பையே வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள்.

ஆகவே, இப்பகுதியில் தனியார் சரக்கு டெர்மினல் அமைக்கும் திட்டத்தை கைவிட வேண்டும். இத்திட்டத்திற்காக விவசாயிகளிடம் இருந்து நிலமெடுப்பு செய்வதைக் கைவிட வேண்டும் என வலியுறுத்தி கடந்த 27.06.2022 அன்று பொது மக்கள் சார்பில் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

வருவாய் துறையினர் விவசாயிகள் நிலத்தில் அத்துமீறி நுழைந்து நில அளவீடு செய்வதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து, பனியன்பள்ளி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் பி.சிவகுமார், சென்னிமலை ஊராட்சி ஒன்றிய முன்னாள் கவுன்சிலர்கள் ஓ.சி.சண்முகம், எஸ்.பொன்னுசாமி, பெருந்துறை சிப்காட்டால் பாதிக்கப்பட்ட மக்கள் நலச் சங்க ஒருங்கிணைப்பாளர் எஸ்.சின்னசாமி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் முகிலன் உள்ளிட்ட 150க்கும் மேற்பட்ட பொதுமக்கள் திரண்டு கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

தனியார் நிறுவனத்திற்காக தங்களது வாழ்வாதாரமான நிலங்களை கொடுக்க மாட்டோம் என்றும், ஆகவே எங்களது நிலத்தில் அத்துமீறி நில அளவீடு செய்யக் கூடாது என எதிர்ப்பு தெரிவித்தனர்.

### விடுதலைப் போராட்ட வரலாற்று ஆய்வு மையத்திற்கு

# நூல்கள், ஆவணங்கள் கொடுத்து உதவுக!

## மக்கள் சிந்தனைப் பேரவை கோரிக்கை

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழ்நாட்டின் பங்கை முழுமையாக வெளிக்கொண்டுவர கடந்த கால் நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக பலவித தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

இந்தத் திசை வழியிலான எமது தொடர்ந்த ஆய்வு பயணத்தின் விளைவாக ‘ ஜீவா முழக்கம்’ சுதந்திரப் பொன்விழா மலர் (1997) , ‘தேச விடுதலையும் தியாகச் சுடர்களும் ’ (1998), ‘விடுதலை வேள்வியில் தமிழகம் ’ 2 பாகங்கள் (2001) , ‘ சுதந்திரச் சுடர்கள் ’ (2016) ஆகிய எமது நூல்களும் பல முக்கிய இதழ்களில் எமது கட்டுரைகள் பலவும் வெளிவந்துள்ளன.

‘ விடுதலை வேள்வியில் தமிழகம் ’ என்ற எமது தொகுப்பு நூலின் மூன்றாம் பாகம் விரைவில் வெளிவரவுள்ளது. ‘தினமணி ’ யில் தினசரி வெளியான ‘ தமிழக தியாக தீபங்கள் ’ என்ற தலைப்பிலான எமது தொடர் கட்டுரைகளும் நூல் வடிவம் பெறவுள்ளது.

‘விடுதலைப் போராட்ட வரலாற்று ஆய்வு மையம்’ ஏற்படுத்த பேரவை சார்பில் 2004 இல் தீர்மானிக்கப்பட்டது. 11.12.2004 ஆம் தேதி நடைபெற்ற பாரதி விழாவில் இதற்கான கல்வெட்டு அடையாளப்பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்திய சுதந்திரத்தின் 75 ஆம் ஆண்டை முன்னிட்டு இவ்வாண்டின் சிறப்புத் திட்டமாக இவ்வரலாற்று ஆய்வு மையத்தை முழுமைப்படுத்திட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்திய விடுதலைப் போராட்டத்தின் தமிழகப் பங்களிப்பை வெளிப்படுத்தும் வகையில் தமிழக விடுதலைப் போராட்ட வீரர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள் , தமிழ் மண்ணில் நிகழ்ந்த விடுதலைப் போராட்ட இயக்கங்களைப் பற்றிய நூல்கள் , இவை பற்றியான வி.ஜீலீவீழ் ஜீலீ.ஞ்ி ஆய்வேடுகள் , சிறப்பு மலர்கள் , ஆவணங்கள் , கட்டுரைகள் , புகைப்படங்கள் , பதிவுகள் என எது இருந்தாலும் இம்முயற்சிக்கு ஒத்துழைக்கும் வகையில் பேரவைக்குக் கொடுத்துதவ வேண்டுகிறோம்.

தொடர்பு முகவரி : மக்கள் சிந்தனைப் பேரவை , கி 47 , சம்பத் நகர் ,

ஈரோடு: 638 011 , தொலைபேசி : 0424 2269186,

மின்னஞ்சல் : info@mak-kalsinthanaiperavai.org

# தோழர் சேட்டு மறைவு



கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் மாநகரில் உள்ள சாணசந்திரம் பகுதியை சேர்ந்த இந்தியகம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரும் செம்படை தோழருமான சேட்டு என்பவர் காலமானார். ஓசூர் மாநகர இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

## இந்த வார தம்பிக்குறள்

### 93. இறப்புக்கு இன்றே குறிவை

**இறப்புக்கேன் அஞ்சு கிறாய்இறப் பொன்றுஉம்**
**இல்லாத தில்லை இகத்து.**

‘இறந்து விடுவோம்’ என நாளும் எண்ணி அச்சமடைய வேண்டா பிறந்த பின் என்றாவது ஒருநாள் இறப்பு உள்ளது தானே (ஆறிலும் சாவு. நூறிலும் சாவு – பழமொழி)

**என்றைக் கிருப்பின் இறப்ப துறுதிகுறி**
**இன்றே இறப்புக்கு வை.**

என்றைக்கோ ஒருநாள், ஒவ்வொருவரும் சாவது உறுதி. ஆகவே வாழும்வரை நல்லவற்றுக்காகப் போராடி உழைக்க வேண்டும். குறிக்கோளுடன் வாழ வேண்டும். (புறப்படும் அந்த நாள் வரையில் பூமிக்குழைத்து நலம் செய்வேன் – முவை).

### போக்குவரத்துக் கழக பணிமனைகளில்

# பழமையான கட்டிடங்களை புதுப்பிக்க வேண்டும்!

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் நாகை மண்டலம் பொறையார் பணிமனையில் கடந்த 2017 ஆம் ஆண்டு அக்டோபர் 20ஆம் தேதி உறங்கிக் கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது அதிகாலையில் பழைமையான கட்டிடம் இடிந்து விழுந்ததில் ஒன்பது தொழிலாளர்கள் உடல் நசுங்கி இறந்தார்கள். இவர்களது நினைவு நாள் நிகழ்ச்சி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் தஞ்சாவூர் நகர் கிளை முன்பு நடைபெற்றது. ஏ ஐ டி யூ சி மத்திய சங்க பொருளாளர் சி.ராஜ மன்னன் தலைமை வகித்தார். சிஐடியு மத்திய சங்க பொருளாளர் எஸ்.ராமசாமி முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் ஏஐடியூசி மாவட்ட செயலாளர் ஆர்.தில்லைவனம், தலைவர் வெ.சேவையா, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக தொழிலாளர் சம்மேளன மாநில துணைத்தலைவர் துரை. மதிவாணன், ஓய்வு பெற்றோர் சங்க பொதுச் செயலாளர் பி.அப்பாத்துரை, கௌரவ தலைவர் கே.சுந்தர பாண்டியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு போக்குவரத்து கழக பணிமனைகளில் ஓய்வறை, குளியலறை, கழிவறை, அலுவலக கட்டிடங்கள் மிகவும் மோசமாக உள்ளது. இவற்றை சீரமைக்க வேண்டும், பராமரிக்க வேண்டும், புதுப்பிக்க வேண்டும். தமிழ்நாடு அரசு இதற்கு உரிய தேவையான நிதிகளை உடனடியாக வழங்க வேண்டும் என்று பொறையார் பணிமனை கட்டிட விபத்தில் பலியானவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளில் தமிழ்நாடு அரசுக்கும், போக்குவரத்துக் கழகங்களுக்கும் கோரிக்கை வைக்கப்பட்டது.

# பால் கொள்முதல் விலையை உயர்த்தக்கோரி ஆர்ப்பாட்டம்




விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம முன்பு , விருதுநகர் மாவட்டத்தின் பிரதம பால் உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில் ,பால் கொள்முதல் விலையை ஒரு லிட்டருக்கு ரூ10 உயர்த்தி வழங்க கோரி தமிழக முதல்வர் கவனத்தை ஈர்க்க கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடந்தது. மாவட்ட தலைவர் முனீஸ்வரன் ,வத்றா யிருப்பு சவுந்திரபாண்டியன் ஆகியோர் தலைமை வகித்தார்கள். சிபிஐ தேசியக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, சங்க மாவட்ட செயலாளர் பாலமுருகன் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினார்கள். ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட சிபிஐ பொருலாளர் எஸ். பழனிக்குமார், தவிதொச வரதராஜன், ஏஐடியுசி சமுத்திரம், கணேசமூர்த்தி, ஜீவா, இராமச்சந்திரன் மற்றும் பெண்கள்உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்

## ஆண்டிப்பட்டி பேரூராட்சி கோரிக்கைகளை வலியுறுத்தி எம்.எல்.ஏ.விடம் மனு

ஆண்டிபட்டி பேரூராட்சி 10 வது வார்டு கோரிக்கைகள் சம்மந்தமாக ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் ஆ.மகாராஜன் அவர்களை சந்தித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேனி மாவட்ட துணை செயலாளர் வே.பரமேஸ்வரன் மனு அளித்தார்.

உடன் ஒன்றிய செயலாளர் பா.பிச்சைமணி, நகர செயலாளர் முனீஸ்வரன், ஒன்றியக்குழு உறுப்பினர் க.பழனிச்சாமி, ஜனசக்தி பிரபாகரன் ஆகியோர் உடனிருந்தனர்.

### மணப்பாறை நகராட்சி அலுவலகம் முன்பு

# ஒப்பந்த பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்

மணப்பாறை நகராட்சி அலுவலகம் முன்பு, கோயம்புத்தூரில் நடைபெறும் ஒப்பந்தப் பணியாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவாக திருச்சி மாவட்ட உள்ளாட்சி தொழிலாளர்கள் ஏஐடியுசி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு சங்கத் துணைத் தலைவர் சுப்பிரமணியன் தலைமை வகித்தார் சங்க துணை செயலாளர் ஜனசக்தி உசேன் முன்னிலை வகித்தார். ஏ ஐ டி யு சி அமைப்புசாரா சங்க பொது செயலாளர் நல்லுசாமி, ஏஐடியுசி போக்குவரத்து கழக மாவட்ட துணைத் தலைவர் சுந்தரராஜன் கிளை செயலாளர் மாசிமலை கண்ணன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகர நிர்வாக குழு உறுப்பினர் மரியாஜ் உள்ளாட்சி தொழிலாளர் ஏஐடியுசி காளியப்பன், சாந்தி, பழனியம்மாள், வடிவேலு உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# வி.ச. கிளை அமைப்புக் கூட்டம்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கிளை அமைப்பு கூட்டம், மதுராந்தகம் ஒன்றியம் மெய்யூர் கிளையில் எஸ்.வேண்டாமிர்தம் தலைமையில் நடைபெற்றது. இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட குழு உறுப்பினர் கே.வி.சேகுவேராதாஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கிளை செயலாளர் செ.இன்பராஜ் பங்கேற்று அமைப்பு நிலைகளை எடுத்து கூறினர். கிளை தலைவராக எஸ்.வேண்டாமிர்தம், கிளை செயலாளராக அ.நிர்மலா, பொருளாளராக எஸ்.ரோவதி ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

# நூல் நயம்

## சுடர்கள் ஏற்றும் சுடர்




இருள் சூழ்ந்த வெளிகளை ஒரு சுடர் எரிந்து வெளிச்சம் தரும். ஒரு சுடர் பல சுடர்களை ஏற்றும், இதன் மூலம் அகண்ட இருள் விலகி உலகம் வெளிச்சமாகும். சமூகம் விழிப்பு பெரும். அப்படி பல சுடர்களை ஏற்றி தமிழ் அறிவு உலகம் ஒளி பெறச் செய்தவர் பேராசிரியர் நா. வானமாமலை அவர்கள். அவரது வாழ்க்கை தடம் பற்றி, சுடர்கள் ஏற்றும் சுடர் என்கிற தலைப்பில் பொன்னீலன் எழுதிய நூல் இது.

பேராசிரியர் நா.வா. அவர்கள் நாட்டுப்புறப் பாடல்களை சேகரித்து தமிழ் இலக்கியத்திற்கு மகுடம் சூட்டியவர். பேராசிரியர் நா.வா விடம் இருந்த மிகப்பெரிய பண்பு அவருடைய தலைமைப்பண்பு. தன்னை முதன்மைப் படுத்தாமல் தன்னை சுற்றி இருக்கும் இளைஞர்களை தூக்கிவிடும் பண்பு அது. ஒவ்வொருவரையும் வளர்ப்பதில் சிறப்பு கவனம் எடுக்கும் பண்பு அது.

தன்னுடைய ஆய்வுகள் மட்டும் என்ற ஒற்றை தளத்தில் அவர் செயல்பட்டிருந்தால் ஏராளமான சாதனைகளை செய்து இருப்பார். ஆனால், அவர் தனக்குள் ஒடுங்கிப் போகவில்லை. தன் திறமை,ஆற்றல், அறிவு எல்லாமே அடுத்த தலைமுறையினரை உருவாக்க வேண்டும் என்கிற ஆசையில் தன் உழைப்பையும் நேரத்தையும் அதற்காகவே செலவிட்டார். அவரால் வளர்க்கப்பட்ட மாணவர்கள் இன்று அவருடைய எல்லைகளை தாண்டிப் பல புதிய சாதனைகளை செய்து கொண்டிருக்கிறார்கள்.பேராசிரியர் உழைத்த உழைப்பின் வெளிப்பாடு தான் இவை.


தமிழகத்தில் மார்க்சிய கல்வியை நெறிப்படுத்தியவர், பல இடங்களில் பயிற்சி வகுப்புகளை நடத்தியவர். பயிற்சி அளிப்பதற்காக ஒரு மாணவரணியை உருவாக்கியவர் இவர். தன்னை மட்டும் வளர்த்துக் கொள்ளாத வாழைமரம் இவர்.தன்னை சுற்றி ஒரு ஆய்வு படையையே உருவாக்கிய அறிவு தோப்பு அவர் என நூலாசிரியர் சரியாகவே பேராசிரியர் நா. வானமாமலை அவர்களை மதிப்பீடு செய்துள்ளார்.

தான் நடத்திய 'ஆராய்ச்சி குழு'வின் மூலமாக பல ஆய்வாளர்களை உருவாக்கியவர். இவர் தேடித்தேடி சேகரித்த நாட்டார் பாடல்களின் மூலமாக. மறைந்து போன பல வரலாற்று தகவல்களை தமிழகம் அறிவதற்கு உதவியவர். இதனால்தான் இவர் தமிழக நாட்டார் வழக்காற்றிலின் தந்தை எனப் போற்றப்படுகிறார். அவரைப் பற்றிய ஒரு முழுமையான நூல் இல்லாத குறையைப் போக்குவதற்காக,எழுத்தாளர் பொன்னீலன் எழுதியுள்ள சுடர்கள் ஏற்றும் சுடர் என்னும் இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம்.

– சமரன்

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | பொன்னீலன் |
| பக்கம் | : | 180 விலை: ரூ 160 |
| வெளியீடு | : | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41–பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 98 |

## ஹைகூ 100




ஹைகூ 100 என்ற தலைப்பில் நூறு கவிதைகளை எழுதி தங்கம் மூர்த்தி இந்நூலை வெளியிட்டுள்ளார்.' குடித்த குடிநீருக்கும் கழித்த சிறுநீருக்கும் காசு ' என்று இந்த சமூக அவலத்தை பாடியுள்ளார். தவித்த வாய்க்கு ஒரு டம்ளர் தண்ணீர் கூட இப்போது விலையில்லாமல் கிடைப்பதில்லை. அனைத்தும் காசாக மாறி விட்டது. தண்ணீர் பிடிப்பதற்காக பெண்கள் படுகிற பாட்டை ' வீதியில் இறங்கி போராடத் துணிந்தனர். பெண்கள், 'தண்ணீர் லாரி' என்கின்ற கவிதையில், குடிதண்ணீருக்காக பெண்கள் ஒரு பெரும் போரையே நடத்த வேண்டி உள்ளது என்பதை குறிப்பிடுகிறார்.

'வயல்களை அழித்து கல்லூரி கட்டினார்கள், நல்ல அறுவடை' கல்வி வியாபாரம் இன்று கன ஜோராக நடப்பதை கவனப் படுத்தியுள்ளார். ஆனால், விவசாயிகள் வயிற்றுக்கும் வாய்க்கும் வழியில்லாது அல்லல்படுகிறார்கள் என்பதை மறைமுகமாக உணர்த்தியுள்ளார். 'வாசலில் நாய்கள் வாலாட்டின' உள்ளே குரைக்கும் சத்தம் ' இன்றைக்கு ஒவ்வொரு குடும்பமும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி அல்லல் பட்டுக் கொண்டிருக்கின்றன. இதனால் அந்த குடும்பத்திற்குள் ஏற்படுகிற வாய் சண்டையை குறிப்பிடுகிறார்.

ஒவ்வொரு இளைஞனும் படித்து முடித்தால் தனக்கான வேலை கிடைக்கும் என்ற கனவுகளோடு கல்லூரியை முடித்து வெளியேறுகிறார்கள். ஆனால், அவர்களுக்கு முறையான வேலைகளை இன்றைய அரசாங்கங்கள் கொடுப்பதில்லை. தான் ஆட்சிக்கு வந்தால்,ஆண்டிற்கு ஒரு கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்குவேன் என்று வாய்ச்சவடால் அடித்த மோடி ஆட்சியில். இன்றைக்கு இருக்கிற வேலைகளும் இல்லாமலேயே போய்விட்டன. இதையும் மீறி சில வேலைகள் வாய்ப்புகள் உருவானாலும் அவை எல்லாம் யாருக்கும் தெரியாமலே நிரப்பப்பட்டு விடுகின்றன. இதைத்தான் 'விளம்பரமே இல்லாமல் விற்றுப் போயின எல்லா வேலைகளும்' எண்ணுகின்ற கவிதை வரி மூலம் சாட்டையை சுழற்றி இருக்கிறார் நூலாசிரியர்.

'இரவு கூட்டுக்குள் நட்சத்திர குஞ்சுகள், இறை தேடி அலையும் நிலா' என அழகியல் கவிதையும் படைத்துள்ளார். சுருங்கக் கூறி விளங்க வைத்தல் என்கின்ற அடிப்படையில் அமைந்துள்ளன 100 ஹைகூ கவிதைகளும், இந்நூலை அனைவரும் வாங்கி ஆதரிக்க வேண்டுகிறோம்.

– இன்சுவை பாரதி

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | தங்கம் மூர்த்தி |
| பக்கம் | : | 108 விலை:80 |
| வெளியீடு | : | மேன்மை வெளியீடு, ராயப்பேட்டை, வி. எம். தெரு சென்னை4 |

வாரம் தோறும் வெளிவரும்

**ஜனசக்தி - நூல் நயம்**

புத்தக விமர்சன பகுதிக்கு அனைத்துப் பதிப்பகங்களின் புத்தகங்களும் வரவேற்கப்படுகின்றன. புத்தகங்களை அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.

தொடர்புக்கு : 8220468816

அனுப்பவேண்டிய முகவரி:
ஜனசக்தி
பாவை பிரிண்டர்ஸ் மாடி
142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேட்டை,
சென்னை - 600014

சுழலும் உலகம்

# லிஸ் ட்ரஸ் அரசாங்கத்தை வீழ்த்திய நிதி மூலதனம்

– சார்லி வின்ஸ்டான்லி
தமிழில்: அருண் அசோகன்
ஆதாரம்: ஜெகோபின் ஆன்லைன் இதழ்



கன்சர்வேடிவ் கட்சியின் ஆதரவு பெற்ற இங்கிலாந்து பிரதமர் லிஸ் ட்ரஸ் 20.10.2022 காலை தனது பதவியை ராஜினாமா செய்தார். அவரது ஆட்சியின் வீழ்ச்சி கொண்டாடத் தக்கதே ஆகும். ஆனால், சரியாகப் புரிந்துகொள்ள வேண்டியது இதுதான்: முற்போக்கான பொருளாதார செயல்திட்டத்தையும் கூட அச்சுறுத்தக்கூடிய வகையிலான நிதி மூலதனத்தின் கிளர்ச்சியால் அவரது அரசாங்கம் வீழ்த்தப்பட்டுள்ளது.

ட்ரஸ் உள்ளிட்ட கன்சர்வேடிவ் கட்சியினர், அண்மைக் காலத்தில் தங்கள் நாட்டிற்கு அளித்துள்ள பொருளாதாரத் திட்டங்களுக்கு நேர்ந்துள்ள சோகமான முடிவுகள் குறித்து யாரும் சிரிக்காமல் இருப்பது மிகவும் கடினமான காரியமாகும்.

ஏற்றுக்கொண்ட கடமைகளை நிறைவேற்ற இயலாத, இறுக்கமான, ஆற்றல்மிகு தனிப்பண்பற்ற, பொருளாதாரம் மற்றும் நிர்வாகத்தின் மீது ஆளுமையற்ற லிஸ் ட்ரஸ் இங்கிலாந்து வரலாற்றிலேயே மிகக் குறுகிய காலம் பிரதமராகப் பதவி வகித்தவர் ஆவார். தனது நிர்வாக நடவடிக்கைகள் காரணமாக இன்று தேசிய மற்றும் சர்வதேச அரங்கில் நகைப்பிற்குரியவராக வீழ்ச்சி அடைந்துள்ளார்.

கடந்த செப்டம்பர் மாதத்தில், ட்ரஸ் மற்றும் அப்போதைய Chancellor of the Exchequer (நிதித்துறைக்குப் பொறுப்பு வகிப்பவர்) குவாசி குவார்டெங் உடன் இணைந்து, பகுத்தாய்ந்து கணித்திடாது, பொருளாதார திட்டம் ஒன்றை அறிவித்தார். சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, மின்சக்தி உள்ளிட்ட அந்நாட்டின் தனியார்மயமாக்கப்பட்ட உள்கட்டமைப்புகளைத் தற்போது தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள வசதிபடைத்த வணிக குழுக்களுக்கு, பிரிட்டிஷ் அரசை ஒரு சேமிப்பு வங்கி போல் பயன்படுத்தி, பொதுமக்களின் பணத்தைக் கோடி கோடியாக, கடன் உதவியாக வழங்குவதுதான் அந்தத் திட்டத்தின் சாராம்சமாகும்.

நவீன தாராளமய பொருளாதாரத்தின் 'Trickle Down' (வசதி படைத்தோரின் செல்வ இருப்பை அதிகரிப்பதன் மூலம் ஏழைகள் மெல்லப் பயனுறுவது) கருத்தியலை அடிப்படையாகக் கொண்ட, அரசு ஊழலின் நீட்சிதான் லிஸ் ட்ரஸ் அறிவித்த அந்தப் பொருளாதாரத் திட்டம் ஆகும்.

இத்தகைய பிரிட்டிஷ் பொருளாதார மாடலின் கீழ் சில தசாப்தங்களாகத் தனியார்மயம் மற்றும் அவுட்சோர்சிங் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. வரி ஏய்ப்பு, பதுக்கல் என்று அனைத்து குற்றச்செயல்களிலும் ஈடுபட்டு, கிடைத்த செல்வ வளங்களை எல்லாம் சுருட்டிக் கொள்ளும் இத்தகைய மோசமான ஒப்பந்ததாரர்கள், தொழிலதிபர்கள் மற்றும் செல்வந்தர்களிடம், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மூலம் குவிக்கப்படும் பொதுமக்களின் பணம், ஆராய்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் முதலீடு செய்யப்படும் என்று நம்புவது கண்களை விற்றுச் சித்திரம் வாங்கும் பகுத்தறிவற்ற நிலையைத்தான் நினைவூட்டுகிறது.

இதுபோன்ற பொருளாதார கொள்கையை நடைமுறைப்படுத்துவதுடன், அவற்றுக்கு மேலும் வலு சேர்ப்பது போல், தொழிற்சங்கங்கள் மீது கொடுங்கோன்மை முறைகளைக் கட்டவிழ்த்து விடுவது, ரயில்வே உள்ளிட்ட இதர முக்கியமான பொருளாதார துறைகளில் வேலை நிறுத்த நடவடிக்கைகளைச் சட்டவிரோதமாக்குவது ஆகிய வாக்குறுதிகளையும் அள்ளி வீசியவர் லிஸ் ட்ரஸ்.

இவர் மேற்கொண்ட பொருளாதார நடவடிக்கையின் விளைவுகள் விரைவாக வெளிப்பட்டன. பணக்காரர் களுக்கு வரி குறைப்பு மற்றும் சலுகைகள் வழங்கியதன் மூலம் 43 பில்லியன் யூரோ ( 1 பில்லியன் 100 கோடி, 1 யூரோ 81.37 ரூபாய் 22.10.2022 நிலவரப்படி) அளவிற்கு ஏற்பட்ட வருவாய் இழப்பு அந் நாட்டு நாணயத்தின் மதிப்பை வீழ்த்தியது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த பேங்க் ஆப் இங்கிலாந்தின் மாபெரும் சந்தை சார் தலையீடு உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நடவடிக்கைகள் மூலம் வட்டி விகித அதிகரிப்பு எனும் பேரிடி, கடன் சுமையை எதிர்கொண்டு வரும் பெரும்பாலான உழைக்கும் வர்க்க மக்களை மிக மோசமாகப் பாதிக்க உள்ளது.

நிதிச் சந்தைகளின் இது போன்ற எண்ணற்ற நலன்கள், முடிவாக, லிஸ் ட்ரஸையும் பலிகொண்டது. அவரும் தற்போது பதவியை ராஜினாமா செய்து விட்டார். லிஸ் ட்ரஸ்ன் வீழ்ச்சியுடன், தொழிற்சங்கங்களை நசுக்குவதன் மூலம் ஊதிய உயர்வு கோரிக்கைகளையும் ஒடுக்க முனையும் அவரின் எதேச்சதிகார செயல்திட்டமும் வீழ்ச்சியடையும் என்று ஒருவர் நம்பக்கூடும். ஆனால், அவரது வீழ்ச்சி குறித்து மிகைப்பட்ட மகிழ்ச்சி அடைவது தவறாகும்.

அண்மையில், நிதித்துறைக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட ஜெரெமி ஹண்ட் நிதிச் சந்தைகளின் நம்பிக்கைக்குரிய சேவகர் ஆவார். 2012 – 2018 வரையிலான காலகட்டத்தில் கன்சர்வேடிவ் ஆதரவு பெற்ற சுகாதாரத் துறை செயலராகப் பொறுப்பு வகித்தவர். தேசிய சுகாதார சேவை (NHS) நிறுவனத்தின் வரலாற்றிலேயே மிகவும் மோசமான நிர்வாக சீர்கேடுகள் இவரது பதவிக் காலத்தில்தான் நடைபெற்றன; தனியார் சேவைகளுக்கான நிதி செலவினம் 57% அதிகரித்தது. பல்வேறு சேவைகளைத் தனியார்மயமாக்குவதற்கான முயற்சிகள் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டன.

பொதுமக்களின் நிதி குறித்தும், அதன் மீது பல கடுமையான முடிவுகளை மேற்கொள்ள இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். 43 பில்லியன் யூரோ மதிப்பிலான பட்ஜெட் பற்றாக்குறை தற்போது 70 பில்லியன் யூரோ என்ற அளவிற்கு அதிகரித்துள்ளது. 'சந்தை'களைச் சமாதானப்படுத்திட ஒரே வழி என்று கருதப்பட்டு மக்கள் நலனுக்கான ஒதுக்கீட்டில் சுமார் 40 பில்லியன் யூரோ குறைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் இலக்குகளாகப் பள்ளிகள், அவசர சேவைகள், சுகாதாரம் மற்றும் உள்கட்டமைப்புகள் பாதிப்புக்கு உள்ளாகி இருப்பதாகத் தெரிகிறது.

பழிவாங்கும் மனப்பான்மையுடன் சிக்கன(!) நடவடிக்கைகள் மீண்டும் அரங்கேற உள்ளன. லிஸ் ட்ரஸ் அரசை வெளியேற்றிய அதே எஜமானர்கள், இந்தச் சிக்கன நடவடிக்கைகளை முழுவதுமாக ஆதரிக்க இருக்கிறார்கள்.

இதுபோன்ற நடவடிக்கைகள் ஜனநாயகப் பூர்வமானதன்று; தொடங்கவிருக்கும் மின்னல் வேக சிக்கன நடவடிக்கைகள் 'பொதுமக்கள் நலன் சார்ந்த சேவைகளற்ற பிரிட்டிஷ் பொருளாதாரம்' எனும் லிஸ் ட்ரஸ்ன் இலட்சிய வேட்கையை விஞ்சி நிற்க முடியாவிட்டாலும், ஓரளவு அதற்குச் சமமானதாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

லிஸ் ட்ரஸ் மற்றும் குவார்டெங் மீது நம்பிக்கை இழந்த நிதிச் சந்தைகள், நவீன தாராளமய கொள்கை உடையவர்களைப் போலவே, நாட்டு மக்களின் நல்வாழ்வு குறித்து கிஞ்சிற்றும் அக்கறையற்றவைகளாகவே உள்ளன. நவீன தாராளமயம் என்பதே பிரிட்டனின் சித்தாந்த கட்டமைப்பாக இருந்து வருகிறது.

லிஸ் ட்ரஸ் மற்றும் குவார்டெங் ஐ வீழ்த்தியதன் மூலம், பிரிட்டன் அரசியல் அமைப்பின் (அரசியல் கட்சிகள், சித்தாந்தங்கள் மற்றும் அறிஞர்களின்) மையப் பகுதியாக இருந்து வரும் நிதி மூலதன நலன்களை மூடி மறைத்து வந்த நவீன தாராளமய பொருளியல் தத்துவத்தின் மெல்லிய திரை இப்போது விலக்கப்பட்டு விட்டது. தெளிவும், உறுதியுமற்ற நிலையில் உள்ள தொழிலாளர் கட்சித் தலைமையின் காரணமாக, சர்வதேச நிதி மூலதனமே தற்போது நாட்டை ஆட்சி செய்து வருகிறது.

கணக்கு வழக்குகளை முறைப்படுத்துவதில் மட்டுமே குறியாக இருக்கும் கணக்காளர்களால் தான் இனி பிரிட்டன் நிதி நிர்வாகம் நடத்தப்பட உள்ளது. அரசின் உள்கட்டமைப்புகள், சொத்துக்கள் மற்றும் சேவைகளில் முதலீடு செய்வதற்காகக் கடன் பெறுவது ஒன்று... லிஸ் ட்ரஸ்ன் திட்டப்படி, தனியார் நலன்களைப் பாதுகாப்பதற்காக, பொதுமக்கள் பணத்தை தனியார்களின் கஜானாவில் தீவிரமாக இட்டு நிரப்புவதற்காகக் கடன் பெறுவது மற்றொன்று... இவை இரண்டிற்கும் இடையில் பெரும் வேறுபாடுகள் எதனையும் நமது கணக்காளர்கள் காணப் போவதில்லை.

லிஸ் ட்ரஸ் மற்றும் குவார்டெங் பதவிக் காலத்தின்போது, நாட்டிற்குத் தேவையான தனித்துவமிக்க மாற்றங்கள் (மாற்றத்திற்கான தொலைநோக்கு பார்வை, சீரிய தலைமை, பெரும் முதலீடு, மக்கள்நலனுக்கான அரசாங்க நிதி ஒதுக்கீடு உள்ளிட்டவை) எவ்வாறு எதிர்க்கப்பட்டதோ, அது போலவே, சந்தைகளின் புதிய தலைவர்களும் அவற்றை மிகத் தீவிரமாக எதிர்ப்பார்கள்.

லிஸ் ட்ரஸ் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட முடிவு குறித்து வருத்தப்பட வேண்டியது இல்லை. ஆனால், அந்த வீழ்ச்சியில் நமக்கான படிப்பினைகள் உள்ளன. அவற்றைப் புறந்தள்ளுவது நமது குற்றமே ஆகும்.

தொ.மு.சி. ரகுநாதன் எழுதிய 'பாரதி: காலமும் கருத்தும்' நூலுக்காக அவருக்கு இந்திய அரசின் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது.



# பாரதி ஆய்வுகளின் பிதாமகர்

எஸ்.தோதாத்ரி

**ஆயிரத்து தொள்ளாயிரத்தி நாற்பதுகளில் ஒருநாள். அப்போது தொ.மு.சி. ரகுநாதன் 'தினமணி' பத்திரிகையில் வேலை செய்து கொண்டிருந்தார். அவரது சிறுகதைத் தொகுப்பு ஒன்று வெளியாகியிருந்தது. அத்தொகுப்பைப் படித்த எழுத்தாளர் புதுமைப்பித்தன், ரகுநாதனைக் காண வந்தார். அவரைக் கட்டித் தழுவிக் கொண்டு 'நீதான் ஐயா என்னுடைய ஆள்' என்று பாராட்டினார்.**

இந்நிகழ்ச்சி இருவரையும் இணைபிரியாத நண்பர்களாக மாற்றியது. கடைசி வரை ரகுநாதன் மீது புதுமைப்பித்தன் ஆழ்ந்த நட்பைக் கொண்டிருந்தார். ரகுநாதன் புதுமைப் பித்தனின் தீவிர ரசிகராக மாறினார். இந்த ரகுநாதனை இப்பொழுது நினைவுகூர வேண்டியது அவசியமாகிறது. காரணம், இந்த ஆண்டு அக். 20 அன்று அவர் பிறந்த நூற்றாண்டு தொடங்கியுள்ளது.

ரகுநாதன் திருநெல்வேலிக்காரர். 1923ஆம் ஆண்டு பிறந்து 2001ஆம் ஆண்டு மறைந்தார். ரகுநாதனின் குடும்பம் புலமைவாய்ந்த குடும்பம். அவரது பாட்டனார் தமிழ்ப்புலம் மிக்கவர்; தந்தையார் ஓவியர். ரகுநாதனின் தமையனார் தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் மாவட்ட ஆட்சியராகப் பணியாற்றியவர். அவர் அக்காலத்தில 'ஆனந்த விகடன்' இதழில் தென்னாட்டுக் கோயில்கள் பற்றிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். அவற்றுக்கு ஓவியர் 'சில்பி' அற்புதமாகப் படம் வரைந்திருந்தார். எனவே ரகுநாதனுக்கு இளமையிலேயே தமிழ் இலக்கியத்தின் மீதும், தமிழர் பண்பாட்டின் மீதும் ஈடுபாடு ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டது.

ரகுநாதன் நெல்லை ம.தி.தா. இந்துக் கல்லூரியில் படித்தார். இவரை ஈர்த்த பேராசிரியர் அ. சீனிவாசராகவன். ரகுநாதன் கல்லூரிப் படிப்பை முடிக்கவில்லை. காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து சிறை சென்றார். பின்னர் அவர் இடதுசாரி சிந்தனையை நோக்கி நகர்ந்தார். அதன் விளைவாக தலைமறைவாகவும் இருந்திருக்கிறார். ப. ஜீவானந்தம், கே. பாலதண்டாயுதம் ஆகியோருடன் நெருங்கிப் பழகியவர் ரகுநாதன். நெல்லையில் ரகுநாதன், பேராசிரியர் நா. வானமாமலை, தி.க. சிவசங்கரன் ஆகியோர் மிகப்பெரும் ஆளுமைகளாக இருந்தனர்.

ரகுநாதன் ஆரம்ப காலத்திலேயே பத்திரிகைகளுக்கு எழுதியுள்ளார். அவற்றில் 'முல்லை' குறிப்பிடத்தக்கது. பிறகு நெல்லையில் இருந்துகொண்டு 'சாந்தி' என்ற பத்திரிகையை நடத்தினார். அது குறுகிய காலமே வந்தது; பின் நின்றுவிட்டது. 'சாந்தி'யில்தான் எழுத்தாளர் சுந்தர ராமசாமி அறிமுகமானார்.

தொ.மு. சி. ரகுநாதன் சிறுகதைகளும் எழுதி உள்ளார். அவர் எழுதிய சிறுகதை ஒன்று பிற்காலத்தில் விவாதத்திற்குரியதாக மாறியது. அந்தக் கதையில் பொதுவுடைமை இயக்கத் தலைவர் ஒருவர், தலைமறைவாக இருந்தபொழுது ஒரு தொழிலாளியின் வீட்டில் ஒளிந்து கொண்டிருக்கிறார். அவரைத்தேடி காவல்துறையினர் வந்துவிடுகின்றனர். வீட்டு வாசலில் அந்த வீட்டுப் பெண் தன்னுடைய குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு அமர்ந்திருக்கிறாள்.

அவளுக்குத் தலைவரைக் காப்பற்ற வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அதன் விளைவாக அந்தக் குழந்தையைத் தரையில் அடித்துக் கொன்றுவிடுகிறாள். காவல்துறையினர் செய்வதறியாமல் சென்று விடுகின்றனர். இப்படியெல்லாம் நடக்குமா? என்ற விவாதம் அப்போது எழுந்தது. முதலில் இதனை நியாயப்படுத்திய ரகுநாதன், பின்னால் இது சரியல்ல என்பது போல் எழுதினார். இதுபோன்று பல அதிர்ச்சியூட்டும் கதைகளுக்குச் சொந்தக்காரர் அவர்.

ரகுநாதன், 'முதல் இரவு', 'கன்னிகா', 'புயல்' ஆகிய நாவல்களையும் எழுதியுள்ளார். இவை உளவியல் வகை நாவல்கள். தனிநபர் உணர்வை மையப்படுத்தி எழுதப்பட்டவை. ஆனால் அதன் பின் 1952இல் வெளிவந்த ரகுநாதனின் 'பஞ்சும் பசியும்' என்ற நாவல் ரகுநாதன் என்ற படைப்பாளிக்கு வேறுமுகம் உண்டு என்பதைக் காட்டியது. இந்த நாவல் எழுதிய நேரத்தில் அவர் பொதுவுடைமை இயக்கத்தில் தீவிரமாக செயல்பட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது அவருக்கு மாக்ஸிம் கார்க்கி, மாயவோவ்ஸ்கி, ஹோலக்காவ் போன்ற படைப்பாளிகளைக் கற்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

## தொ.மு.சி.



ஆலைத் தொழிலாளர்கள் போராட்டமும், விவசாயத் தொழிலாளர்கள் போராட்டமும் மிகத் தீவிரமாக நடந்து கொண்டிருந்த காலகட்டம் அது. இந்தியா விடுதலை பெற்ற பிறகு பலத்த நெருக்கடிக்கு உள்ளான தொழில்களில் ஒன்று கைத்தறி நெசவுத் தொழில். இரண்டாவது உலகப் போர், உலக பொருளாதார வீழ்ச்சி ஆகியவற்றின் காரணமாகப் பல பொருள்கள் கிடைக்காமலே போய்விட்டன. ஆனால், அவை கள்ளச்சந்தையில் கிடைத்தன.

இத்தகைய பாதிப்புக்கு உள்ளான கைத்தறி நெசவாளர்களின் பிரச்னையை மையமாகக் கொண்டுதான் ரகுநாதன் 'பஞ்சும் பசியும்' என்கிற நாவலை எழுதினார். இந்த நாவல் காமில்ஸ்வலபில் என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டு செக் நாட்டில் வெளியிடப்பட்டு அங்கு 50,000 பிரதிகள் விற்பனை ஆயிற்று.

இந்த நாவலில் தாதுலிங்கமுதலியார் என்ற பெரிய முதலாளி ஒருவரையும், கைலாச முதலியார் என்ற நடுத்தர முதலாளியையும், வடிவேலு முதலியார் என்கிற கைத்தறி உழைப்பாளியையும் ரகுநாதன் கதாபாத்திரங்களாக்கியிருந்தார். நூல் தட்டுப்பாடு காரணமாக நெசவாளிகளுக்கு வேலை இல்லாமல் போகிறது. கள்ளச்சந்தை முதலாளியான தாதுலிங்க முதலியாருக்கு இதனால் அதிக லாபம் கிட்டுகிறது.

நடுத்தர முதலாளியான கைலாச முதலியார் நிலைமையைச் சமாளிக்க முடியாமல் தற்கொலை செய்து கொள்கிறார். ஆனால் உழைக்கும் நெசவாளியான வடிவேலு முதலியார் சங்கம் ஒன்றை அமைத்து நியாயத்திற்காக மற்றவர்களோடு இணைந்துப் போராடுகிறார்.

இந்த நாவலின் களமான அம்பாசமுத்திரத்தின் தெருக்கள் வழியாக மிகப் பெரிய ஊர்வலம் செல்வதாகவும், தாமிரபரணியின் பிரவாகம் போல அந்த ஊர்வலம் பெரிதாகிக் கொண்டே செல்வதாகவும் நாவலின் இறுதியில் குறிப்பிட்டிருப்பார் ரகுநாதன்.

இது தமிழ்நாவல் வரலாற்றில் சோஷலிசயதார்த்தவாதம் என்ற போக்கினை ஆரம்பித்து வைத்தது. இந்தப் பாதையில்தான் பின்னாளில் பொன்னீலன், கு. சின்னப்ப பாரதி, டி. செல்வராஜ், சோலை சுந்தரபெருமாள், சுபாஷ்சந்திர போஸ், மேலாண்மை பொன்னுசாமி, கொ. மா. கோதண்டம் ஆகியோர் பயணித்தனர்.

ரகுநாதன் பல மொழிபெயர்ப்புகளைச் செய்துள்ளார். மாக்ஸிம் கார்க்கியின் 'தாய்', மாயவோவ்ஸ்கியின் 'லெனின் கீதாஞ்சலி' ஆகியவை இவரது மொழிபெயர்ப்புகளில் குறிப்பிடத்தக்கவை. 'சோவியத் நாடு' இதழில் பணியாற்றியுள்ளார். புதுமைப்பித்தன் வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ளார். 'திருச்சிற்றம்பலக் கவிராயர்' என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதியுள்ளார்.

1960க்குப் பிறகு, ரகுநாதன் என்ற படைப்பாளி ஆய்வாளராக மாறினார். மகாகவி பாரதியின் படைப்புகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட இவரை 'பாரதி ஆய்வுகளின் பிதாமகர்' எனலாம். 'பாரதி: காலமும் கருத்தும்', 'பாஞ்சாலி சபதம்: உட்பொருளும் மறைபொருளும்', 'பாரதியும் ஷெல்லியும்', 'கங்கையும் காவிரியும்', 'இளங்கோவடிகள் யார்?' ஆகியவை இவரின் புகழ்பெற்ற ஆய்வு நூல்களாகும். பாரதி தீவிரவாத அரசியல் இயக்கத்தைச் சார்ந்தவர் என்பதை, 'பாரதி: காலமும் கருத்தும்' நூலில் விளக்கியுள்ளார்.

தேசவிடுதலைப் போராட்டத்தின் தாக்கம் காரணமாக 'பாஞ்சாலிசபதம்' எழுதப்பட்டது என்று அவர் கூறியுள்ளார். 'ஒப்பியல் இலக்கியம்' என்ற ஓர் ஆய்வுத்துறை பல்கலைக்கழகங்களில் தோன்றுவதற்கு முன்னரே எழுதப்பட்ட நூல் இது. ஆங்கில இலக்கியம் படித்தவர்கள் கூட ஷெல்லியை ரகுநாதனைப் போல் நுணுக்கமாகக் கற்றிருப்பார்களா என்பது ஐயத்திற்குரியது. 'இளங்கோவடிகள் யார்' எனும் நூல், 'சிலப்பதிகாரம்' பற்றிய மரபுவழியான கருத்துப் படிமங்களைத் தகர்த்தெறிந்த நூலாகும்.

'சிலப்பதிகாரம் உண்மையில் வணிக வர்க்கத்தினருக்கும், அரச வர்க்கத்தினருக்கும் ஏற்பட்ட மோதலின் விளைவான கதை ஆகும்; இளங்கோவடிகள் சேரன் தம்பியல்ல, வணிகர் குலத்தைச் சேர்ந்தவர்' என்றெல்லாம் குறிப்பிடும் ரகுநாதன், ஏராளமான ஆதாரங்களையும் முன்வைத்துள்ளார். சுமார் 800 பக்கங்கள் கொண்ட இந்நூல், சிலப்பதிகாரம் பற்றி ஆய்வு செய்தவர்கள் கூட உள்ளடக்கத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்ட முன்வரவில்லை. ஆனாலும், யாராலும் புறக்கணிக்க முடியாத நூல்.

தொ.மு.சி. ரகுநாதன் எழுதிய 'பாரதி: காலமும் கருத்தும்' நூலுக்காக அவருக்கு இந்திய அரசின் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது. மேலும் அவர் சோவியத் நாட்டின் நேரு விருதையும் பெற்றுள்ளார்.

ரகுநாதன் வெறும் எழுத்தாளர் மட்டுமல்ல, களப்பணியிலும் அவர் சிறந்து விளங்கினார். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தை ஜீவானந்தம் அமைத்த காலத்தில் அவரோடு இணைந்து நின்றார். எட்டயபுரத்தில் பாரதி விழாவை நடத்துவதற்கு வழிகாட்டியாக இருந்தவர்களில் அவரும் ஒருவர்.

ஏராளமான கவியரங்கங்களிலும் பட்டிமன்றங்களிலும் அவர் பங்கேற்றிருக்கிறார். தன் இறுதிக் காலத்தில் திருவள்ளுவர் பற்றி ஒரு நூல் எழுதத் திட்டமிட்டிருந்தார். ஆனால், அது நிறைவேறாமல் போயிற்று. அவர் பயன்படுத்திய நூல்கள், அவருடைய கையெழுத்து பிரதிகள் ஆகியவை இன்றும் எட்டயபுரத்தில் உள்ள ரகுநாதன் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

மெலிந்த உருவம்; சற்றே கறுத்த நிறம்; தூய வெள்ளை வேட்டி; வெள்ளை நிற ஜிப்பா; கறுப்புக் கண்ணாடி இதுதான் தொ.மு.சி. ரகுநாதன். இத்தோற்றத்தை என்னால் என்றுமே மறக்க முடியாது.

நன்றி: தினமணி, அக். 23, 2022

**ஜனசக்திக்கு கட்டுரைகள், செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு...**

கட்டுரைகள் மிகச் சுருக்கமாக ஏ 4 சைஸ் பேப்பரில் ஒன்றரை பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

பெரும்பாலும் தற்போதைய அரசியல், பொருளாதார, சமூக நிகழ்வுகளாக இருக்க வேண்டும்.

மறைந்த தலைவர்கள் பற்றிய விபரங்கள் மற்றும் வரலாற்றுக் கட்டுரைகள் ஜனசக்தி பத்திரிகையில் அரை பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

கட்டுரைகள் மற்றும் செய்திகள் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமைக்குள் ஜனசக்திக்கு கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

செய்திகள் அனுப்புவோர் பெயருக்கு முன்னால் இருக்கும் முன்னெழுத்தை (இனிசியலை) தமிழிலேயே எழுத வேண்டும்.

janasakthieditor@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு மட்டுமே கட்டுரைகள், செய்திகள் அனுப்ப வேண்டும். வாட்ஸ் அப்பில் அனுப்பக் கூடாது.

– ஆசிரியர் குழு

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 29.10.2022 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# கோவையின் சமூக அமைதியை பாதுகாப்போம்! ஜனநாயக இயக்கங்கள் வேண்டுகோள்!



கோவை கோட்டைமேடு பகுதியில் வெடி பொருள் மற்றும் சிலிண்டர் கேஸ் வெடிப்பால் ஒரு உயிர் பலியும், வெடி விபத்தும் ஏற்பட்டுள்ளது. இது குறித்து கோவை சிபிஎம் அலுவலகத்தில் மக்களவை உறுப்பினர் பி.ஆர். நடராஜன் முன்னிலையில் ஜனநாயக இயக்கங்களின் கூட்டம் நடைபெற்றது.

இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிக்குழு உறுப்பினர் எம்.ஆறுமுகம் எக்ஸ்.எம்.எல்.ஏ., சி.பத்மநாபன் சிபிஐ (எம்) மாவட்ட செயலாளர், சி.சிவசாமி சிபிஐ மாவட்ட செயலாளர், ஜெ.ஜேம்ஸ் சிபிஐ மாவட்ட துணைச் செயலாளர், யூ.கே..சிவஞானம் சிபிஐ(எம்) மாவட்ட செயற்குழு, ச.தமிழ்செல்வன் பொதுச் செயலாளர் (காங்கிரஸ்), எம்.அனீஸ் செயலாளர் (காங்கிரஸ்), கு.ராமகிருஷ்ணன் பொதுச்செயலாளர் த.பெ.தி.க, ஜோ. இலக்கியன் விடுதலை சிறுத்தைகள் கட்சி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், 22 ம் தேதி கோவையில் நடைபெற்ற வெடிச்சம்பவம் அதிர்ச்சியையும் கவலையும் ஏற்படுத்துகிறது. தமிழக காவல்துறையின் விரைவான நடவடிக்கைகள் காரணமாக பெரும் அசம்பாவிதங்கள் தடுக்கப்பட்டிருக்கிறது.

காவல்துறை உண்மையான குற்றவாளிகளைக் கண்டறிவதற்கும், இது போன்ற சம்பவங்கள் நடக்காமல் தடுப்பதற்கும், எடுத்துவரும் நடவடிக்கைக்களுக்கு இடையூறாக பரப்பப்படும் உண்மைக்கு மாறான செய்திகளையும், தொடர் பதற்றத்தை ஏற்படுத்துமாறு சில ஊடகங்களின் செய்தி வடிவமைப்பையும் இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

குற்றம் நடத்தப்பட்ட விதம் கண்டறியப்படுவதற்கும் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதற்கும் இக்கூட்டம் எல்லா வகையிலும் ஆதரவு தருகிறது. ஆனால் அதே நேரத்தில் குற்றத்தோடு அவர்கள் சார்ந்த மதம் இணைக்கப்படுவதை இக்கூட்டம் முழுமையாக நிராகரிக்கிறது.

கோவையின் தொழிலுக்கும் வியாபாரத்திற்கும், சமூக அமைதியும், வகுப்பு நல்லிணக்கமும் இன்றியமையாதது என்பதை அனைவரும் உணர்ந்து செயலாற்ற வேண்டும், என்று கோவை மக்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது. இம்மாதிரியான சம்பவங்கள் ஒரு மதத்திற்கு எதிரானதாக பயன்படுத்தபடுவதை மக்கள் எச்சரிக்கையோடு நிராகரிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம் என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# மீனவர்கள் மீது கப்பற்படை துப்பாக்கி சூடு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

காரைக்கால் பகுதியிலிருந்து மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடி படகு மூலம் வங்கக் கடலில் மீன்பிடிக்க சென்றனர். இவர்கள் உள்புற கடலில் மீன் பிடித்துவிட்டு, கடுமையான மழை பெய்த நேரத்தில் கரை திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது, அவ்வழியாக ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த கப்பற்படையின் ஐஎன்எஸ் பங்காரம் ரோந்து கப்பல், மீன்பிடி படகு மீது நடத்திய துப்பாக்கி சூட்டில், மயிலாடுதுறையைச் சேர்ந்த மீனவர் வீரவேல் (32) படுகாயம் அடைந்து, மதுரை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தியக் கப்பற்படை கப்பலில் ரோந்து செல்லும் வீரர்களுக்கு, நாட்டின் படகுகள் அடையாளம் தெரியாமல் இருப்பது வியப்பளிக்கிறது.

மேலும் மீன்பிடி படகை நெருங்கி, அதன் நகர்வை தடுத்து, அடையாளம் கண்டு, சோதனையிடுவதற்கான முயற்சியில் ஈடுபடாமல், சந்தேகத்தின் பேரில் துப்பாக்கி சூடு நடத்தியிருப்பது கண்டிக்கதக்க செயலாகும்.

பாதுகாப்பு முகமை கடல் எல்லை ரோந்துப் பணிக்கு பொருத்தமான வழிகாட்டல் நெறிமுறைகள் உருவாக்க வேண்டும். இலங்கை கடற்படையின் தாக்குதலும், அது மீனவர்களைக் கைது செய்வதுடன் உடைமைகளைச் சேதப்படுத்துவதும் தொடரும் சூழலில், இந்தியக் கப்பற்படை சொந்த நாட்டின் குடிமகனின் உயிருக்கு ஊறு செய்திருப்பது வேதனையளிக்கிறது.

துப்பாக்கி சூடு நடத்திய கடற்படை வீரர்கள் மீது வேதாரண்யம் மரைன் காவல் நிலையத்தில் கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. எனினும், இதன் விசாரணை எந்த வித குறுக்கீடும் இல்லாது நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும்.

துப்பாக்கி சூட்டில் படுகாயம் அடைந்து மதுரை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மீனவர் குடும்பத்துக்கு ஒன்றிய அரசு ரூ 20 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும். எதிர்காலத்தில் கடலோர காவல் பணியால் மீனவர்கள் பாதுகாப்பை உறுதி செய்யும் வழிமுறைகளை உருவாக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### இந்தியக் கடற்படை மீது வழக்கு பதிவு

கோடியக்கரை ஆழ்கடலில் மீன்பிடித்த மீனவர்கள் மீது இந்திய கடற்படை விசைப்படகை நிறுத்தாமல் சென்றதாக கூறி துப்பாக்கிசூடுநடத்தியது.இதில்காயமடைந்த மீனவர் ஒருவர், ஹெலிகாப்டரில் மீட்கப்பட்டு, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

வீரவேல் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார். சி.டி., ஸ்கேன் பரிசோதனையில் வயிறு, தொடையில் தோட்டாக்கள் இருப்பது கண்டறியப்பட்டது. அறுவை சிகிச்சை நடந்தது.

அவரது உடல்நலம் குறித்து தமிழ்நாடு ஏஐடியுசி மீனவத் தொழிலாளர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் பி.சின்னதம்பி, மாநில பொருளாளர் வி.சிங்கமுத்து, மதுரை மாவட்ட சங்க செயலர் எம்.போதும் பொண்ணு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் பா.காளிதாஸ், மதுரை மாவட்ட ஏஐடியுசி பொதுச் செயலாளர் நந்தா சிங், தமிழ்நாடு ஏஐடியுசி மீனவத் தொழிலாளர் சங்கத்தின் மாநில செயலாளர் சி.செல்வம், மீனவ தொழிற்சங்க பொறுப்பாளர் ரவிவர்மா, ஏஐடியுசி மாவட்ட செயலாளர் தாமஸ், ஏஐடியுசி மாவட்ட துணைத்தலைவர் வி.குருசாமி மற்றும் மதுரை புறநகர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தோழர்கள் மதுரை இராஜாஜி மருத்துவமனையில் நேரில் சென்று கேட்டறிந்தனர்.

# ஜப்பான்: கம்யூனிஸ்ட் கட்சி மீண்டும் வெற்றி



ஜப்பானின் கியோட்டோ மாகாணத்தில் உள்ள ஓயாமாசகி நகர மேயர் தேர்தலில் ஜப்பான் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவு பெற்ற வேட்பாளர் மேகேவா ஹிகாரு வெற்றி வெற்றுள்ளார். இந்த அவையில் மொத்தம் 12 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களைத் தேர்வு செய்ய நடைபெற்ற தேர்தலில் மொத்தம் 15 வேட்பாளர்கள் களமிறங்கினர். அவர்களில் நான்கு பேர் ஜப்பான் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர்களாவர். போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் வெற்றி பெற்றிருக்கிறார்கள். முதலிரண்டு இடங்களை கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர்களே பெற்றனர். கடந்த அவையில் மேயரும், உறுப்பினர்களும் செய்த பணி மக்களின் ஆதரவைப் பெற்றுத் தந்திருப்பதாக கட்சி கூறியிருக்கிறது.

மேயருக்கான தேர்தலில் ஆளும்கட்சியின் ஆசியோடு களமிறிங்கிய வேட்பாளர் தோல்வியுற்றார். ஜப்பான் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சில எதிர்க்கட்சிகளின் ஆதரவோடு போட்டியிட்ட மேகேவா ஹிகாரு, பதிவான வாக்குகளில் 58.40 விழுக்காடு வாக்குகளைப் பெற்று மேயராகத் தேர்வாகியுள்ளார். கடந்த முறையும் இவர்தான் நகர மேயராகப் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களின் ஆதரவோடு, நர்சரிப் படிப்பில் சேர வேண்டிய வயதுள்ள குழந்தை கள் ஒருவர் கூட வீட்டில் இல்லாமல் பள்ளியில் சேர்க்கப்பட்டதைத் தங்கள் சாதனைகளில் ஒன்றாக ஹிகாரு தனது தேர்தல் பிரச்சாரத்தில் குறிப்பிட்டார். நகர மக்களே முதன்மையானவர்கள் என்ற கொள்கை யைத் தொடர்ந்து கடைப்பிடிப்பேன் என்றும் அவர் உறுதி யளித்தார்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.